ஆரம்பக்கல்வி

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 22	ஏப்பிரல் 1961	இதழ் 4

மனித சமுதாயத்தின் மாபெரும் வெற்றி

மனித சமுதாயம் மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது. விஞ்ஞான வல்லுநர்கள் இணையற்றதோர் சாதனையைச் செய்துகாட்டியிருக்கிறார்கள். தொழில் நுட்ப அறிவு எவ்வளவு அற்புதமாக வளர்ந்திருக்கிறது, என்பது ஒப்பற்ற முறையில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. சோவியத் ரஷ்யா, உலகம் முழுவதும் வியந்து போற்றும் அரும்பெருஞ் செயலை முடித்துக் காட்டியிருக்கிறது.

ஆம்! ஏப்ரல் திங்கள் 12 ஆம் நாள் புதன்கிழமையன்று நடைபெற்றிருக்கிற ஒப்பற்ற அதிசயத்தைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். அன்றைய தினம்தான் உலக வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு மனிதன், இந்த உலகத்தைத் தாண்டி, இந்த உலகத்தைப் பல மைல்

தொலைவுக்குச் சூழ்ந்துள்ள காற்று மண்டலத்தையும் தாண்டி, அதற்கு அப்பால் உள்ள புறவெளியில் வெற்றிகரமாக நுழைந்து, உலகத்தைப் பலமுறை சுற்றி, மீண்டும் இந்த உலகத்துக்கு வெற்றிப் புன்னகையோடு திரும்பி வந்திருக்கிறான். உலக வரலாற்றுச் சுவடியில் மறக்க முடியாத இடத்தைப் பெற்றுவிட்ட அந்த மாமனிதனின் பெயர், **தளபதி யூரி அலெக்சேவிச் ககாரின்** என்பது ஆகும்.

மக்கட் குலம் முழுவதையும் வியப்புக் கடலில் மூழ்கடித்து விட்ட யூரி ககாரின் என்னும் அந்த விமானப் படை தளபதியையும் சரி; அந்த ஒப்புயர்வற்ற செயலைச் செய்து காட்டியுள்ள சோவியத் ரஷ்யாவையும் சரி அந்தச் செயல் நடைமுறைப் படுத்தப்பட்ட 12—4—61 என்னும் அந்த நாளையும் சரி, எதிர்கால உலகம் மறக்கவே முடியாது.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் அஞ்சாத நெஞ்சமும் அசையாத உறுதியும் படைத்த கொலம்பஸ், அடுக்கடுக்காக நேரிட்ட ஆபத்துக்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அமெரிக்கா கண்டத்தை முதன் முறையாக் கண்டறிந்து உலகத்துக்கு அறிவித்ததை இன்னமும் பள்ளிக் கூடங்களில் பிள்ளைகள் பாடமாகப் படிப்பதைப்போல் தளபதி ககாரின் புறவெளியை வெற்றிகொண்ட முதல் மனிதன் என்கிற பெரு நிலையை அடைந்ததையும் எதிர்காலப் பள்ளிக்கூடங்கள் தங்கள் பிள்ளைகளுக்கெல்லாம் பாடமாகப் புகட்டிக் கொண்டிருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

விஞ்ஞானக் கலை, சென்ற பல நூற்றாண்டுகளில், எத்தனையோ உண்மைகளைக்கண்டு பிடித்து, என்னென்னவோ சாதனைகளைச் செய்து காட்டி, எண்ணற்ற வசதிகளையும் ஏராளமான நன்மைகளையும் மனித சமுதாயத்திற்கு அள்ளி அள்ளித் தந்திருக்கிறது. கொந்தளிக்கும் கடலை அடக்கி அதன்மீது மாபெரும் கப்பல்களை மிக எளிதில் செலுத்தவல்ல திறமையை மனிதர்கட்கு அளித்தது விஞ்ஞானக் கலைதான். அகன்று கிடக்கும் வானவெளியில் பறவைகள் மட்டுமே சிறகடித்துப் பறக்கமுடியும் என்று பன்னெடுங்காலமாக இருந்த பழைய நிலையை மாற்றியமைத்த வானூர்திகளை உருவாக்கி, மனித சாதியையும் மாண்புமிக்க முறையில் பறக்கவிட்டுக் காட்டியதும் விஞ்ஞானக் கலைதான். மலைகளிலிருந்து வேகமாக விழுகிற அருவிகளை அடக்கி, அந்த வேகத்தையே மின்சார சக்தியாக மாற்றி, அந்தச் சக்தியிலிருந்து விளக்குகளை எரியவைத்து விசிறிகளைச் சுழல வைத்து, இயந்திரங்களை ஓட்ட வைத்ததும் விஞ்ஞானம் என்னும் அந்த வியத்தகு கலைதான். புகை வண்டித் தொடர்களை ஓட்டியதும் பஸ்களை உருவாக்கியதும், அச்சுப் பொறிகளைக் கண்டறிந்ததும், வானொலி முறைகளை எடுத்தளித்ததும் விஞ்ஞானம் தான். மருத்து

வத் துறையில் தமக்கு உவமையில்லாத பல மருந்துகளையும் மருத்துவ முறைகளையும் கண்டுபிடித்து, ஒரு காலத்தில் பயங்கரமானவை என்று கருதப்பட்ட நோய்களையெல்லாம் எளிதில் கட்டுப்படுத்திக் குணப்படுத்துதற்குரிய வழி வகைகளைத் தந்திருப்பதும் விஞ்ஞானம் தான்.

இவ்வாறெல்லாம் விஞ்ஞானக் கலை சாதித்துக் காட்டியுள்ள எண்ணற்ற சாதனைகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல அமைந்திருப்பது ஏப்ரல் 12-ல் அது செய்து காட்டியுள்ள அருஞ்செயல். அந்த அரும்பெருஞ் செயல், விஞ்ஞானக் கலைக்கு மட்டுமல்ல, சோவியத் ரஷ்யாவுக்கும் பெருஞ் சிறப்பை அளிக்கவல்லதாகும். ஏனென்றால் சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தான் அந்த வரலாற்றுப் புகழ்மிக்க செயலைச் செய்து காட்டியிருப்பவர்கள்.

இந்தச் செயலை முதலில் செய்துகாட்டிய பெருமையும் புகழும் தம் நாட்டிற்கே கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சென்ற சில ஆண்டுகளாக சோவியத் ரஷ்யாவின் அரசாங்கமும் அமெரிக்க நாட்டின் அரசாங்கமும் பெருமுயற்சி செய்து வந்தன. அந்த முயற்சியில் இப்போது சோவியத் ரஷ்யா வெற்றி பெற்றுவிட்டது. வெற்றி பெற்ற இரஷ்யாவையும், இரஷ்ய விஞ்ஞானிகளையும் அமெரிக்காவும் அமெரிக்க விஞ்ஞானிகளும், முழு மகிழ்ச்சியோடு பாராட்டியிருக்கின்றனர். அதுபோலவே பிறபல நாட்டுத் தலைவர்களும் முதலமைச்சர்களும் அறிவியல் அறிஞர்களும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

தளபதி ககாரின் சென்ற வான்வெளிக்கப்பல், 89 நிமிடங்கள் 6 விநாடிகளுக்கு ஒருமுறை உலகத்தைச் சுற்றியிருக்கிறது. இது அப்படிச் சுற்றியபோது உலகத்திலிருந்து 109 மைல் உயரத்திலிருந்து 187 மைல் உயரம் வரை அது சென்றிருக்கிறது. அந்தக் கப்பலில் சுற்றுப் பயணம் செய்துகொண்டே தளபதி ககாரின் சோவியத் ரஷ்யாவில் உள்ள புறவெளி ஆராய்ச்சி நிலையங்களோடு தொடர்பு கொள்ளவும், செய்திகளை அனுப்பவும், ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து அனுப்பப்படுகிற செய்திகளைப் பெற்றுக் கொள்ளவும் தேவைப்படுகின்ற எல்லாக் கருவிகளும் அமைப்புக்களும் அந்தக் கப்பலில் பொருத்தப் பட்டிருந்தன. எல்லாச் செய்திகளும் ரேடியோ அலைகள் மூலமாகவே செலுத்தப்பட்டன; பெறப்பட்டன.

காலை 6—22 மணிக்கு, ககாரின், வான்வெளிக் கப்பலிலிருந்து, "எல்லாக் கருவிகளும் சரியாக வேலைசெய்து கொண்டிருக்கின்றன. நான் மிக நன்றாக இருக்கிறேன். தற்போது தென் அமெரிக்காவின்

மீது கப்பல் பறந்துகொண்டிருக்கிறது" என்னும் செய்தியை அனுப்பினார். மீண்டும் காலை 10—15 மணிக்கு அவர் அனுப்பிய செய்தியில், "என் உடலுக்கு எடை என்பதே இங்கு இல்லாமல் போய்விட்டது. ஆனால் எடையற்ற இந் நிலையில் நான் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. திட்டம் இட்டிருந்தபடியே பயணம் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது." என்று குறிப்பிட்டிருந்தார். உலகத்துக்குத் திரும்பிவிடும்படி சோவியத் புறவெளி ஆராய்ச்சி நிலையததிலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் கப்பலைத் திசை திருப்பி, வேகத்தைக் குறைத்து, சோவியத் ரஷ்யாவில் பெயர் அறிவிக்கப்படாத ஓர் இடத்தில் இறங்கியிருக்கிறார்.

நிலவுலகத்திற்குத் திரும்பிய பிறகு பத்திரிகைச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், ககாரின், "வான்வெளிக்கப்பல் காற்று மண்டலத்தைத் தாண்டிப் புறவெளிக்குச் சென்ற பிறகு பூமியின் ஈர்ப்பு ஆற்றல் செயலற்றுப் போய்விட்டதால் நான் எடை அற்ற நிலையைப் பெற்றுவிட்டேன். அதுவரை நாற்காலியில் அமர்ந்திருந்த நான் மேலே எழும்பிக் கப்பலின் மையத்தில் தொங்குகிற நிலையைப் பெற்றேன். ஆனால் அந்த நிலையில் இருந்துகொண்டே நான் கருவிகளைப் பார்த்துக் குறிப்பெடுப்பது, உணவை அருந்துவது, பானங்களைப் பருகுவது முதலிய எல்லாச் செயல்களையும் எளிதில் நிறைவேற்ற முடிந்தது. ஆனால் ஒன்று. நான் குறிப்புக்களை எழுதும்போது எழுதுகின்ற தாள்களையும், அட்டையையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டியிருந்தது. இல்லாவிட்டால் அவை பறந்துசென்று கப்பலுக்குள் வேறோர் இடத்தில் தொங்கத் தொடங்கிவிடும்" என்று தெரிவித்துள்ளார்.

புறவெளியிலிருந்து பார்க்கும்போது உலகம் எததகைய காடசியை வழங்குகிறது என்று ஒரு செய்தியாளர் கேட்டதற்கு, "வானூர்தியிலிருந்து பார்ந்தால் தெரிவதைப்போல நாடுகளும் நகரங்களும் மலைகளும் ஆறுகளும் அவ்வளவு தெள்ளத் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும் பொதுவாக நன்றாகத் தெரிகின்றன என்றே கூறவேண்டும். இது அமெரிக்கா, இது ரஷ்யா, இது ஆப்ரிக்கா என்று தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. புறவெளியிலிருந்து கொண்டு உலகத்தைப் பார்த்தபோது அதன் முழு உருண்டை வடிவத்தை நன்கு காணமுடிந்தது. உருண்டை வடிவில் உள்ள உலகத்தை என் கண்ணாரக் கண்டேன். உலகத்தை விட்டு அப்பால் பறந்து சென்றபோது உலகத்தின் வளைவு (அடிவானம்) அற்புதமாகவும் அழகாகவும் இருந்தது. காற்று மண்டலத்தைத் தாண்டிச் சென்ற பிறகு, அம் மண்டலத்திற்கும் புறவெளிக்கும்

இடையே உள்ள எல்லைப் பகுதி முதலில் நீல நிறமாகவும், பிறகு, ஆரஞ்சு நிறமாகவும், மீண்டும் நீல நிறமாகவும், இறுதியில் கறுப்பு மயமாகவும் காட்சி அளித்தது,'' என்று விடை அளித்துள்ளார்.

"நீங்கள் வான்வெளிக் கப்பலில் ஏதாவது தாயத்துக்களையோ படங்களையோ உடன் எடுத்துச் சென்றீர்களா?'' என்று கேட்ட ஒரு செய்தியாளருக்குப் புன்முறுவல் பூத்தபடி, ககாரின், "எனக்கு மூடநம்பிக்கைகள் எவையும் கிடையா. தாயத்து முதலியவற்றை நான் நம்புவதில்லை. என் பயணம் வெற்றிகரமாக முடியும்—நான் கட்டாயம் திரும்பி வருவேன் என்கிற உறுதி எனக்கு இருந்ததால் என் தாய் தந்தையர் படங்களையோ என் மனைவியின் படத்தையோ, எடுத்துச் செல்லவுமில்லை'' என்று தெரிவித்துள்ளார்.

"எனக்கு நீண்ட நாட்களாகவே இத்தகைய புறவெளிப் பயணங்களில் ஈடுபடவேண்டும் என்னும் ஆவல் உண்டு. ஆனால் அந்தப் பேற்றைச் சோவியத் அரசாங்கம் எனக்கு வழங்கும் என்று நான் நினைக்கவேயில்லை. என் ஆவல் நிறைவேறியதுபற்றி நான் பெரு மகிழ்வடைகின்றேன்'' என்று தெரிவித்த ககாரின், "மீண்டும் இத்தகைய புறவெளிப் பயணங்களில் ஈடுபட நான் தயாராக உள்ளேன். செவ்வாய் உலகத்திற்குச் சென்று அங்கே உயிர்கள் உள்ளனவா என்பதை நேரில் காணவேண்டும் என்றும் எனக்கு ஆவல் உள்ளது'' என்றும் தெரிவித்துள்ளார்.

புறவெளிப் பயணம் செய்த முதல் மனிதன் என்னும் புகழைப் பெற்றுவிட்ட தளபதி ககாரின், 27 வயதுள்ள கட்டிளங்காளைதான். அவருடைய வாழ்க்கைத் துணைவியாரின் வயது 26. அத்தம்பதிகளுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. இரண்டாவது குழந்தை பிறந்து ஒரு மாதம்தான் ஆகிறது.

தளபதி ககாரின் உலகத்திற்குத் திரும்பி வந்ததும் இரஷ்யாவில் அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் இறங்கிய இடத்திலிருந்து மாஸ்கோவுக்கு அவரைக் கொண்டு வந்த வானூர்தியைச் சுற்றி ஏழு வானூர்திகள் மரியாதைக்காகப் பறந்து வந்தன. அவர் மாஸ்கோ விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது அவரை வரவேற்பதற்காகச் சோவியத் ரஷ்யாவின் முதலமைச்சர் குருஷேவும் பிற இரஷ்யத் தலைவர்களும் நேரில் வந்திருந்தனர். அங்கிருந்து இரஷ்ய அரசாங்கத் தலைமைச் செயலகம் அமைந்துள்ள கிரெம்ளின் பகுதிக்கு—ஏறத்தாழ பதினேழு கல் தொலைவு—இவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வழி நெடுக இலட்சக்கணக்கான மக்கள் அலை அலையாகத் திரண்டு நிறைந்து குழுமி அவருக்கு மாபெரும் வரவேற்பு அளித்துள்ளார்

கள். மலர் மாலைகள் வந்து குவிந்தபடி இருந்தன என்றும், அடிக்கடி இவர் மலர்மாலைக் கடலுக்குள்ளே மூழ்கிவிட்டார் என்றும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. சோவியத் ரஷ்யாவின் தலைசிறந்த பட்டமாகிய 'லெனின் ஆர்டர்' அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. கிரெம்ளின் அரண்மனையில் லெனின் கல்லறைக்கு அருகில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் குருஷேவ் அவரைப் பாராட்டி மகிழ்ச்சியுரைகளைப் பொழிந்தார் புறவெளிக்குச் சென்று மீண்ட மனிதன் சோவியத் ரஷ்யாவின் குடிமகன் என்னும் உண்மை, இரஷ்யத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதில் வியப்பென்ன இருக்கமுடியும்? கதிரவனின் வரவு கண்டதும் கமலங்கள் மலர்வதுபோல—வெண்மதியின் இன்முகத்தைப் பார்த்ததும் அல்லி மலர்கள் மலர்ந்து மணம் வீசிக் குதித்தாடுவதுபோல—தாய்முகம் கண்டதும் சேய் முகங்கள் புன்னகைப் பூந்தோட்டங்கள் ஆடுவதுபோல தளபதி ககாரின் வெற்றிப் பயணத்தை முடித்துத் திரும்பியது கண்ட சோவியத் மக்கள், அகமும் முகமும் மலர்ந்து ஆனந்தக் கூத்தாடியது இயற்கையே அல்லவா?

நீலத் திரைக் கடலை வென்ற — மனிதன் நீண்டு அகன்ற வானத்தை வென்ற மனிதன் — தனக்கு ஈடு இணை இல்லாமல் இறுமாந்து நின்றுகொண்டிருந்த எவரெஸ்ட் மலையின் உச்சியையும் வென்ற மனிதன் இப்போது புறவெளியையும் வெற்றி கண்டிருக்கிறான். இந்த வெற்றி, இனி வரும் ஆண்டுகளிலும், இதனினும் சிறந்த பல வெற்றிகளைத் தர இருக்கிறது என்பது உறுதியிலும் உறுதியாகும்.

இம்முறை புறவெளிப் பயணம் மேற்கொண்ட திருவாளர் ககாரின் 187 மைல் உயரம் சென்று, உலகத்தைச் சில முறை சுற்றி, ஒரே நாளில் திரும்பி விட்டாரல்லவா? மேலும் மேலும் அதிக உயரம் செல்லவும், மேலும் மேலும் மிகுதியான காலம் புறவெளியில் தங்கவுமான முயற்சிகள் அடுத்து நடைபெறும். இந்த உலகத்திலிருந்து இருபதாயிரம் அல்லது முப்பதாயிரம் மைல்களுக்கு அப்பால் நிலையான ஒரு புறவெளி ஆராய்ச்சி நிலையத்தை நிறுவி, அங்கிருந்து ஆராய்ச்சி முடிவுகளைத் தானே இயக்கும் ரேடியோ அலைகள் மூலமாக இவ்வுலகத்திற்குப் பெற முயலும் நடவடிக்கை அடுத்து எடுக்கப்படக்கூடும். அதற்கும் அப்பால், ஒருவரோ இருவரோ மேலும் சிலரோ கொண்ட வான்வெளிக் கப்பலைச் சந்திர மண்டலத்தைச் சுற்றி வரும்படிச் செலுத்த முயலலாம். அம்முயற்சியில் வெற்றி கிட்டியதும் சந்திர மண்டலத்தில் சில மனிதர்களை இறக்கி

ஆராய்ச்சிகளை நடத்தச் செய்து உலகத்திற்குத் திரும்ப அழைத்துக் கொள்ளும் பெரு முயற்சி செய்யப்படக்கூடும்.

ஏப்ரல் 12-ஆம் நாள் ஏற்பட்டுள்ள வெற்றி, என்றேனும் ஒரு நாள் உலக மக்களிற் சிலரோ பலரோ சந்திர மண்டலத்திற்குச் சென்று வெற்றியுடன் திரும்பி வரப்போவது உறுதி உறுதி என் பதை எடுத்துக்காட்டும் அச்சாரமே ஆகும்.

ஆனால் ஒன்று. மனிதன் மேற்கொள்ளும் புறவெளிப் பயணங் கள் யாவும், மனித சமுதாயத்தின் வாழ்க்கையை வளம் நிறைந்ததாக வும் இன்பம் கொழிப்பதாகவும் மாற்றுவதற்குப் பயன்படவேண்டுமே தவிர, உலக மக்களில் ஒரு நாட்டாரை ஒரு நாட்டார் கொன்று குவிப்பதற்குப் பயன்படக் கூடாது.

"திருவிளக்கின் ஒளியைக் கொண்டு திருவாசகமும் படிக்க லாம்; திருட்டுக் கையெழுத்தும் போடலாம். அந்த ஒளியிலிருந்து கொண்டு ஒருவன் திருவாசகத்தைப் படிக்காமல் திருட்டுக் கையெழுத்தைப் போட்டால் அது திருவிளக்கின் குற்ற மாகாது; அத்தத் திருட்டு உள்ளத்தானின் குற்றமே ஆகும்," என்று மறைந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஒரு முறை மிக அழகாகக் குறிப்பிட்டார். அந்த நகைச்சுவை அரசர் திருவிளக்கைப் பற்றிக் குறிப்பிட்ட அந்தத் தெளிவுரை விஞ்ஞானக் கலைக்கும் பொருந்தும். விஞ்ஞானக் கலை, மனித சமுதாயத்திற்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய ஓர் அற்புதமான கருவி. ஆனால் அந்தக் கருவியைக் கொண்டு மனித சமுதாயம் மனத்தாலும் கற் பனை செய்ய முடியாத மட்டிலாத இன்ப வாழ்வையும் பெறமுடியும்; மனித சமுதாயத்தின் பூண்டே அற்றுப் போகும்படித் தன்னைத் தானே அழித்துக்கொள்ளவும் முடியும். மனித சமுதாயமானது, விஞ்ஞானக் கலையைக்கொண்டு வியத்தகு பொருள்கள் செய்து ஆனந்தமாக வாழாமல், பாழான உள்ளம் கொண்டு பயங்கரக் கருவி கள் செய்து படுபாதாளத்தில் விழுந்து அழிந்துவிடுமானால் அது விஞ்ஞானக் கலையின் குற்றமாகாது; மனித உள்ளத்தில் நிறைந் துள்ள அஞ்ஞான அழுக்கின் குற்றமே ஆகும்.

இந்தமறக்கக் கூடாத உண்மையை மறவாமல் மனத்தில் நிறுத்தி உலகத் தலைவர்கள் பணியாற்றினால்தான் புறவெளிப் பயணம் போன்ற பெரு வெற்றிகளால் மானிட சாதி மாண்புடைய சாதியாக, மட்டற்ற சிறப்புடன் வாழ முடியும்.

ஆம்! இது உண்மை! வெறும் பழிப்புரை இல்லை!

ஆராய்ச்சி அறிஞர்

மயிலை சீனி வேங்கடசாமி

நாடு மொழி இனம் ஆகிய மூன்றும் முறையே ஒருபுடை யொப்பாக உடை, உயிர், உடலாகக் கொள்ளுதல் ஒக்கும். இம்மூன்றனுள் நடுநிற்கும் உயிரனைய மொழி மிகமிகச் சிறந்ததாகும். அம் மொழி அவரவர்க்குரிய தாய்மொழியாகும். மொழியொன்றே புறவிழியொத்து அகவிழியாக நின்று ஆறு அறிவிப்பதாகும். அம்மட்டுமன்று, அது 'கேடில் விழுச்செல்வமு' மாகும். நாடும் இனமும் மற்றொரு பிறப்பில் மாறிவிடவுங் கூடும். அவை உடையும் உடலும் மாறுவன போன்றாகும். ஆனால் மொழி உயிர்போன்று மாறாது பிறப்புப் பிறப்புக்களி லெல்லாம் பின்தொடர்ந்து வரும் பெற்றியதாகும்.

ஒரு மொழியின் சிறப்பு அம் மொழிக்கண் காணப்படும் இலக்கணம், இலக்கியம், இசை, கூத்து, புகழ் (தோத்திரம்), பொருள் (சாத்திரம்), வரலாறு, ஆராய்ச்சி நிலநூல், வானூல், கல்லெழுத்து, செப்புப்பட்டயம் முதலியவற்றின் சிறப்புக்களான் ஆகும். இவ் வகைய சிறப்பு நூல்களுள் ஆராய்ச்சி நூல் மிக்க விழுச்சீர் அமைந்த தொன்றாகும். அத்தகைய நூலாசிரியர்பால் பன்மொழிப் புலமையும், பன்னூலாய்வும், நன்னெறியொழுக்கமும், நாவன்மையும், உள்ளத்துரனும், நடுநிலை பிறழா நயனும், நுண்ணறிவும், காய்தலு வத்தலின்றி ஆய்வுசெய்யும் திறனும், ஆய்ந்து கண்ட வுண்மைகளை முன்னொடுபின் மலைவின்றி முறைப்படத் தொகுத்து அறந்திறம்பா வாறமைத்து எளிமையும், இனிமையும், தெளிவும், திட்பமும் பொதுள நூல் யாக்கும் மாண்பும், நுணங்கிய கேள்வியும், எளிமையும், அவாவின்மையும், அன்பருளுண்மையும், அடக்கமும், அயரா வுழைப்பும் இயல்பாக அமைந்திருத்தல் வேண்டும்.

இத்தகைய நலங்கள் முற்றும் நன்கமைந்து திகழும் சீரியோர் நம் வேங்கடசாமி ஆவர். அவர்தம் மணிவிழா மாண்பும் வரலாற்றுச் சுருக்கமும் வருமாறு :

17-3-1961 வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்குச் சென்னை கோக்கலே மண்டபத்தில் ஆராய்ச்சியறிஞர்தம் மணிவிழா மிக்க ஆர்வமுடன் துவங்கப்பட்டது. மண்டபத்தின் அகத்தும் புறத்தும் ஒப்பனைகள் நன்கு செய்யப்பட்டிருந்தன. இருபாலாரினும் சிறந்த

பெரும்புலவர்கள், பேராசிரியன்மார், பெருஞ்செல்வர், மாணவர், பெருமக்கள் இடம் போதாதெனும்படி மிகத் திரளாகக் கூடியிருந்தனர்.

விழாவினுக்குச் சென்னை உயர்நீதிமன்ற நடுவர் திரு. எஸ். கணபதியா பிள்ளை அவர்கள் தலைமை பூண்டனர். ஆராய்ச்சியறிஞர் மயிலை, சீனி வேங்கடசாமி, தலைவர் திரு. எஸ். கணபதியாப் பிள்ளை, வரவேற்புத்தலைவர் செந்தமிழ்க்காவலர் டாக்டர். அ. சிதம்பரநாதன் ஆகியோரைத் தொண்டர்படையினரும், மாணவக் கடற்படை மறவர்களும் இருமருங்கிலும் அணிவகுத்து நிற்க டாக்டர் தருமாம்பாள் பெண்கள் இலக்கிய வகுப்பு ஆசிரியர் திருமதி இரா. ச. பங்கயச்செல்வி, மாணவியர் நிறைகுடம் ஏந்தி இசைபாடி மலர்தூவி வரவேற்றனர். அதன்பின் சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறை மாணவிகள் செல்வி எம்.எஸ்.இலட்சுமி, செல்வி காயத்திரி ஆகிய இருவரும் தமிழ்வணக்கம் பாடினர்.

பின்னர் அனைவரையும் வரவேற்புக்குழுத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதனவர்கள் பலபடப் பாராட்டிப் பல்லுரை பகர்ந்து வரவேற்றனர். நம் மணிவிழாவிற்குரிய மாண்பமை வேங்கடசாமியவர்களின் ஆராய்ச்சித்திறனை அகமுறப் பாராட்டி ஆர்வமொழி புகன்றனர். அறிஞர் சீனி வேங்கடசாமி அவர்களைப் பாராட்டி. வந்துள்ள கடிதங்களை மணிவிழாக் குழு உறுப்பினரும், தமிழ் எழுத்தாளர் சங்க முன்னாள் செயலாளரும் ஆகிய திரு. ஊ. ஜெயராமன் அவர்கள் படித்தார். பின் மணிவிழாக்குழுவின் சார்பில் பாராட்டிதழ் ஒன்றை அக்குழுவின் பொருளாளரும், தமிழ் எழுத்தாளர் சங்கத் தற்போதைய பொதுச் செயலாளருமாகிய திரு. மா. இளஞ்செழியன் எம். ஏ. அவர்கள் படித்தளித்தார்கள். பின்பு தலைவர் திரு. எஸ். கணபதியா பிள்ளையவர்கள் திரு. வேங்கடசாமியின் எழுத்தாற்றலையும் பண்பையும் விளக்கி இத்தகைய உயர்ந்த அறிஞர்களை மேலும் தமிழகம் நன்றாகப் போற்றுதல் வேண்டும்; பாராட்டுதல் வேண்டும்; எனக் கூறினர். மேலும் இப் பெருவிழாவினை இத்துணைச் சிறப்பாக எடுத்தமைக்குப் பாராட்டுவதாகவும் கூறினர். மணிவிழாத் தலைவர்க்குப் புத்தாடை போர்த்தி '**ஆராய்ச்சி அறிஞர்**' என்ற பட்டம் பொறித்த பதக்கத்தையும் அணிவித்தார்.

பேராசிரியர் திரு. மயிலை சிவமுத்து மணிவிழா மலரைப் பாராட்டி அரங்கேற்றி அதனை நம் வேங்கடசாமியிடம் அளித்தனர். பின்னர்த் தமிழகச் சைன மக்கள் சார்பாகத் திரு. சீவபந்து டி.எஸ். ஸ்ரீபால் 'சமணமும் தமிழும்' என்ற நூலைப் பாராட்டி, அதன்

இரண்டாம் தொகுதியை வெளியிட அதன் அச்சுக் காகிதச் செலவுக்காக ரூபா. 2,000 பணமுடிப்பையும் அளித்தனர். அடுத்துச் சென்னை மாணவர் மன்றம், தமிழ்நாடு சைன மாசங்கம், திரு. கோட்டிலிங்கம், கவிஞர் தனபாலன் முதலியோர் பாராட்டிதழ்கள் படித்தளித்தனர். பல சைன சங்கங்களும் பாராட்டிதழ்கள் அளித்தன. சென்னை நக்கீரர் கழகம், டாக்டர் தருமாம்பாள் பெண்கள் இலக்கிய வகுப்பினர், புலவர் கண்ணன், ஓய். எம். சி. ஏ. பட்டி மன்றம், தமிழ். எழுத்தாளர் சங்கம், மாகாணத் தமிழாசிரியர் சங்கம், இராயபுரம் இரயில்வே தமிழ் மன்றம், டி. கே. எஸ். சகோதரர்கள், நகர இளைஞர் மன்றத்தினர், திருத்தக்க தேவர் இலக்கிய மன்றத்தினர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நடராசர் கல்விக்கழகம், சுகுமாரன், இரா. ச. பங்கயச் செல்வி முதலியோர் புத்தாடைகளும், பூமாலைகளும் பொன்மாலைகளும் அணிவித்தனர்.

அதன்பின் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், டாக்டர் இராசமாணிக்கனார், ஔவை. டி. கே. சண்முகம், கி. வா. சகன்னாதன், கவிஞர் முடியரசன், டாக்டர் மு. ஆரோக்கியசாமி, ந. சஞ்சீவி, மீ பா. சோமசுந்தரம், அழ. வள்ளியப்பா, நாவலர் இரா. நெடுஞ்செழியன் முதலியோர் நம் வேங்கடசாமி அவர்களின் ஆராய்ச்சித்திறன், எழுத்துத்திறன், உழைப்புத்திறன் முதலிய பல நலங்களைப்பற்றி நனிமிகப் பாராட்டி நவின்றனர். கவிஞர் முடியரசன் விழாச் சிறப்பினை நெடுஞ்செய்யுளாகப் பாடியரங்கேற்றினர்.

கடைசியாக ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் விழாக் குழுவினர்க்கும், தம் முன்னேற்றத்திற்கு உதவி புரிந்த உற்றார், உறவினர், அறிஞர், பெருமக்கள் முதலியோர்க்கும் நன்றி கூறினர். மணிவிழாக் குழுச் செயலாளர் திரு. சிறுவை மோகனசுந்தரம் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

நம் மணிவிழாத் தலைவரின் வரலாற்றுச் சுருக்கம்: திரு. மயிலாப்பூரின்கண் சித்த மருத்துவத் துறையில் மிக்க தேர்ச்சியுற்றுத் தமிழ்ப் புலமையும் நிறைந்து மருத்துவத் தொழிலினை மேற்கொண்டு வாழ்ந்துவந்த தக்கார் ஒருவருளர். அவர்தந் திருப்பெயர் சீனிவாசக நாயகரென்ப. இவர்தம் குடும்பம் வழி வழியாக நாட்டு மருத்துவத்தை மேற்கொண்டு நற்பணி புரிந்து வந்தது. அதனால் அவர்கட்குப் பொன்னும் பொருளும் போகமும் புகழும் பெருக வந்து சேர்ந்தன. இவர் பல மருத்துவ நூற்களைக் கற்று அந் நூலின்படி பல புதிய புதிய சித்த மருந்துகளைத் தாமே உண்டாக்கி யுள்ளார். அவற்றை நோயாளிகளுக்கு வழங்கிப் பல அரிய நோய்களை மிக விரைவில் அகற்றி யுள்ளார். அவர்பால் ஓலைச் சுவடிகளும் புத்தகங்களும் ஏராளமாகவிருந்தன. அப் பெரியாரின் மகனார் நம்

சீனிவேங்கடசாமியாவர். இவர் இளமையிலேயேதோற்றப்பொலிவும், கூர்ந்த நோக்கமும், ஆழ்ந்த அறிவும், சுறுசுறுப்பும், உழைப்பில் வேட்கையும் உடையராகக் காணப்பட்டார். ஆனால் தந்தையார் பார்த்துவந்த மருத்துவத்தொழிலில் ஈடுபாடு கொண்டிலர். அதனால் அவர்தம் அரிய மருத்துவமுறைகளும், அரும்பெரும் நூல்களும் உலகுக்குப் பயன் பெறாது பிற்காலத்து மறைந்தன.

சீனி. கோவிந்தராசன் என்பவர் நம் வேங்கடசாமியாருக்குத் தமையனாராவர். அவர் பெருந் தமிழ்ப்பற்றும் புலமையும் நிரம்பியவர். அவர்தம் சார்பினாலேயே நம் வேங்கடசாமியார்க்கு இளமையிலேயே தமிழினிடத்தில் தனியார்வம் உண்டாகியது. வேங்கடசாமியாரின் அகவை பதினாறாக இருந்த காலத்தே தமிழ் நூல்களை ஆர்வமுடன் கற்றுச் சுவைகாணும் நன்னிலையிலிருந் தனர். 'செந்தமிழ்' முதலிய உயர்ந்த தமிழ் வெளியீடுகளை விடாது படித்துவந்தனர். ஓவியப் படிப்பிலும் ஓரளவு ஆர்வங் கொண்டு கற்றனர். நாலடியார் முதலிய கீழ்க்கணக்கு நூல்களை முறைப்படக் கற்றனர்.

நம் வேங்கடசாமியாரின் 22 ஆம் அகவையில் தன்னருமைத் தமையனார் இறந்ததன் காரணமாகக் குடும்பச்சுமை அவர்பாலாயது. அதனால் மோட்டார்வண்டிச் சாமான்கள் விற்கும் ஒரு கடையில் எழுத்தராக வேலைபார்த்து வந்தார். அதனால் படிப்பதற்கு மிக்க ஓய்வு நேரம் கிட்டுவது அரிதாயிற்று. இருப் பினும் விடுமுறை நாளாகிய ஞாயிற்றுக்கிழமைகளில் விடாது படிப்பதும் ஆய்வதும், கற்றாரோடு கலந்து அளவளாவுவது மாகவே அந்நாட்களைக் கழிப்பர். சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களையும் தாமாகவே கற்றுக் கருத்துட் கொள்வார். 'திராவிடன்' என்னும் நாளிதழ் ஆசிரியர் குழுவில் ஒருவராய்த் திகழ்ந்தனர். இதிலும் தமிழ் படிப்பதற்குப் போதிய ஓய்வு கிட்டவில்லை. இதனையும் விட்டொழித்து ஆசிரியராம் நிலையினை அவாவினர். இவர் புனித தோமையர் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்புவரை படித்திருந்தனர். அதனால் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயின்றார். **நகராண்மைப் பள்ளியில் தொடக்க ஆசிரியராக அமர்ந்தார்.**

தம் வாழ்நாள் முற்றையும் தமிழ்ப்பணிக்காகவே ஒப் படைத்த நம் பெரியார் மணமுடியாமலிருப்பதே குணமென மேற்கொண்டனர். தாம் கண்ட உண்மைகளைச் சிறுசிறு கட்டுரைகளாகத் திறம்பட வரைந்து 'திராவிடன்' தமிழ்நாடு, குடியரசு, ஈழகேசரி' முதலிய வெளியீடுகளில் அவ்வப்போது வெளியிட்டு வந்தனர். இவற்றின் உண்மைகளைப் படித்துணர்ந்த

சிறந்த அறிஞர்கள் அனைவரும் நம் பெரியாரைக் கண்டு அளவளாவ ஆர்வங்கொண்டனர். இம்முறையில் திருநெல்வேலி கா. சுப்பிரமணிய பிள்ளை (எம். ஏ., எம். எல்.) அவர்களின் தொடர்பு நம் பெரியாருக்குக் கிட்டியது. பிள்ளையவர்களின் பெருந் துணையூக்கமே நம் பெரியாரை இத்துணை உயர்நிலைக்குக் கொண்டுவரப் பெருந்துணையாக விருந்ததென்ப.

விபுலாநந்தவடிகள், மறைமலையடிகள், திரு. வி. க., தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இவர்கள் தம் அருந்தொடர்பும் நம் பெரியாருக்குக் கிட்டியது. அவ்வவர் நூல்களையும் நன்கு பயின்றனர். தெ. பொ. மீ. அவர்களால் நிறுவப்பட்ட 'சென்னைத் தமிழ்ச்சங்கத்தின்' சார்பில் பல அரிய கூட்டங்கள் அடுத்தடுத்து நிகழ்வதுண்டு. அவையனைத்திற்கும் நம் பெரி யார் தவறாது சென்று பங்குகொள்வதுண்டு. ஒருமுறை 'கிறித்தவமுந் தமிழும்,' சமணமுந் தமிழும், சைவமுந் தமிழும், வைணவமுந் தமிழும், இசுலாமியமுந் தமிழும்' என ஆறு சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. இக் கேள்விச் செல்வத்தின் பயனாகவே பின் நம் பெரியார் யாத்த 'கிருத்தவமுந் தமிழும்,' 'பௌத்தமும் தமிழும்,' 'சமணமுந் தமிழும்' என்னும் நூல்கள் உருவாகின.

திரு. ச. த. சற்குணரவர்கள் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப்புலமை நடத்திய பெரியார். அவர் தம் தொடர்பும் நம் பெரியார்க்குண்டு. 'கிறித்துவமும் தமிழும்' என்ற நூலுக்குச் சற்குணர் தம் முன்னுரையுளது. ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. சதாசிவப்பண்டாரத்தாரின் அரிய தொடர்பும் இருந்தது.

சீர்திருத்தக் கொள்கைகளில் நம் பெரியாருக்குப் பற்று மிகுதி. அது காரணமாக ஈ. வே. ரா. பெரியாருடன் தொடர்பு ஏற்பட்டது. குடியரசுத்தாளில் பல கட்டுரைகள் எழுதி வந்தனர். பாரதிதாசன் தொடர்பும் ஏற்பட்டது, கன்னிமாரா நூல் நிலையத்திற்கும், மத்திய ஏட்டுச்சுவடி நூல் நிலையத்திற்கும் விடாது சென்று பல நூல்களைக் கற்பதும் ஆய்வதும் பயனார் பணியெனக் கொண்டொழுகி வருகின்றனர். சமயங்களை அறிவுக்கண் கொண்டு காணவேண்டுமென்னுங் கொள்கை நம் பெரியாரது. அம் முறையில் 'இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள்' என்னும் நூல் தோன்றிற்று, இதுபோல் சைன பௌத்த நூல்களும் தோன்றின.

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களின் தொடர்பும் நம் பெரியார்க்கு ஏற்பட்டது. இதுபோல் பல சைன மதப் பெரியார்கள் தொடர்பும் ஏற்பட்டது. எழுமர் மாபோதி சங்கப் பொறுப்பாளர் நந்தீஸ்வர தேரோ தொடர்பும் ஏற்பட்டது. தருமரத்தின தேரோவின்

தொடர்பும் ஏற்பட்டது. இத் தருமரத்தினர் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் சிங்கள மொழியில் மொழிபெயர்த்துள்ளன ரென்ப. திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் தொடர்பும் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரைப் பிள்ளை அவர்கள் தொடர்பும் ஏற்பட்டன. இந்திய மத்திய அரசின் பொருளாதார ஆலோசகரான டாக்டர் பா. நடராசனார் அவர்கள் தொடர்பும் உளது. கிறித்துவக் கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் தொடர்பும் அமைந்தது. யாழ்ப்பாணம் இராஜ. அரியரத்தினம், குல. சபாநாதன் முதலியோர் தொடர்புகளுமுள.

செக்கோஸ்லாவியா நாட்டிற் பிறந்து இயற்கை நுண்ணறிவால் பல மொழிகளைக் கற்றுத் தற்செயலாகத் தமிழின் அருமையையுணர்ந்து, அம்மொழியின்கண் தாமாகச் சீரிய புலமை எய்தியவர் டாக்டர் கமில் சுவலபில் என்னும் இளைஞர். இவர்தம் தொடர்பும் நேரிற்கண்டு அளவளாவிய பேறும் நம் பெரியார்க்குக் கிட்டியது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தொடர்பால், 'கிறித்துவமும் தமிழும்,' 'பௌத்தமும் தமிழும்,' 'சமணமும் தமிழும்,' 'பௌத்தக் கதைகள்,' 'மகேந்திரவர்மன்,' 'நரசிம்மவர்மன்' என்னுல் நூல்கள் கழக வழி வெளி வந்துள்ளன. பாரி நிலையம், அருணு பப்ளிக்கேஷன், ஸ்டார் பிரசுரம், சாந்தி நூலகம் முதலிய வெளியீட்டாளர் தொடர்பால் பல நூல்கள் வெளிவந்துள்ளன. காஞ்சி மணிமொழியாரின் தொடர்பும் நம் பெரியார்க்குளது. எழுத்தாளர் சங்கம், நக்கீரர் கழகம், தமிழகப் புலவர் குழு முதலியவற்றின் தொடர்புகளும் உள.

நம் பெரியார் தந் தனிமுயற்சியால் யாத்த பதிறு நூல்களும் தமிழ்த்தாய்க்கு நல்லணியாய் நின்று தமிழுலகிற்குப் பெரும் பயன் விளைத்து வருகின்றன.

நம் பெரியார் தம் அரும்பெருழைப்பும், ஒழுக்கமும், தாய்மொழிக்காதலும், உண்மை காணவேண்டுமென்னும் உணர்வும், கண்டதை எடுத்தியம்பும் உரனும், சமயப் பொதுமையும், அடக்கமும், எளிமையும், அன்பும் அருளும், இனிமையும், நட்பும் என்றென்றும் எல்லாராலும் பாராட்டிப் பின்பற்றுதற்குரிய.

வாழ்க நம் பெரியார்; வளர்க அவர்தம் தமிழ்த்தொண்டு; மணிவிழாப்போன்று வைரவிழா முத்துவிழா முதலிய பலவிழா அவர்க்கு அணிபெற நிகழ்வதாக. வாழ்க தமிழ்!

— 'செந்தமிழ்ச் செல்வி

திரு சுந்தர வடிவேலு

அவர்களுக்குப்

பாராட்டு விருந்து

பத்மஸ்ரீ திரு N. D சுந்தரவடிவேலு, கல்வித்துறை இயக்குநர் அவர்களுக்கு சென்னை மாவட்ட உதவி பெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம் சார்பில் இந்திய அரசு "பத்மஸ்ரீ" என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்ததை முன்னிட்டு சென்னை தாசப்பிரகாச ஹோட்டலில் 4-4-61 தேதி மாலை 6 மணிக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது நீதிபதி திரு P.S. கைலாசம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

திரு S. G. இரங்க ராமானுஜம் B. A., B. L. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். தலைவர் முன்னுரைக்குபிறகு திரு அமிர்தகணேசன், திரு புருஷோத்தம் EX M. L. C. ஆரம்பக் கல்வி ஆசிரியர், திரு P. வீரராகவன், சென்னை பல்கலை கழக தமிழ் விரிவுரையாளர், திரு M. இராஜமாணிக்கனார் M.A. P.h.d. வாழ்த்துரை வழங்கினார்கள்.

சங்கக் காரியதரிசி திரு K. கணேசன் அவர்களால் பாராட்டு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

பாராட்டுரைகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் பத்மஸ்ரீ திரு N. D. சுந்தரவடிவேலு அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனக்கு எது நியாயம் என்று படுகிறதோ அக்காரியங்களைச் செயலாற்ற முற்படுவதாயும், உதாரணமாக பகல் உணவு திட்டம், மாணவர் மாணவிகளுக்கு சீருடைத் திட்டம் இந்நாட்டுக்கு மிகமிகத் தேவை என்று கருதுவதாயும் அதற்காக ஏற்படும் சிக்கல்களைச் சமாளித்து நாட்டிலுள்ள ஏழைப் பிள்ளைகளுக்கு இலவச கல்வி மட்டும் அல்ல இலவசஉணவு உடை, கொடுக்க முயற்சித்து வருவதாயும் குறிப்பிட்டார். இந்த முயற்சியில் உதவி பெறும் எய்டெட் பள்ளி நிர்வாகிகள் தங்களால் முடிந்த உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இநதநாட்டில் முனிசிபாலிடிகளும் ஜில்லாபோர்டுகளும் அரசாங்கமும் ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பிக்காமல் இருந்த காலத்திலேயே, தனியார் நிர்வாகிகள் பல பாடசாலைகளை (aided schools) ஆரம்பித்து நாட்டில் ஆரம்பக்கல்வியை பரவச்செய்தவர்கள் என்பதைதான் மறந்துவிடவில்லை என்றும், சட்டசபை அங்கத்தினர்களால் ஏற்படுத்தப்பட்ட கல்விப் குழுவில் சிலர் தனியார் பள்ளிகள் தேவையில்லை. எல்லாவற்றையும் அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும். (Nationali-

(16-ம் பக்கம் பார்க்க)

சென்னை மாநிலக் கல்வித்துறை இயக்குநர்

திரு. N. D. சுந்தரவடிவேல்

M.A.,L.T., அவர்கட்கு

இந்திய அரசு "பதுமஸ்ரீ" என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்ததை முன்னிட்டு

சென்னை மாவட்ட உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம் வாசித்தளித்த நல்வாழ்த்துப்

பாராட்டு இதழ்

செந்தமிழ் நாட்டுச் சீரிய செம்மலே,

தாங்கள் இளமை முதற்கொண்டே தளரா முயற்சியும் தக்கோர் நட்பும், எடுத்தது முடிக்கும் ஆற்றலும், கல்வியில் விருப்பமும் ஊக்கமும் உடையவர்களாய் விளங்கினீர்கள். இன்றும் அப்பண்பு தங்களிடம் மேலும் மேலும் வளர்ந்து வருகின்றது. தங்கள் தொண்டுகளால் தமிழ் நாட்டுக்கே ஒரு பெருஞ் சிறப்பு ஏற்பட்டுள்ளது.

ஏழைகட்கிரங்கும் எழில் வளர் ஏந்தலே,

இந்திய நாடு அஃதிலும் தமிழ் நாடு பல்வகை வளங்களும் பெற்ற தாயினும் வறுமையால் வாடும் மக்களும் நிறையப் பெற்றது. தாங்கள் மேல்பதவி அடைந்ததும் ஏழை மாணவர்க்குப் பகலுணவு அளிக்கும் திட்டத்தைச் செயல் முறைக்குக்கொண்டு வந்திருக்கின்றீர்கள். மாணவர்களின் வளர்ச்சி வறுமையால் பாதிக்கப்படாமல் இருக்கப் பெருந்தொண்டு செய்கின்றீர்கள். பெற்றோர்களையும் பொதுமக்களையும் அத்தொண்டில் ஈடுபடுத்துகின்றீர்கள். உள்ளத்தில் எழுந்த எண்ணத்தைச் செயல்படுத்துகின்றீர்கள். வாழ்க உங்கள் எண்ணம்! வளர்க உங்கள் தொண்டு!! மாணவரிற் பலர் உடையில்லாது வாடுகின்றனர் என்பது அறிந்து "சீருடை வழங்கும் திட்டத்தையும்" மேற்கொண்டிருக்கும் தங்கள் நல்லெண்ணம் வருங்கால மக்களாலும் வாழ்த்தப்படும்.

வேண்டா வேற்றுமை நீக்கிய நல்லோய்,

தமிழ் நாட்டிலே புகுந்துவிட்ட-தேவையில்லாத-சாதி-மத-வேறுபாடுகளை ஒழிக்கவேண்டும் எனப்புத்தர்-திருவள்ளுவர்-விவேகாநந்தர்-காந்தியடிகள் முதலிய பெரியோர்கள் பாடுபட்டனர். ஆயினும் இன்றுவரை தீண்டாமை முதலிய நோய்கள் நாட்டிலே வளர்வதோடு மக்களுடைய வளர்ச்சியையும் தடைப்படுத்துகிறது. இதனை நன்கு உணர்ந்து அதனைக் களைந்து வேரறுக்க நீங்கள் நினைத்துச் செயற்படுத்துகின்றீர்கள். திருவள்ளுவர் வகுத்த நல்வழியை நாட்டிலே பரவச் செய்கின்றீர்கள். இவையெல்லாம் வருங்காலத் தமிழ் நாட்டின் நல் வாழ்வுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். தங்கள் திறமையையும் தொண்டுகளையும் அறிந்து இந்திய அரசாங்கம் தங்களுக்கு "பதுமஸ்ரீ" என்னும் பட்டம் அளித்தது கண்டு நாங்கள் மகிழ்ந்து பாராட்டுகிறோம்.

தமிழ் நாட்டு உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகள் நாட்டின் ஆரம்பக் கல்வி முன்னேற்றத்துக்குத் தொன்றுதொட்டுப் பெரும் பங்குகொண்டு செயலாற்றிவருவதை உணர்ந்து தாங்கள் செய்யும் உதவிகளைப் பெரிதும் பாராட்டுகிறோம். தனியார் நடத்தும் பள்ளிகள் " நல்ல திறமையோடு பணியாற்றுகின்றன " என்று அமைச்சர்களும் தாங்களும் பொது மக்களும் பாராட்டிப் பேசுவது கண்டு நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறோம். ஆயினும் தனியார் நடத்தும் ஆரம்பப் பள்ளிகள் இன்னும் திறம்பட நடத்த தற்போது பள்ளி நிர்வாகிகளுக்கு ஏற்பட்டுள்ள சில குறைகளை நீக்கி, நிர்வாகிகள் இன்னும் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும், ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கான துறையில் பணிபுரிய, வேண்டும் உதவிகளைத் தாங்கள் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

தாங்கள் நல்ல பல தொண்டுகளைச் செய்து பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம் தங்கள் அன்புக்குரிய :

A. R. சேஷாசலம்,
தலைவர்.

K. கணேசன்,
V. A. பாலகிருஷ்ணன்,
செயலாளர்கள்.

சென்னை, 4—4—'61.

[15-ம் பக்கம் தொடர்ச்சி]

sation of Elementary Schools) என்று விவாதித்தபோது, எல்லாவற்றையும் அரசாங்கமே ஏற்று நடத்துவது சரியான முறையல்லவென்றும், தனியார் பள்ளிகள் தொன்றுதொட்டு செய்துவந்த தொண்டைப் புறக்கணிக்கப்பது உதவிபெறும் பள்ளி நிர்வாகிகளுக்கு குறிப்பாகக் கிறித்தவ மிஷன் பள்ளிகளுக்கு அரசாங்கம் நன்றி செலுத்தியதாகா தென்றும், அதுமட்டுமல்ல நாட்டில் ஆரம்பக்கல்வியின் நல்ல வளர்ச்சிக்கு ஒருதடை ஏற்பட்டுவிடும் என்றும் வாதாடியதாகக் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு A. R. சேஷாசலம் நன்றிகூறக் கூட்டம் இரவு 8 மணி அளவில் முடிவு பெற்றது.

தொழில் வெற்றிக்கு வழி

(மலரோன்)

எண்ணும் எழுத்தும் கண் எனக் கொண்டிருந்த காலம் மாறி வருகிறது.

தொழிலும், பொருளாக்கமும் இப்போது கண் எனப் போற்றிப் பேணப்படுகின்றன.

ஆயினும் தொழில் துறையில் ஈடுபாடு கொள்வதற்குப் பலர், குறிப்பாகப் பட்டப்படிப்பினர் தயங்குகின்றனர்.
இதற்குக் காரணம், தொழில் துறையில் அனுபவமில்லாமையும், முதலீட்டுக்கான பணம் பண்டம் திரட்டும் திறமைக் குறையுமாகும்.

படிப்பறியாத பாமரர்கள் பள்ளிப் படிப்புப் படித்த எழுத்தறிஞர்களைவிட, கைத்தொழில், வாணிபத் துறைகளில் அதிகமாக ஈடுபாடுகொண்டும், வெற்றியுற்றும், மேல் நிலை அடைந்துவருவது கண்கூடு.

இவர்களுக்கு இந்த அறிவும் ஆற்றலும் எவ்விதம் வாய்ந்தன? இவர்களுடையவெற்றி ரகசியமும் வழிமுறைகளும் யாவை?

இதுபற்றி ஆங்கில நூல்கள் எண்ணற்றவையுள்ளன. சாதாரண நூல்களைவிட பலமடங்கு அதிக விலைக்கும் இவை விற்கப் படுகின்றன. இவற்றின் மொழி பெயர்ப்பாகவும் தமிழிலும், 'புத்தக வர்த்தகத் தந்திரமாக' சில நூல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆனல் இவைகள் முழுக்க முழுக்க அயல்நாட்டுச் சரக்கு. நம் நாட்டுப் பண்புக்கும் பண்பாட்டுக்கும் இயற்கை வள வசதிக்கும் ஏலாதவை. அயலார் உதவியுடன் செயல்படுத்தப்பட வேண்டியனவாகவும் இருக்கின்றன. அதாவது அயல்நாடுகளின் கைத்தொழில், இயந்திர, தளவாட இரசாயன உற்பத்தி நிறுவனங்களின் சுயபோர விளம்பர ஏடுகளாக உள்ளன. இந்த நூல்கள், இவற்றில் தரப்பட்டுள்ள யோசனைகளும், வழிகளும் ஒரு வகையில் சந்தேகப்படக்கூடியவையாகவும், நம் வாய்ப்பு வசதிக்கு மீறியதாகவும் உள்ளன.
நம் நாட்டுக்கு ஏற்ற இயல்பான யோசனைகளும், வழிதுறைகளும் எவை என்று திட்டமாக நாம் அறியவேண்டும். அதற்கு நம் நாட்டு, அறிவொளிகளே நமக்கு நம்பிக்கையளிக்கக்கூடியன. இத்தகைய நூல்கள், பண்டை இலக்கிய வளம் மிக்க தமிழில் இல்லையா என்ற வினு எழலாம்.

நம் நாட்டுப் பழம் பெரும் ஏடுகளை, நமதுஉலகநல்வாழ்க்கை நலக் கண்ணேட்டத்துடன் ஆராயாததே இந்த அய்யப்பாட்டுக்குக் காரணமாகும்.

தமிழ் இலக்கிய, காவிய ஏடுகளில் மாத்திரமல்லாமல், மத நூல்களிலும், பாடல் தொகுப்புகளிலும் நமது வாழ்க்கை வளத்துக்கான வாழ்க்கைஇயல், தொழிலியல், பொருளியல், வாணிப இயல், விஞ்ஞான இயல், மருத்துவ இயல் கருத்துக்கள் தெளிவாகவும், பரந்த அளவிலும் தரப்பட்டுள்ளன.

எல்லா இயல்களின் கலைக் களஞ்சியமாக உள்ளது திருக்குறள் பொன்னேடாகும்.

இதில் பொருட்பால், 'வினைத் திட்பம்' "வினை செயல் வகை" என்ற பகுதிகளில், தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கான, பண்பு, தகுதிகள், தொழில் செய்யும் முறைகள் ஆகிய கண்ணடிகள் காட்சியாகத் தரப்பட்டுள்ளன.

"வினைத்திட்பம் என்பது
ஒருவன் மனத்திட்பம், மற்
றைய எல்லாம் பிற"

வாணிபத்திலும் மற்றைத் தொழில்களிலும் ஈடுபடுகிறவர்களுக்கு முதன்மையாகவும், முக்கியமாகவும் தேவைப்படும் உயிர்ச் சக்தி, மன உறுதியும், துணிச்சலுமாகும். மற்ற திறமைகளும், வசதிகளும் இந்த மன உறுதிக்கு அடுத்த உயிர்ச் சாதனங்களேயாகும்.

இத்தகைய மன உறுதியும், துணிச்சலும் எதற்காக, முதன்மையாகத் தேவைப்படுகிறது?

"ஊறொரால் உற்றபின்
ஒல்காமை இவ்விரண்டின்,
ஆறென்பர் ஆய்ந்தவர்கோள்"

மனத்திட்பம் அதாவது மன உறுதி இருந்தால், நமது தொழில் துறையில் ஏதாவது இடையூறு வருமெனவோ, வருவதாகவோ, மனதில் பட்டாலோ, அதற்கான அறிகுறிகள் தென்பட்டாலோ, அந்த இடையூறு வருவதற்கு முன்பே அதனைத் தடுத்துக்கொள்ள துணிச்சலும், தந்திரமுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கையை மீறியோ, அல்லது எதிர்பாராத விதத்திலோ, இடையூறு ஏதாவது ஏற்படுமாயின், அப்போது மனம் தளராமல், அதனைச் சமாளிப்பதற்கும், நீக்குவதற்குமான ஏற்பாடுகளை மேற்கொள்ளவியலும்.

கடைக்கொட்கச் செய்
தக்கது
ஆண்மை, இடைக்கொட்
கின்
எற்றா விழுமம் தரும்

ஏதாவது ஒரு தொழிலை மேற்கொண்டால், அதனை இறுதிவரை, ஊக்கத்துடன் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால், பெரும்பாலும் இறுதியில் லாபகரமான வெற்றி கிடைக்கும்.

இதைவிடுத்து இடையில்கஷ்ட நஷ்டங்கள் கண்டு, மனம் தளர்ந்து, அத்தொழிலை இடையில் நிறுத்திக்கொண்டால், மேலும் அதிக கஷ்ட நஷ்டங்கள்

விளையும். இத்துடன் தொழில் துறையில் மீண்டும் ஈடுபடவும் இயலாதபடி நாணயமற்றவராக்கி விடும்.

சொல்லுதல் யார்க்கும்
எளிய-அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

வாணிப-கைத்தொழில்கள், துறையில் வெறும் வாய்ச் சவடாலால் கருதிய பலன் ஏற்படாது.

இது செய்யலாம், அது செய்யலாம் என்று பேசிக்கொட்டுவது மிக எளிது. ஆனால் சொல்லியபடி,சொல்லியவற்றைச் செய்து முடிப்பது மிகக் கடினம்-அசாத்தியமுமாகலாம்.

தொழில் துறையில் வாயளவு வாக்குறுதிகள் தருவதும் எளிதாகலாம். ஆனால் அவற்றை நிறைவேற்றுவதோ, கடினமாகலாம். சொல்லியபடி செய்ய வியலாவிட்டால் தொழில் துறையில் நாணயமும், மதிப்பும் நம்பிக்கையும் பாதிக்கப்படும்.

எனவே, சாத்திய நிலவரத்துக்கு ஏற்றபடி, அதுவும் அவசியப்பட்டால், கொஞ்சம் ஏற்றக் குறைச்சலாகப் பேசலாம். அசாத்திய கற்பனை, ஏமாற்றுப் பேச்சுக்களும் வாக்கு வாதங்களும் கூடாது.

வீறு எய்தி மாண்டார்
வினைத்திட்பம் வேந்தன் கண்
ஊறு எய்தி உள்ளப்படும்.

இவ்வாறு வெறும் வாய்ச் செயல் வீரராக இராமல்; செயல் துறை வீரராக, புதுமைகளைச் செய்து தாமும் முன்னேற்றம் அடைந்தும், பிறருக்கும் முன்னேற வழி காட்டியும், வழி செய்தும், பெயரும் புகழும் பெற்று உயர்நிலை அடைதல் வேண்டும்.

இத்தகைய செயல் உறுதி, செயல் மேதைகளை, அரசும் நன்கு மதித்து, பெருமைப் படுத்தும். மேலும் பல ஆக்கத்துறை நல் தொழில்கள் செய்ய நல்லரசும் ஊக்கமும் உதவியும் தரும்.

நாம் ஏதேதோ சாதிக்கவேண்டும்-தொழில் மன்னனாகவேண்டும். என்று நம் மனதில் பற்பல ஆர்வ எண்ணங்கள் துளிர்விடுவது இயல்பு-ஆனால் இவற்றைச் செயல்படுத்திப் பலன் காண்பது சாத்தியமா என்ற பிரச்சினை எழலாம்.

"எண்ணிய எண்ணியாங்கு
எய்துவர் எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

எண்ணிய திட்டங்களை செயல்படுத்த, மன உறுதியும், ஊக்கமும் விடாமுயற்சியும், தேவை. இப்படி ஊக்கமும், உறுதியும், விடாமுயற்சியும், கொண்டால், நாம் எண்ணியவற்றை எப்படியும் செய்து முடிக்கவியலும். வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்றபடி கணிசமான அளவாவது முடிப்பது உறுதி.

இத்தகைய பெருஞ் செயல்களைச் சாதிக்க ஆள் மதிப்பும், பண மதிப்பும் தேவை என்று உலகில் பொதுப்படைக் கருத்து உலவி வருவது அறிந்ததே-இது உண்மையா?

மேதைகள், மகான்களில் பல்லோர், ஆள் மதிப்போ பண மதிப்போ அடி நாளில் கொண்டிருக்கவில்லை என்பது அவர்களது வரலாறுகளை நுணுகிப் படித்தால் தெளிவுபடும்.

"சே, இவனா?" - என்று அடிநாளில் ஒதுக்கப்பட்டவர்கள். வறுமையில் உழன்றவர்கள் கலை மேதைகளிலும், வணிக-தொழில் மேதைகளிலும் பல்லோர் உள்ளனர்.

மேதைகளும், செல்வ மன்னர்களும் ஆனபிறகும் கூட அவர்களுடைய உருவத் தோற்றம் "என்ன! இந்த ஆளா?-நம்ப முடியவில்லையே!" என்று வியப்புறச் செய்யும்.

இவர்களில் பலருடைய பேச்சும், செயலும் ஆடையணிகளும் 'கீழ்ப்பாக்கம் மேதாவிகள் மாளிகை" வாசிகளின் தோழர்களோ இவர்கள் என்றும் அய்யுறச் செய்வதும் உண்டு.

ஆள் தோற்றத்தைக் கண்டு, தாழ்மை மதிப்பிடுதல் தகாதது. அது சரியான மதிப்பீடும் அல்ல என்கிறார் திருவள்ளுவப்பெரியார்

உருவு கண்டு எள்ளாமை
வேண்டும் உருள் பெருந்
தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

ஓர் ஆளின் உருவத் தோற்றத்தைக் கண்டதும், அவருடைய அறிவையும் ஆற்றலையும் குறைவாக மதிப்பிட்டு, அவரைக் கேவலமாகவும், தாழ்மையாகவும் நினைத்தலும், நடத்தலும் ஆகாது.

அழகலங்காரத் தேர் பிரம்மாண்டமானது. பல்லாயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது. ஆனால் அச்சாணி இல்லாவிட்டால் அந்தத் தேர் முச்சாணும் ஓடாது. மாபெரும் தேருக்கும் ஒரு சாண் அச்சாணி இன்றியமையாதது.

அந்த அச்சாணியோ உருவில் மிகமிகச் சிறியது. தோற்றமும் அழகற்றது. இந்த அழகற்ற சிறு அச்சாணிதான் தேர் ஓடுவதற்கு உயிர்ச் சாதனமாக உள்ளது.

இதே போல் மனிதர்களிலும், உருவத் தோற்றத்தில் கவர்ச்சியில்லாதவராகவும், குறைபாடு உற்றவராகவும் "ஆள்மதிப்பு" இல்லாதவர்களாகவும் இருந்தாலும்கூட, அவர்களிடம் சமுதாயத் தேர் இயங்குவதற்கு இன்றியமையாத திறமையும், ஆக்கும் சூட்சம அறிவும் இருக்கலாம். அறிவு மேதைகளாகவும் செயல் வீரர்களாகவும் இவர்கள் இருக்கலாம்.

எனவே, தொழில் துறையில் வெறும் ஆள் தோற்றத்தை மதிப்பிடாமல் அறிவையும் செயலாற்றலையும் கணித்தறிந்து பயன்படுதல் முக்கியமானதாகும்.

தொழில்களில் லாபத்தையும், வெற்றியையும் மாத்திரம் எதிர்பார்ப்பது வீண் கற்பனை. ஆறிடும் மேடும் மடுவும் போன்றது.

வாணிப-தொழில் துறைகள் திடீரென விற்பனை பெருகும். திடீரென விற்பனை படுத்துப் போகும். திடீரென லாபம் வந்து கொட்டும். திடீரெனப்

பெரு நஷ்டப் பள்ளத்தில் தள்ளி விடும்.

இவற்றைச் சமாளிக்கத் தகுந்த படி நமது மனதையும் பண்படுத்திக்கொள்ள வேண்டும்.

கலங்காது கண்ட வினைக்
கண் துலங்காது
தூக்கம் கடிந்து செயல்.

கஷ்ட, நஷ்டம் சிரமம் அவதி கண்டு, மனம் கலங்கலாகாது. ஒரு தொழில் அல்லது ஒரு வாணிபத்தில்கஷ்ட நஷ்டம் ஏற்பட்டால், பின்னர் நல்ல வாய்ப்பை எதிர்பார்த்து, மன அமைதியுடன் இருக்கவேண்டும்.

அதாவது ஓடுமீனோட உறுமீன் வருமளவும் காத்திருக்கும் கொக்கைப் போல, நல்ல நிலவரத்தை எதிர்பார்த்து, கருத்து செலுத்தியபடி, காத்திருக்க வேண்டும்.

ஒரு தொழிலிலோ, ஒரு பொருள் வாணிபத்திலோ, கஷ்ட நஷ்டம் ஏற்பட்டால் அவற்றில் ஒரு புதுமை மாற்றத்தை அல்லது புதுமையைச் செய்து புதுகிராக்கிப் பிடிக்கலாம். அல்லது வேறு தொழிலிலோ, வேறு பண்டங்கள் வியாபாரத்திலோ கருத்துச் செலுத்தலாம்.

மனச்சோர்வு என்பது, தொழில் துறையினருக்கு ஏற்பட இடமே விடலாகாது. வாய்ப்பும், வசதியும், காலமும் கிடைத்தவுடன் காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

உடுமலைக் கவிஞர் அறிவுறுத்தியபடி "தொட்ட காரியத்தை முட்டின்றி முடிப்பதே சுந்த வைராக்கியமாகும்.'

துன்பம் உறவரினும்
செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

முடிவில் லாபம் தரும், நல்ல பலன் தரும் என்று தோன்றக் கூடிய அதற்கான சாத்தியக்கூறுகள் உள்ள தொழிலை-இடையே பற்பல துன்பங்களும் முட்டுக்கட்டைகளும் அடுக்கடுக்காக வந்தபோதிலும், மனம் தளராமலும், செயலில் சுணங்காமலும், தொடர்ந்து செய்து முடித்தே தீரவேண்டும். பாதி ஆறு தாண்டும் போக்கு வாணிகத்திலோ, தொழில் துறையிலோ கூடவே கூடாது. எது வரினும் வரட்டும் என்ற பிடிவாதத்துடன் செயலாற்றி அதனை முடிக்கவேண்டும்.

எனைத் திட்பம் எய்தியக்
கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது
உலகு.

சிலருக்கு உடலுறுதி இருக்கலாம். பேச்சில் வல்லமை இருக்கலாம். ஆள் பலத்திலே வலிமை இருக்கலாம். பண பலமும் இருக்கலாம். அறிவு ஆற்றலும் இருக்கலாம். படிப்புப் புலமையும் இருக்கலாம்.

ஆனால் தொழில் துறையில் மனஉறுதியில்லாவிட்டால், அவர் வாழ்க்கையில் வெற்றி பெறவே முடியாது. இத்துடன் உலகத்தாரும் அவனை மதிக்கமாட்டார்கள்.

"பிழைக்கத் தெரியாத பேதை உருப்படாதவன்"-என்று உலகத்தோர் எள்ளி நகையாடுவர்-அவனை ஒதுக்கித் தள்ளுவர்.

—நவ இந்தியா

எண்ணமும் எழுத்தும்!

எண்ணம் என்றால் என்ன? எழுத்து என்றால் என்ன? எண்ணம் எவ்வாறு பிறந்தது? எழுத்து எவ்வாறு பிறந்தது? எண்ணத்திற்கும் எழுத்திற்கும் உள்ள ஒட்டென்ன, உறவென்ன, பாசமென்ன? எண்ணம் எவ்வாறு இருக்கவேண்டும்? எழுத்து எவ்வாறு இருக்க வேண்டும்? எண்ணத்தின் பயனென்ன—? எழுத்தின் பயனென்ன? இவை போன்ற பல வினாக்கள் எழுப்பி, அவ் வினாக்களுக்கு விடை இறுக்கும் முகத்தான் இக் கட்டுரையைத் தொடங்குதல் சாலச்சிறப்பு.

"வையம் ஈன்ற தொல்மக்கள் உளத்தினைக்
கையி னால்உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பைந்தமிழ்"

என்று திரு நீ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் மொழி வாழ்த்தாகத் தமிழ்த்தாயை ஏற்றிப் புகழ்கிறார். ஈண்டு 'உளத்தினை' என்பது எண்ணம் தோன்றும், தோற்றுவிக்கப்படும் நிலைக்களத்தினை உணர்த்திற்று. ஆகவே எண்ணம் உள்ளத்தினின்று தோன்றுகிறது; உள்ளம் ஒவ்வொரு உயிரின் உரிமைப் படைப்பு. இதை எவராலும் மறுக்கவோ-மறைக்கவோ-அழிக்கவோ முடியாது.

காட்டிலும் மேட்டிலும் திரிந்து பண்பட்டா வாழ்க்கை நடத்திய ஆதிமனிதன் தனது உள்ளத்தை—எண்ணத்தைப் புலப்படுத்த கை சைகை செய்த காலம் நீங்க, படிப்படியாக, மெல்ல மெல்ல ஆதி மனிதனுடைய நாவை அசைத்து மொழியைப் பேசவைத்தது பைந்தமிழ் என்பது இதனால் பெறப்படும் உண்மையாகும். எனவே, மனிதன் நாகரிக முதிர்ச்சியால் கைக்குறி-கட்குறி-ஒலிக் குறி முதலியவற்றான் எண்ணத்தைக்—கருத்தை உணர்த்திப் பின்னே எழுத்து எழுந்தது என்பது ஒருதலை.

எழுத்து எவ்வாறு எழும்பிற்றேவெனின் இயற்கையின் கூறுபாடுகளான் ஒலிவா—ஒலிகாட்டும் படம்வா — படம்காட்டும் குறிவா—குறி (காட்டும்) தரும் எழுத்துவா; எழுதும் கருவி எழு, எழுத்து அமைதல், கூடுமெனும் கூற்று ஆராய்ச்சிப் புலவனுக்குத் தெளிவாகுமன்றோ! எண்ணத்தினின்று எழுத்து எழுந்தது; எழுத்து எழுதுதற்கு கருத்து துணையாக, கருவியாக இருந்தது. கருவியாக இருக்கும் காரணத்தாற்றான் கருத்து என்னும் பெயர் பெற்றது போலும்! எழுத்தின் பிறப்பிடம் எண்ணம். ஒலி வடிவம் வரிவடிவமாக மாறியது; மாற்றப்பட்டது;

ஒலிக்கும் உரு கொடுத்தது எண்ணம்; எண்ணத்தின் பிரதிபலிப்பு எழுத்து.

எண்ணமும் எழுத்தும் ஒன்றற்கொன்று தொடர்புடையன; துணை செய்வன. நாம் நடந்து செல்கிறோம். நம் மேலுள்ள ஆடை, காற்றால் அசைகிறது; அசைகிற நம் ஆடையால் காற்று அசைகிறது. இதைப் போலத்தான் எண்ணமும் எழுத்தும். எள்ளிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கிறோம். அதுபோல் எண்ணத்திலிருந்தும் பிழிந்தெடுக்கப்படுவது எழுத்து. எண்ணெயிலிருந்து எள் எடுத்தல் முடியாது. ஆனால், எழுத்திலிருந்து எண்ணம் தோன்றக் காண்கிறோம். இதுவொன்றே எண்ணத்திற்கும் எழுத்திற்கும் உள்ள உறவை விளக்கச் சாலுமன்றோ!

தொட்டனைத்-தூறும் மணற்கேணியைப் போலத் தடுப்புச் சக்திகள் தலைவிரித்தாடும் இடத்தில் இவ்விரண்டின் எதிர்ப்புச் சக்தியும், ஒத்துழைப்பும் போற்றுதற்குரியதே! மிகப் பரந்து விரிந்த கடற்பரப்பு. காற்று கடலில் வீசுகிறது, வீசுகிற காற்றால் அலை ஏற்படுகிறது. அலை காற்றை அசைக்கிறது. காற்று அலையை அசைக்கிறது. இது போன்ற பலசிறு அலைகள் ஒன்று சேர்ந்து பேரலைகளாக மாறுகின்றன. 'எங்கோ' எனப் பிறந்த சிறு அலைகள், 'எங்கோ' எனப்பிறந்து விடுகின்றன — பேரலைகளாக! இவ் அலைகள் சக்தி வாய்ந்தவை; ஒன்றன்பின் ஒன்றாகக் கரைநோக்கிப் படையெடுக்கின்றன; பெருங்காற்றை உடனழைத்துக் கரையை நோக்கி வீசச் செய்கின்றன. கரையில் தடுப்புகளாகப் பெரும் பாறைகள் இருக்க அவற்றின் மீது 'சலார் ...... சலார்......' என்று தன் அலைக்கரங்களால் அடித்து, அணு அணுவாகக் கரைக்கின்றன. அப்பாறை கரைந்து— தேய்ந்து தடுப்பு நீங்குமட்டும், அங்கே அலைக்கரங்கள் தம் வேலையைச் செய்து கொண்டேதான் இருக்கும். 'ஓ' என்ற கடல் முழக்கம் ஓயாது கேட்டுக் கொண்டேதான் இருக்கும். இங்கே, கடல் முழக்கம்—காற்று எண்ணமாகவும், அலைக்கரங்கள் எழுத்தாகவும் எண்ணிப் பாருங்கள்!

எண்ணம் மாறிக்கொண்டே இருக்கிறது. மாற்றிக் கொண்டே இருக்கிறோம் மாற்றிக்கொண்டே இருக்க வேண்டும். நமது ஆடைகள் பருவ வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் ஏற்ப மாறிக் கொண்டே இருக்கின்றன — மாற்றிக் கொண்டே இருக்கிறோம். மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். ஒரு காலத்தில் உலகம் 'தட்டை' என்று எண்ணி நம்பிய காலம் போய் இப்பொழுது உலகம் உருண்டைதான் என்று எண்ணக் கூடிய காலம் வந்துள்ளது. இக்காலத்தும் உலகம் தட்டைதான் என்று அடம் பிடித்துத் தனது எண்ணத்தை மாற்றிக்கொள்ளாத

ஒருவன், பாரித்த உடல் பெற்ற ஒருவன் தான் இளவயதில் அணிந்த சட்டையை அணிந்தாலோ—அணியமுற்பட்டாலோ அவன் பலரால் எள்ளி நகையாடப்பட்டுப் பரிகசிப்பிற்கு ஆளாவதோடு மட்டும் அல்லாமல் அறியாமை இருளில் சிக்கித் தவிக்கும் அறிவிலிக்கு அண்ணன் தம்பியாகிறான். இதைப் போன்றே எழுத்தும் சுற்றுப்புறத்திற்கும் சூழ்நிலைக்கும், காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ப மாற வேண்டும்; மாற்றியாக வேண்டும்.

எண்ணத்தையும் எழுத்தையும் நேரிய வழியில் செலுத்தாதவர், நேரான பாதையில் கப்பலைச் செலுத்தாத மாலுமி இடையிலேயே பேரலைகளுக்கும், பெருமீன்களுக்கும், பெரும்பாறைகளுக்கும், சூறுவளிக்கும் இலக்காகி அலக்கழிவது போலப் பல துன்பங்களுக்கும் ஆளாகிச் சீரழிந்து தமக்கும் பிறருக்கும் பயன்படாது மறைவர். மேனாட்டறிஞர் 'ரஸ்கின்' கூறுவது இது:- "நாம் கட்டிடம் கட்டும் போது அது நிரந்தரமாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கட்டுவோம். தற்காலிக மகிழ்ச்சிக்காகவோ உபயோகத்திற்காகவோ நாம் அதனைக் கட்டக் கூடாது. நாம் கட்டி வைத்த கட்டிடத்திற்காக நமது சந்ததியார் நம்மை வந்தனம் செய்யட்டும். நாம் சமைக்கின்ற கட்டிடத்தின் ஒவ்வொரு கல்லும் புனிதமானது என்று நமது சந்ததியார் சொல்லும்படியாக இருக்கட்டும்."

நமது எண்ணமும் எழுத்தும் ஆட்சியின் அறமற்ற அதிகாரத்திற்கும், ஆசைமொழி பேசும் பணத்திற்கும் அடங்கி ஒடுங்குதல் கூடாது. "அதிகாரத்தால் எழுப்பப்பட்ட அரண்மனைகளை விட சிந்தனையால் (எண்ணத்தால்) எழுதப்பட்ட சீரிய ஏடுகளே (எழுத்துக்களே) நெடுங்காலம் நிலைத்து நிற்கும், இது உண்மை. வெறுங் கற்பனை அல்ல" — என்று, 'பிரான்ஸிஸ் பேகன்' கூறுகிறார். இலக்கியம், கலை, கல்வி, அரசியல், சமூகம், பொருளாதாரம் போன்ற துறைகளில் மக்களை ஏற்ற முடிவும் மாற்ற முடிவும் எண்ணமும் எழுத்தும் உறுதுணையாக இருக்க வேண்டும். நல்லன இவையெனமக்கள் உணர—உணர்த்த; திருந்த—திருத்த எண்ணமும் எழுத்தும் பயன்பட வேண்டும்.

"மனம் எவ்விடத்தில் அச்சமின்றி உலவுகிறதோ; குறுகிய எண்ணங்கள் எவ்விடத்தில் குடி கொள்ளாமல் இருக்கின்றனவோ; சொற்கள் எவ்விடத்தில் வாய்மையின் ஆழத்திலிருந்து பிறக்கின்றனவோ; சளையாத உழைப்பு எவ்விடத்தில் முழுத்தன்மையைப் பயணம் செய்து கொண்டிருக்கிறதோ; பகுத்தறிவு என்ற தெளிந்த நீரோடை எவ்விடத்தில் செத்துப்போன பழக்க வழக்கம் என்னும் வறண்ட பாலைவனத்தில் புகுந்து மறையாமல் இருக்கிறதோ அந்த சுதந்திரப் பூமியை நோக்கி என் நாடு

செல்லட்டும்" "என்று வங்கக் கவிஞர் தாகூர் கூறுகிறார். அந்த சுதந்திரப் பூமியில் நம் நாடு அங்கம் வகிக்க வேண்டுமானால் எண்ணமும் எழுத்தும் நாட்டிற்கே பயன்படட்டும்; அல்லும் பகலும் அயராது உழைத்து உயரும் ஒல்லும் வழி அடையட்டும். ஆகவே, எண்ணமும் எழுத்தும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவே உறுதுணையாக இருக்க வேண்டும்.

"நாம் எவ்வளவு எண்ணுகிறோம் — எழுதுகிறோம் என்பது முக்கியமன்று. எத்தகையதை எண்ணுகிறோம்—எழுதுகிறோம் என்பதே முக்கியம்" என்றான் ஓர் அறிஞன் ஆகவே தான்,

"சென்ற விடத்தாற் செல
விடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு"
—என்று

குறள் ஓதும் வள்ளுவனார் குரல் கேட்கிறது.

'மார்க்ஸ் அரேலியர்', "உன் வாழ்க்கை உன் நினைவுகளால் ஆக்கப்படுகிறது." என்று கூறுகிறார். ஆகவே, எண்ணத்திற்காகத்தான் எழுத்து. எழுத்திற்காக எண்ணமல்ல! எண்ணம் மாறினால் எழுத்து மாறும். எழுத்து மாறினால் எண்ணம்மாறி இருக்க வேண்டும். இதைத்தான், "எழுத்து மாற்றம் மக்கள் எண்ணத்தின் மாற்றம்' — என்று அறிஞர் அண்ணா கூறுகிறார்.

ஆகவே, காலத்திற்கேற்ப கருத்துக்கள் மாறவேண்டும். கருத்துக்களைக் காலத்திற்கேற்ப மாற்றித் தீரவேண்டும். காலத்திற்காகத் தான் கருத்துக்கள். கருத்துக்களுக்காக காலம் அல்ல!

மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிலம் விளைகிறது. வானம் (மழை) விளைவிக்கிறது. ஆகவே, மக்கள் வாழ நிலமென்னும் எண்ணமும் வானமென்னும் எழுத்தும் இன்றியமையாததே! மொழி வாழ்க்கையின் விழி! மொழியை (எழுத்தை)க் கட்டுப்படுத்தினால் வாழ்க்கையை வளப்படுத்த முடியாது. வாழ்க்கையின் வழியை—மக்களுக்குப் பயன்படும் பொதுவழியை அடைத்தல் அறிவுடைமை ஆகாது. எழுத்தைக் கட்டுப்படுத்தினால் மழை காணுப் பயிராக மக்கள் மாறுவது திண்ணம். ஆகவே வாழ்க்கையின் வழி எப்போதும், எக்காலத்தும், எவ்விடத்தும் திறந்தே இருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் உண்மையான பயனை அடைந்து நுகர முடியும்.

" எனது உள்ளம் அதுவே எனக்குக் கிடைத்துள்ளசாம்ராஜ்யம். அது தருகின்ற இன்பத்துக்கு ஈடு இணை இந்த உலகத்திலே வேறு கிடையாது" என்று 'எட்வர்ட் டையர்' புது உலகம் படைத்து இன்பங்காண்கிறார் ஒருபுறம். "ஒருதேசம் சிந்திக்கத் தொடங்கிவிடுமானால் அதன் வேகத்தை நிறுத்த யாராலும் முடியாது" என்று பிரெஞ்சு புரட்சிக்கு வித்திட்ட வால்டேயர்

சிந்தனையின் — எண்ணத்தின் வலிமை கண்டுவியக்கின்றார் ஒரு புறம். "மனிதன் எண்ணம் அவன் எண்ணத்தால் ஆக்கப்படுகிறான்"—என்று தமிழ்த்தென்றல் திரு. வி. க. ஆய்ந்து அறிந்து நுணுக்கம் காண்கிறார் ஒருபுறம். "சிந்திக்கத் தெரியாதவன் அறிவிலி; தன் சிந்தனையை எடுத்துக் கூறப் பயப்படுபவன் கோழை; தன் சிந்தனையை மாற்றிக் கூறுபவன் துரோகி" என்று சிறப்பு பெற்றீய்ந்த 'சாக்ரடீஸ்' கூறுகிறார் ஒருபுறம். "சிந்தனை இல்லாத மனிதனிடம் சிறப்பை எதிர்பார்க்க முடியாது" என்று 'பெர்டின்டோல்' கூறுகிறார் ஒருபுறம். "சிந்தனை மூட நம்பிக்கையின் எதிரி; பகுத்தறிவின் தோழன்; முன்னேற்றத்தின் வழிகாட்டி; இன்பத்தின் இருப்பிடம்' என்று உலகம் புகழும் நாடக ஆசிரியர் 'ஷேக்ஸ்பியர்' சொர்க்கவாசலுக்கு அழைக்கிறார் மற்றொருபுறம். இக்கூற்றுக்கள் அனைத்தும் சிந்தனையின் சிறப்பை — எண்ணத்தின் திண்ணிய பயனை விளக்குதல் கண்கூடு.

போர்முனைக்கு வணங்கா முடி மன்னர்கள், எழுதுகோல் முனைக்குத் தலைவணக்கம் செலுத்தியதைச் சங்க இலக்கியங்களில் காண்கின்றோம். இக்காலத்தும் அணுகுண்டு போன்ற புதிய போர்க்கருவிகளின் ஆற்றலைவிட எழுதுகோலின் ஆற்றல் வலிமை மிக்கது; சிறப்பு மிக்கது. ஆகவே தான் "அறிவாளியின் கையிலுள்ள எழுதுகோல் மையின் கறை, போர் வீரனின் கையில் உள்ள இரத்தக் கறையைவிடப் புனிதமானது"-என்று முகமது நபி கூறுகிறார். எண்ணத்தில் ஊற்றெடுத்து உருப்பெற்று எழுத்தினைத் தொட்டனைத் தூறும் மணற் கேணியைப்போல அதைக் கற்றனைத்தூறும் அறிவு.

வாழ்விற்கு எழுத்தின் துணை வேண்டற்பாலது. ஒவ்வொன்றிற்கும் வாழ்வில் அனுபவம் பெற்று நல்லன தீயன காண்பதற்குள் வாழ்வு முடிந்து விடுகிறது. எழுத்தின் துணைகொண்டால் அதன்கண் போந்துள்ள நல்லன —வாழ்வில் கொள்ளத்தக்கன. இன்ன இன்ன என்றும்; தீயன வாழ்வில் தள்ளத்தக்கன இன்ன இன்ன என்றும் அறிவுறுத்தும். எனவே எழுத்தறிவு மிக மிக வேண்டற்பாலதும் இன்றியமையாததும் ஆகும். தன்னலமே உருக்கொண்ட தலைவர்களும் மூட நம்பிக்கையில் அறியாமை வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த பாமர மக்களும் இழைத்து வந்த இன்னல்களுக்கும், கொடுமைகளுக்கும் அஞ்சி, கொடும் நஞ்சுண்ட 'சாக்ரட்டீஸ்' 'அரிஸ்டாட்டில்', 'பிளேட்டோ', கல்லடிபட்ட கலிலியோ, சிறையில் அறையப்பட்ட ஏசு -போன்ற சிந்தனைச் சிற்பிகள் தங்கள் சிந்தனை ஊற்றில்; எண்ணத்தில் தூறுபடிய விட்டிருந்தாலோ; அல்லது எண்ணத்தில் ஊட்டிய நன்னீரை — எண்ணக் குவியல்களை உலகுக்கு எழுத்து வடிவில் வழங்காது விட்டிருந்

தாலோ உலகம்இன்றுள்ள நிலையிலிருக்குமா? ஆகவேதான்,

"எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே!
—அதன்
முந்தையர் ஆயிரம்
ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே!
—அவர்
சிந்தையில் ஆயிரம்
எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே!
—இதை
வந்தனை கூறி
மனதில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ?"

என்று அமர கவி-பாரதியார் நாட்டு வாழ்த்தில் எண்ணத்தின் பெரும்பயனை விதந்தோதுகின்றார்.

எண்ணம் ஒரு மலர் அது கட்டவிழ்ந்தது; அழகு மிக்கது; மணமிக்கது கவர்ச்சி மிக்கது. நாள் தோறும் புதுப் புது மலர்கள் பூத்துக் கொண்டேதான் இருக்கின்றன; செந்தேன் வழங்கிக் கொண்டேதான் இருக்கின்றன; உலகம் பயனடைந்து கொண்டேதான் இருக்கிறது. எழுத்து அதன் காய் - காலம் காயைக் கனியாக்குகிறது. இப்பொழுது தான் மலரின் முழுப் பயனை அடைய முடிகிறது. ஆனால், இத்துடன் மலர் தன் வேலையை விட்டுவிடவில்லை. கனியினுள் கருவை விதையை ஊன்றி விடுகிறது. மலர் பிஞ்சாகி காயாகி, கனியாகி, கருவாகிறது —விதையாகிறது. விதை மறுபடியும் மலராகி முன் கதையைப் பின்பற்றி நடக்கிறது. இது ஒரு முடியாத, முடிக்க முடியாத தொடர் கதை. இதைப் போலத் தான் எண்ணமும் எழுத்தும், எண்ணம் எழுத்தாகிறது. எழுத்து எண்ணமாகிறது. இவை இரண்டும் இவ்வாறு சுழன்று கொண்டே காலத்தை உருட்டிக்கொண்டே செல்கிறது. இவற்றில் உருப்பெறுவதுதான் உலகியல் வாழ்க்கை. ஆகவே எண்ணம் ஒரு மலர். எழுத்து அதன் காய். எண்ணமும் எழுத்தும் ஆக்கவேலைக்குப் பயன்படும் போது அது பழுத்த பழமாகிறது. எனவே, எண்ணமும் எழுத்தும் மக்கள் ஆக்கத்திற்காகவே பயன் படட்டும்; பயன் படுத்தட்டும்!

எண்ணம் வாழ்க!

எழுத்து சிறப்புறுக!

உங்களுக்குத் தெரியுமா ?

[S. தியாகராஜன், B.SC., L.T.]

1. *நாம் ஏன் இமைக்கிறோம்?*

கண் கிரந்திகளிலிருந்து திரவம் கண்ணின் மேல் பாகத்தில் எல்லா இடங்களிலும் சமமாகப்பரவி, அப்பாகத்தில் தூசி இருந்தால் அதை அகற்றவும், எப்பொழுதும் ஈரமாக வைத்துக்கொள்ளவும் கண் இமையைச் சிமிட்டுகிறோம்.

2. *கண்ணிற்கு அதிகமான வேலை கொடுத்தால் கண்ணில் நீர் வடிகிறது ஏன்?*

அதிகமான வேலைகொடுக்கும்பொழுது அதிகமான கழிவுப் பொருள் உண்டாகிறது. அதை அகற்ற அதிகமான இரத்தம் கண்ணிற்குச் செல்கிறது. கண்ணீர் கிரந்திகளுக்கும் அதிகமான இரத்தம் செல்லுகிறது. கண்ணீர் அதிகமாக உண்டாகி கண்ணில் வடிகிறது. இது கண்ணைக் குளிர்ச்சியாக வைக்க உதவுகிறது.

3. *அதிக வெளிச்சம் உள்ள இடத்திற்குச் சென்றால் கண் கூசுகிறது. ஏன் ?*

கண்ணில் உள்ள ஐரிஸ், வெளிச்சத்திற்குத் தகுந்தவாறு பாபாவை சீர்படுத்திக்கொள்வதற்குள் அதிகமான வெளிச்சம் கண்ணிற்குச் செல்வதால் கண் கூசுகிறது.

4. *அதிக வெளிச்சம் உள்ள இடத்திலிருந்து குறைவான வெளிச்சம் உள்ள இடத்திற்கு வந்தால் ஒன்றுமே தெரியவில்லை. ஏன் ?*

அதிகமான வெளிச்சம் உள்ள இடத்தில் கண்ணின் பாபா மிகவும் குறுகியிருக்கிறது. அதனால் திடீரென்று வெளிச்சம் குறைவான இடத்திற்கு வந்தவுடன் அங்குள்ள பொருள்களைப் பார்ப்பதற்கு வேண்டிய வெளிச்சம் கண்ணிற்குச் செல்ல முடியவில்லை. அதனால் ஒன்றும் தெரியவில்லை,

5. *இரண்டு கண்களிலும் ஒரு பொருளின் பிம்பம் ஏற்பட்ட போதிலும் நமக்கு ஒரே பிம்பத்தின் உணர்ச்சி ஏற்படுகிறது. ஏன்?*

இரண்டு கண்களிலிருந்தும் மூளைக்குச் செல்லும், பார்ப்பதற்குக் காரணமாக உள்ள நரம்புகள், மூளைக்குச் செல்லுமுன் ஒன்று சேருகின்றன. அதனால்தான் நமக்கு ஒரே பிம்பத்தின் உணர்ச்சி ஏற்படுகிறது.

6. சில சமயங்களில் காதில் பாட்டுபோன்ற சப்தம் உண்டாகிறது ஏன்?

காதின் உள்பாகம் வீங்கிக்கொள்கிறது. அப்பொழுது இரத்தம் அக்குழாய்களின் வழியாக சாதாரணமாக நேராகச் செல்வதுபோல் அல்லாமல் சற்றுத் தடையுடன் செல்லுகிறது. அப்பொழுது அந்த சப்தம் உண்டாகிறது.

7. நாக்கின் நுனியில் சிறிது சர்க்கரை வைத்தால் ருசி தெரியவில்லை ஏன் ?

சுவையை அறிவிக்கும் நரம்புகள் அங்கு இல்லாததால் தெரியவில்லை.

8. குளிர்ச்சியிலிருந்து உடனே உஷ்ணம் ஏற்பட்டால் ஊசி குத்துவதுபோல் உணர்ச்சி ஏற்படுகிறது ஏன்?

உஷ்ணம் சுருங்கிய தோலை விரிவடையச் செய்கிறது. இரத்தம் அப்பாகங்களுக்குத் தாராளமாகச் செல்ல ஆரம்பிக்கிறது. நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படுகிறது. மேலே சொன்ன இரண்டு காரணங்களால்தான் ஊசி குத்துவதுபோன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இவ்வுணர்ச்சி அப்பாகம் முழுவதும் இரத்தம் தாராளமாக ஓடும் வரை இருக்கிறது.

9. நாம் ஏன் தும்முகிறோம்?

நம் மூக்கில் ஏதாவது ஒரு பொருள் சென்றுவிட்டால், அது நரம்புகளைத் தாக்குகிறது. உடனே சுவாச மண்டல அவயவங்கள் அதை வெளியே அனுப்ப யத்தனிக்கின்றன. அப்பொழுது பலமான காற்று மூக்கின் வழியாக அனுப்பப்படுகிறது. இதைத்தான் தும்மல் என்கிறோம்.

10. இருமல் ஏன் உண்டாகிறது?

காற்றுக் குழாயில் ஏதாவது ஒரு புதிய பொருள் உள்ளே வந்துவிட்டால் அது தொந்தரவு கொடுக்கிறது. சுவாசகோசம் பலமான காற்றை அனுப்ப அதை விரட்ட யத்தனிக்கிறது. அதைத் தான் இருமல் என்கிறோம்.

11. குளிர் நாடுகளில் தண்ணீர் செல்லும் குழாய்கள் உடைந்து விடுகின்றன. ஏன்?

குளிர் நாடுகளில் குளிர்ச்சி அதிகமாக ஏற்படும்பொழுது தண்ணீர் ஐஸ்ஸாக மாறுகிறது. அப்பொழுது அது பருமனில் அதிகரிக்கிறது. அதனால் குழாய்கள் உடைந்துவிடுகின்றன.

12. துருவப் பிரதேசத்தில் வாழும் கரடி ஆறுமாதம் தூங்குகிறது. ஏன்?

குளிர்ப் பிரதேசத்தில் முக்கியமாக துருவப் பிரதேசத்தில் ஆறு மாதம் ஒரே பனியாக இருக்கும். அதன் பிறகு பனி சுமாராக உருகி விடும். பனியால் மூடியிருக்கும்பொழுது பிராணிகளுக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்காது. பனி உருகிச் சில நாட்களுக்குப் பின் பிராணிகளுக்கு ஆகாரம் சுலபமாகக் கிடைக்கும். அதனால்தான் கரடி ஆகாரத்திற்கு சிரமம் ஏற்பட்டவுடன் ஒருதனி இடம் தேடி அங்கு ஆறுமாதம்வரை தூங்குகிறது. ஆகாரம் கிடைக்கக்கூடிய காலம் வந்தவுடன் அது தூக்கத்தைவிட்டு வெளிவருகிறது.

13. நாம் இரவில் சஞ்சரிப்பது கடினம். ஏன்? ஆனால் புலி, பூனை இரவில் இரைதேட முடிகிறது?

இரவில் Infra-red கதிர்கள் உள்ளன. இக்கதிர்கள் உதவியால் புலியும், பூனையும் தங்கள் இரையை நன்றாகப் பார்க்கமுடியும். நம் கண்களால் இக்கதிர்களின் உதவிகொண்டுபொருள்களைப்பார்க்கமுடியாது.

14. (Burglar Alaram) திருடனைக் கண்டுபிடிக்க உதவும் மணி எவ்வாறு வேலை செய்யும்?

Burglar Alaram என்ற சாதனத்தில் சிலீனியம் என்ற உலோகம் உள்ளது. இந்த உலோகம் Infra-red கதிர்களை கிரகித்து மணியை இயங்கச் செய்யும், திருடன் உள்ளே நுழையும்பொழுது அவன்மேல் படும் Infra-red கதிர்கள் பிரதிபலிக்கப்பட்டு சிலீனியத்தின் மேல்பட்டு மணியை இயங்கச் செய்யும்.

15. அநேக வீடுகளில் மனிதர்கள் வெளியே செல்லுமுன் சாணம் தெளிப்பதேன்.

சாணம் கலந்த நீர் ஒரு கிருமி நாசினி. வீட்டைவிட்டு வெளியே செல்லும்பொழுது கிருமிகள் அணுகாமல் பாதுகாக்கவும், வெளிக்கிருமிகள் வீட்டினுள் வராமல் பாதுகாக்கவும் உதவுகிறது.

(சென்ற இதழ் 48-ம் பக்கம் தொடர்ச்சி)

நான் கண்ட அமெரிக்கா

[ஆர். காந்திமதி எம். ஏ., பி. டி.]

ஆனால், இந்த மாதிரி நடப்பது வெகு துர்லபம்! குழந்தைகளாலேயே வரும்படியைப் பெருக்கும் ஹோட்டல்கள் சுற்றிலும் இருக்கின்றன! குறிப்பிட்ட அந்த ஹோட்டல் முதலாளி ஒரு அசாதாரணமான பேர்வழிபோல் இருக்கிறது என்று அங்கு மாணவர்கள் பேசிக் கொண்டனர். இதன் முடிவாக மாணவ மாணவிகள் அனைவரும் அந்த ஹோட்டலையே முற்றிலும் 'பாய்காட்' செய்து விட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்குத்தான் எவ்வளவு திமிர்! சில மாணவிகள் சாப்பிட்டுக்கொண்டே மணிக் கணக்காகவும் ஹோட்டலிலேயே ஒரு மூலையில் உட்கார்ந்து அரட்டை அடிப்பதைப் பார்த்திருக்கிறேன். "ஏன்" என்று கேட்பார் இல்லை!

அதுவும் பண்டிகை சீஸன்கள் வந்தால் பள்ளிக்கூடம் விட்ட பிறகு கடைவீதி முழுவதும் குழந்தைகள் தான்! எந்தக் கடையிலும் அங்கே பெரியவர்களானாலும் சின்னவர்களானாலும் ஒரே விலைதான்! அந்நாட்டில் எந்த ஷாப்புகளிலும் பண்டங்களை நாம் தொட்டுப்பார்த்துப் பரீட்சிக்கும் நிலையில்தான் பகட்டாகப் பரப்பி வைத்திருக்கிறார்கள்.

அதற்காக அக்குழந்தைகள் கடைகளில் நுழைந்தால் தாறுமாறாக நடப்பதும் இல்லை. கடைகளில் எடுத்ததை எடுத்த இடத்தில் வைத்துவிட்டு அப்பால் நகருவார்கள். ஐந்தாறு வயதுச் சிறுவர்கள் கும்பலாகக் கடையில் நுழைந்து சுற்றி வந்தாலும் சிப்பந்திகள் "அவர்கள் என்ன செய்து விடுவார்களோ" என்று பயப்படமாட்டார்கள். காரியம் தொழில் என்று வரும்போது பால் மணம் மாறாத அந்தக் குழந்தைகளும் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் தெரியுமா?

எங்கள் பள்ளிக்கு எதிரே ஒரு பிரம்மாண்டமான புத்தகக் கடை. அதில் சிறுவர் பகுதியும் உண்டு. அதில் ஐந்து வயதிலிருந்து பதினெட்டு வயதுவரை உள்ள பாலர்களுக்கு வேண்டிய அத்தனை சஞ்சிகைகளும், புத்தகங்களும் விற்கப்படுகின்றன. பள்ளிக்கூடம் விட்டுப் போகும் போதெல்லாம் அந்தக் கடையில் சிறுவர்கள் ஈ மொய்க்கிற மாதிரி தான் சூழ்ந்து கொண்டிருப்பார்கள். வார மாத சஞ்சிகை முதலியவற்றை வாங்குகிறார்களோ இல்லையோ, அதைப் பற்றிக் கேள்வி இல்லை. தங்களுக்கு வேண்டிய சஞ்சிகையைச் சாவதானமாக எடுத்துப் புரட்டிப் படிப்பார்கள். சில சிறுவர்கள், அங்கேயே மூலையில் இடம் இருந்தால் உட்கார்ந்தும் படிக்கத் தொடங்குவார்கள். தங்களுக்குப்

பிடித்தமான தொடர் கதை முதலியவற்றைப் படித்துமுடித்த பிறகு அப்படியே திருப்பி இருந்த இடத்தில் வைத்துவிட்டு அப்பால் நகர்ந்து போய் விடுவார்கள். "காசு கொடுத்து வாங்கிப் படி" என்று அவர்களை அதிர்ந்து சொல்வார் கிடையாது. நம் ஊரில் என்றால், "இது என்ன நூல் நிலையம் என்று நினைத்தீர்கள்?" என்று கடைக்காரர்கள் விரட்டிவிடலாம், அவர்களை! அத்துடன் நம்மவர்களுக்குக் கடைக்கு வந்தும் ஏதும் வாங்காமல் வெளியேறினால் சில வேளைகளில் கோபமும் வருவது உண்டு.

"இன்றைக்கு வாங்கா விட்டால் பரவாயில்லை. நம்முடைய பண்டங்களை நன்றாகத் தொட்டு ஆராய்ந்துவிட்டு திருப்தியுடன் வெளியேறினால் கண்டிப்பாக நாளை அல்லது மற்றொரு நாள் பணத்துடன் வந்து வாங்கிக் கொண்டு செல்வார்கள் மக்கள்" என்றுதான் அந்நாட்டு வணிகர்கள் நினைத்து உறுதியுடன் காணப்படுகின்றனர்.

அங்கே பசியோ, தரித்திரமோ இன்னதென்று அறியாதவர்கள் குழந்தைகள்! வீட்டிலும் சுயேச்சை; பள்ளிக்கூடத்திலும் ஓரளவுக்குத் தான் கட்டுப்பாடு; சமூகத்திலும் அவர்களுக்கு ஒரு தனிச் சலுகை; அரசாங்க வட்டாரத்திலிருந்தும் அவர்களுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் பிரத்தியேகப் பாதுகாப்பு முன்னேற்ற முறைகள் இயங்குகின்றன!

இவ்விதமான சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் தேகதிடத்திலும், மனோ தைரியத்திலும், எவ்வளவு வளம்பெற அமைந்து வருவார்கள் என்பதை நான் இங்கு விரிவாகச் சொல்லத் தேவையில்லை. தங்கு தடையின்றி அமைந்திருக்கும் அவர்களின் போக்கு அவர்களை எவ்வளவு விரைவாக வாழ்க்கைப் பாதையில் முன்னேற்றிக் கொண்டு போகிறது என்பதைக் கவனித்தால் நம்மால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

தைரியம்தான் வாழ்க்கையில் முன்னேற உதவும் பிரதானப்படி. இது அமெரிக்கக் குழந்தைகளுக்கு சிறு பொழுதிலிருந்தே எப்படியோ பரிபூரணமாக அமைந்துவிடுகிறது. இதற்குப் பெற்றோர் கொடுக்கும் பயிற்சியும், அவர்கள் சமூகத்தின் முற்போக்கான தன்மையும், அவர்கள் வாழும் சூழ்நிலையுமே முக்கிய காரணங்கள் என நாம் திட்டமாகக் கொள்ளலாம்.

—'ஆனந்த விகடன்'

★
★★

பரமபதம், அரசியலில்!

[டாக்டர் மு. வரதராசனுர் எம். ஏ., எம். ஓ. எல்.]

. இரவு ஒன்பது மணிக்குமேல் செய்தித்தாளைப் படித்து முடித்து விட்டு மேசைமேல் இருந்த தாயுமானவர் பாடலை எடுத்துத் திறந்தேன். கிளிக்கண்ணி வந்தது. இசையோடு அந்தக் கண்ணிகளைப் பாடிக்கொண்டிருந்தேன். பக்கத்து வீட்டிலிருந்து 'ஒன்று,'' ''மூன்று,'' ''எட்டு'' என்ற ஒலிகள் விடாமல் கேட்டு வந்தன. நான் அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து கிளிக்கண்ணி பாடிக்கொண்டிருந்தேன். ''ஏணி ஏணி'' என்ற குரல்கள் பக்கத்து வீட்டிலிருந்து கேட்டன. ''இந்த நேரத்தில் இப்படி ஏதோ வேலையும் ஆரவாரமுமாக இருக்கிறார்களே'' என்று வெறுப்போடு எண்ணிக்கொண்டு என் பாட்டைப் பாடிக்கொண்டே இருந்தேன். மறுபடியும் ''நாலு,'' ''இரண்டு'' என்ற குரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன. திடீரென்று ''பாம்பு, பாம்பு'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் புத்தகத்தை வைத்து விட்டு எழுந்தேன். கொல்லென்று சிரிக்கும் குரல் கேட்டது. மறுபடியும் ''ஏணி'' ''மூன்று'' முதலான குரல்கள் கேட்டன. அப்போதுதான், அன்று ஏகாதசி என்பதும், பக்கத்து வீட்டார் தாயம் ஆடிக்கொண்டு 'பரமபத சோபனம்' என்னும் படத்தை வைத்துப் பொழுது போக்குகின்றார்கள் என்பதும் உணர்ந்தேன்.

அன்று காலையில்தான் நண்பர் ஒருவர் பார்த்து, ''இன்று இரவு எங்கள் கம்பெனியில் சேர்வீர்களா?'' என்று கேட்டார்.

''என்ன கம்பெனி?'' என்றேன்.

''நீங்கள் எல்லாம் பெரியவர்கள்; எங்களோடு சேர்வீர்களா?'' என்றார் நண்பர்.

அப்போதும் ஒன்றும் விளங்காமல், ''இந்தப் பெரியவர்—சின்னவர் பேச்சு என் அகராதியில் இல்லை. என்ன செய்தி? சொல்லுங்கள்'' என்று கேட்டேன்.

''இன்றுஇரவுசினிமா பார்த்துவிட்டுச் சீட்டு ஆடுவதற்குத்தான் ஏகாதசி, தெரியாதா?'' என்றார்

''ஏகாதசிக்குக் கண்விழிக்கும் வழக்கம் இல்லை'' என்று நான் சொல்லி முடிப்பதற்குள், ''சரி, சரி; தெரிந்துகொண்டேன். நீங்கள் எல்லாம் கடவுளுக்கு எதிர்கட்சி'' என்று ஒரு கிறுக்குப் பார்வை பார்த்து நடந்தார்.

ஒன்று, எட்டு, ஏணி, பாம்பு என்று சொல்லிப் பரமபத சோபன ஆட்டம் ஆடியவர்களுக்கும் என்னைப்பற்றி இந்த எண்ணந்தான் இருக்கும். கடவுளின் பெயரைச் சொல்லிக் கண்விழித்துச் சீட்டு ஆடுவதும், சினிமா பார்ப்பதும், ஏணி, பாம்பு என்று

சுத்திக்கொண்டு தாயம் ஆடுவதுமே ஆத்திக நெறியாக உலகம் கருதுகின்றது. ஆனால் நல்லொழுக்கத்தோடு நடந்தாலும், தாயுமானவர் பாடலைப் பாடி உணர்ந்தாலும், மற்றவர்களைப் போல் கண் மூடி வழக்கங்களில் மூழ்கியிருக்கவில்லையானால் கடவுளுக்கு எதிர் கட்சியாக உலகம் கருதுகின்றது.

சினிமா பார்த்தல் கூடாது என்று சொல்லவில்லை. கலையுலகில் அதன் சிறப்பையும் செல்வாக்கையும் வெல்லவல்லது வேறு எதுவும் இல்லை. ஆனால் ஏகாதசி இரவில் அமைதியாகத் தூங்குவது குற்றம் என்றும், சினிமா பார்ப்பது கடவுள் நெறி என்றும் சொல்லுவதுதான் வேடிக்கை. சீட்டு ஆடுவது ஒரு கலை என்றால் அதன் மதிப்பை அளவிட்ட பிறகு தான் முடிவுக்கு வரவேண்டும். ஏணி-பாம்பு மயமாகி விளங்கும் பரமபத சோபன படத்தைப் பார்த்துக்கொண்டு தாயம் ஆடுவது அமைதியான உறக்கத்தைவிட உயர்ந்தது தானா? வாழ்க்கையில் ஒவ்வொன்றுக்கும் காரணம் கண்டு ஆறுதல்பெறும் வழி ஒன்று உண்டு. அதன்படி, ஏகாதசியன்று எப்படியாவது கண் விழித்தால் நல்ல பயன் உண்டு; அன்று நாளும் கோளும் சூழ்வும் அப்படிப் பட்டவை என்று ஆறுதல் அடைவோரும் உண்டு. ஒரு நாள், அளவாக உண்ணும் அரிசிச் சோற்றையும் காய்கறியையும் மிளகு நீரையும் மறந்து, நாவிற்கினிய தின்பண்டம் பலவற்றையும் பல வகைப் பழங்களோடும் படிக் கணக்கான பாலோடும் சேர்த்து அளவு மீறி வயிற்றை நிரப்பிய போதிலும், ஒரு பொழுது என்று பெயரிட்டு உடலுக்கு நல்லது என்று காரணம் கூறி ஆறுதல் அடைவோரும் உண்டு. இவ்வாறு காரணம் ஒன்றும் காணாமல் "புண்ணியம்" என்ற ஒரு சொல்லையே நினைத்துக் கொண்டு ஆறுதல் அடைகின்றவர்களும் உண்டு. ஆனால், 'கடவுளுக்கு எதிர்கட்சி' என்றுபுறக்கணித்துப் பார்த்து நடந்த நண்பர் கூட்டம் எவ்வாறு ஆறுதல் அடைகின்றதோ? அல்லது உண்மையாகவே புண்ணியம் என்று நம்பித் தான் சீட்டும் சினிமாவுமாக ஓர் இரவைக் கழிக்கத் துணிந்ததோ?

பக்கத்து வீட்டுப் பரமபத கூட்டமோ இந்த நண்பர் கூட்டத்தைவிட எள்ளளவும் உயர்வானது அல்ல; உண்மையாகப் பார்த்தால் தாழ்ந்த கூட்டந்தான். நண்பராவது, சினிமாவுக்கும் சீட்டுக்கும் வரும்படியாக என்னை அழைத்தார். இந்தப் பரமபதக் கூட்டம்என்னை வருமாறு அழைக்கவே இல்லை. அழைக்காமல் விட்டாலும் கவலை இல்லை. நண்பர் வெளிப்படையாகக் கடிந்து சொன்னதுபோல் இந்தக் கூட்டம் சொல்லாது. இந்த ஆள் இன்றைக்கு ஒரு நாளாவது கண் விழிக்கக் கூடாதா? கண்விழித்தால் உடம்பு கெட்டுவிடுமா? தலையா முழுகிப் போய்விடும்? என்னவோ வழக்கம்போல் பைங்

கிளியே பைங்கிளியே என்று கத்திவிட்டுப்படுத்துத் தூங்கிவிட்டாரோ போகட்டும். அவருக்கு நரகம்தான். அதுவும் நமக்கு நல்லதுதான். நமக்கு சுவர்க்கத்தில் உட்காருவதற்குக் கொஞ்சம் தாராளமாக இடம் கிடைக்கும்” என்று மனத்திற்குள்ளேயே எண்ணிக்கொள்வார்கள். இந்தக் கூட்டம் ஆடும் ஆட்டமும் அப்படித்தான். ஆடுகின்ற ஆட்களில் ஒவ்வொருவரும் தான் மட்டும் எப்படியாவது பெரிய பெரிய ஏணிகளை ஏறிப்பரமபதத்தை அடைந்து விட வேண்டும் என்றும், மற்றவர்கள் பாம்புகளின் வாயிலே அகப்பட்டு விழுந்து விழுந்து கீழே கிடக்க வேண்டும் என்றுதான் எண்ணி ஆடுகிறார்கள். அதனால் தான், ஏணி கிடைத்தபோது, ஒருவர் மட்டும் மகிழ்கின்றார். பாம்பு வாய்த்தபோது மற்றவர்கள் சேர்ந்து ஆரவாரம் செய்கின்றார்கள். தாயம் உருளும்போது ஒன்று வந்தாலும் எட்டு வந்தாலும் கவலைப்படாமல், மற்றவர்க்கு நரகம் வரவேண்டும் என்றும் தங்களுக்குமட்டும் பரமபத ஏணி கிட்டவேண்டும் என்றும் கவலைப்பட்டு உருட்டுகின்றார்கள்.

இன்று உள்ள பொதுமக்களின் கடவுள்நெறி இந்தப்பரமபத ஆட்டம்போலவே இருக்கின்றது. அவரவர்கள் கடவுளைப்பற்றி எண்ணும்போதோ, வழிபடும்போதோ, தங்கள் தங்களுக்கு மட்டும் வீடுவாசல் செல்வாக்கு இன்பம் எல்லாம் கிடைக்க வேண்டும் என்றும், மற்றவர்களை விடத்தாங்கள் மட்டும் உயர்வாக வாழவேண்டும் என்றும், எதிரிகளை நசுக்கித் தாழ்த்த வேண்டும் என்றும் கடவுளை வேண்டுகின்றார்கள். இப்படி அருச்சனை பூசை எல்லாம் செய்கின்றவர்களும் உண்டு. சுருங்கச் சொன்னால், தன்னலமே இன்று பொதுமக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கின்றது; அன்பும் அல்ல, அருளும் அல்ல, மெய்யுணர்வும் அல்ல. தங்கள் தனிப்பட்ட ஆசை எல்லாம் நிறைவேறுவதற்குக் கடவுள் நெறி பயன்படும் என்பதே அவர்கள் கொள்கை. முயற்சியோ, அறிவோ, கூட்டுறவோ, பொதுநல வேட்கையோ பயன்படாது என்றே எண்ணுகின்றார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு, ‘எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே’ என்ற தாயுமானவர் கருத்து வேம்புபோல் கசப்பாகத்தான் இருக்கும். பலகாரங்களை விழுங்கிவிட்டுத் தூங்காமல் கண்விழித்துப் பரமபதம் ஆடுவது ஒன்றையே நேரான நல்வழியாகக் கொண்டவர்கள், உலகத் தொண்டே உண்மையான தொண்டு என்று கூறுவதை நம்புவார்களா? கடவுளே வந்து சொன்னாலும் நம்பமாட்டார்கள்.

இந்தப் போக்கு, சமய உலகத்தில் மட்டும் நின்று விட்டால் கவலை இல்லை. ஆனால் இது மற்றத்துறைகளிலும் அப்படியே பரவிக் கேடு விளைவிக்கின்றது. இன்று பொதுமக்களின் அரசியல்

வாழ்க்கை ஊழலாக இருப்பதற்கு இதுவே காரணம். பொதுமக்கள் அரசியலில் முன்னேறுதலவரை யில், எவ்வளவு சிறந்த தலைவர்கள் வழி காட்டினாலும் நாட்டில் அல்லலும் குழப்பமும் மலிந்து கொண்டே இருக்கும். பொது மக்கள் அரசியலுக்கு வருவ தில்லை; வந்தாலும் எட்டி எட்டிப் பார்க்கின்றார்கள். உள் ளே நுழைந்தாலும், கடமையை மறந்து கொள்கைகளை மறந்து பரமபத சோபன ஆட்டமே ஆடுகின்றார்கள். தங்களுக்கு மட் டும் ஏணி வரவேண்டும், மற்றவர் கள் பாம்பின்வாயில் விழுந்து கீழேபோகவேண்டும் என்பது தான் அவர்களுடைய அரசியல் வேட்கை. தாயக்காயில் நம் பிக்கை இருப்பது போலவே, அர சியலிலும் எப்படியாவது யாரா லாவது திடீரென்று ஏணி கிடைக்கும் என்று நம்புகின்றார் கள். பரமபதம் ஆடுகின்றவர் களுக்குத் தன்னம்பிக்கை இருக்க முடியாது. ஆடுகின்ற மனித னுடைய அறிவுக்கும் ஆற்றலுக் கும் அங்கே வேலை இல்லை. அந்தக் காகிதப் படத்தையும் தாயக்காய் களையும் பொறுத்தே ஏணியும் பாம்பும் மாறி மாறி வந்து உயர்த் தியும் தாழ்த்தியும் ஆடுகின்றவர் களை ஆட்டிவைக்கும். ஆனால், அரசியல் இதற்கு நேர்மாறானது. மக்களின் அறிவும் ஆற்றலும் திரண்டு எழும் வெள்ளமே அரசி யல். அந்த அரசியலில் தன்னம் பிக்கை இல்லாத மக்கள் நிறைந் திருந்தால், நாடு எப்படி முன் னேறமுடியும்? இந்த மக்களைத் தலைவர்கள் எவ்வாறு உயர்த்த முடியும்? இயக்க முடியும்? தலை வர்களே நேரில் வந்து திருத்தினா லும் இவர்கள் திருந்துவார்களா?

பொதுமக்கள் இவ்வாறு தன் னம்பிக்கை அற்றவர்களாகப் பரம பதம் ஆடும்போது, தலைவர்களில் சிலர் களைத்து 'ஏங்கிச் சலித்து நிற்கும் நிலை வருகின் றது. அப்பொழுது, 'அரசியல் ஒரு சாய்க்கடை' 'என்றோ, 'பொதுமக்கள் கண்மூடிக் குழந் தைகள், நம்பத்தகாதவர்கள்' என்றோ பழி கூறிவிட்டு ஒதுங்கி விடுகின்றார்கள். ஆனால் சிலர், அவர்கள் தன்னம்பிக்கை அற்ற வர்களாக இருப்பதைப் பயன் படுத்திக்கொண்டு தங்கள் தந்தி ரத்தால் முன்னேறி அரசியல் ஏணிகளை அமைத்துக் கொண்டு உயரப் போய்விடுகின்றார்கள். ஒருசிலர் மட்டும், பொதுமக்கள் மேல் உண்மையான அன்பு கொண்டு, அவர்களோடு சேர்ந்து பரமபத ஆட்டமே ஆடி ஆடி, எல்லாருடைய நம்பிக்கையும் திரளும் வாய்ப்புக்காகக் காத்தி ருக்கிறார்கள். வாய்ப்புக் கிடைத் ததும், "இனிமேல் ஒரே வழி தான். எல்லாப்பொறுப்பையும் முழுவதுமாக என் கையில் ஒப்பு வித்தால்தான் நாட்டுக்கு நன்மை செய்ய முடியும்" என்று நம்பும் படியாகச் சொல்லிச் சர்வாதிகாரி களாக மாறுகின்றார்கள். இந்தச் சர்வாதிகாரிகள் கொடுங்கோலர் களாக மாறி உலகத்திற்குத் தீங்கு

(அடுத்த பக்கம் பார்க்க)

முன்னேற்றம் எல்லாம் 35—க்கு முன்!

35 வயதுக்குக் குறைவான இளைஞர்களே விஞ்ஞானப் புதுமைகளில் பெரும்பாலானவற்றைக் கண்டுபிடித்திருக்கின்றனர் என்றால் அதுவும் வியப்பாகவே தோன்றக் கூடும். ஆனால் இது முற்றிலும் உண்மை.

வியப்பூட்டும் விஞ்ஞானப் புதுமைகளும் கண்டுபிடிப்புக்களும் மனிதனின் முன்னேற்றத்திற்கும், வாழ்க்கை வளம் பெறவும் பெரிதும் பயன்பட்டு வந்திருக்கின்றன.

துணிச்சல் மிக்க இளைஞர்கள் விஞ்ஞான சாதனைகள் பல புரிந்துள்ளனர்; இச் சாதனைகளின் பலனாக மனிதன் மேன்மையடைந்துள்ளான்.

ஒரு மனிதனின் வாழ்க்கையிலே, வாலிபப் பருவம் தான் குறிப்பிடத் தக்க தசை; வயதானவர்கள் அளவுக்கு மிஞ்சி ஜாக்கிரதையாக இருக்கின்றனர். தம் இனத்தவரின் நலனை மட்டும் நாடும் குணம் படைத்தவர்களாகி விடுகின்றனர். வரலாறு நிரூபிக்கும் உண்மை இது.

தற்கால வைத்திய முறையின் தந்தை என்ற கவுரவம் பெற்றவர் ஹிப்பாகிரேட்டீஸ். இவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். மூடப் பழக்க வழக்கங்கள் மலிந்த காலத்தில், நோய்களைத் தீர்க்கத் தாயத்துக்கள் கட்டும் பழக்கம் இருந்த காலத்தில் வாழ்ந்தவர். அவர் வாலிபராக இருக்கையிலேயே இத்தகைய மூடப் பழக்கத்திலிருந்து வைத்தியத்தை மீட்ட பெருமை அவரைச் சாரும். வைத்தியமும் செய்து வந்த பூசாரிகளை அவர் எதிர்த்தார். அவர்களுக்குச் சவால் விடுத்தார். கடவுளின் கோபத்திற்கு ஆளாவது தான் நோய்க்குக் காரணம் என்று பூசாரி வைத்தியர்கள் நம்பி வந்தனர். நோய் காண்பது சாதாரண உலகக் காரணங்களினால்தான் என்று முதன் முதலில் எடுத்துரைத்தவர் ஹிப்பாகிரேட்டீஸ். நோய்களை மிக ஜாக்கிரதையாகக் கவனித்து அறிந்துகொள்ளுதல், நோய்களைக் குணப்படுத்தும் முறைகளைச் சோதித்து அறிதல்,

(முன்பக்கத் தொடர்ச்சி)

செய்த கதையும் உண்டு; தாங்களே முடிவில் அழிந்த கதையும் உண்டு; ஆனால் சர்வாதிகாரிகள் தோன்றக் காரணம் யார்? கடமையும்கொள்கையும் மறந்து தன்னம்பிக்கை அற்று அரசியலில் பரமபதம் ஆடும் பொதுமக்கள் அல்லவா?

நோயின் தன்மையை முன் கூட்டியே சொல்லுதல் முதலிய வைத்திய முறைகளை அவரும் அவருடைய இளம் சகாக்களும் வகுத்தனர். நோய்கள் பெரும் பாலும் கொள்ளை நோய்களாகவும் மாறிவிடலாம் என்று அவர்கள் முதன் முதலாக நிரூபித்தனர்.

கோபர்னிகஸ்

கோபர்னிகஸ் என்ற வான இயல் வல்லுநர் 20 வயது நிறை வதற்கு முன்னாலேயே, வான இயலில் வேரூன்றியிருந்த சில கொள்கைகளையும், நம்பிக்கை களையும் உடைத்தெறிந்தார். பிரபஞ்சத்தின் மையத்தில் இருப்பது சூரியன் என்றும் பூமி யல்லவென்றும் அவர் கூறினார். துணிச்சலாக இவ்வாறு கூறிய தற்கு அவர் நாஸ்திகர் என்றும் அஞ்ஞானி என்றும், பேதபுத்தி படைத்தவர் என்றும் தூற்றப் பட்டார். அவருடைய சகாக் களில் பலர் உயிருடன் எரிக்கப் பட்டனர். மூப்பு ஏற்பட்ட காலத்திலும் கூட கோபர்னிகஸ் தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளவில்லை. ஆனால் அவற்றை முழுவதும் வெளியிட அஞ் சினார்.

வெஸாலியஸ்

20 வயது கூட நிரம்பாத வெஸாலியஸ் என்ற உடற்கூற் றியல் வல்லுநர் கேலன் என்ப வரின் போதனைகளைத் துணிச்ச லுடன் தூக்கி எறிந்தார். 1,300 ஆண்டுகளாக கேலன் போதனை கள்தான் வேதவாக்காக இருந்து வந்தன. வெஸாலியஸ் துளிக் கூட விட்டுக் கொடுக்கவில்லை. பிடிவாதமாக இருந்தார். 23-வது வயதில் உடற் கூற்றியல் பேரா சிரியரானார். மனிதனின் உடற் கூறு பற்றி அவர் ஒரு நூல் எழுதிப் பிரசுரித்த போது, அவருக்கு வயது 29 தான்.

ஹார்வி

ஆங்கிலேய டாக்டரான ஹார்வி இரத்த ஓட்டம் பற்றிய தமது புரட்சிகரமான கருத்தை வெளியிட்டபோது, அவருக்கு 30 வயதுதான் ஆகியிருந்தது. இந்தக் கருத்துக்கு அவர் பெற்ற வசைமாரி கொஞ்ச நஞ்சமல்ல.

நியூட்டன்

உணர்ச்சி வயப்படும் சுபா வம் படைத்த ஸர் ஐஸக் நியூட் டன் என்ற பிரசித்திபெற்ற ஆங்கிலேய விஞ்ஞானி, 25 வயது ஆவதற்கு முன்பேயே புவியின் ஈர்ப்பு, இயக்கம் ஆகியவற்றைப் பற்றித் தமது கொள்கைகளை வரையறுத்துக் கூறினார். ஒளி பற்றி ஏற்கனவே இருந்து வந்த தத்துவங்களை அடியோடு மாற்றி விட்டார். கால்குலஸ் என்ற கணித முறையைக் கண்டுபிடித் தார். அவரும் தவறுகள் புரிந் தார். பிறகு அவற்றைத் திருத் திக்கொண்டார்.

ஐன்ஸ்டைன்

நமது தலைமுறையில் வாழ்ந்து வந்த ஜெர்மன் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் பொது சார்பு நிலைக் கொள்கை, விசேஷ சார்பு நிலைக் கொள்கை, குவான்டம் கொள் கை முதலியவற்றைக் கண்டு

பிடித்த போது, அவருக்கு வயது 25 தான்.

விஞ்ஞானத்தின் வரலாறு பற்றி அண்மையில் நடத்தப்பட்ட சிறப்பான ஆராய்ச்சி, மாபெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் நூற்றுக்கு 95 விஞ்ஞானிகள் 35-வது வயதை அடைவதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டன; இன்னும் அவ்வாறு கண்டுபிடிக் கப்பட்டு வருகின்றன என்ற உண்மையைப் புலப்படுத்தியது. இந்த வயதிற்குப் பிறகு முதன் முதலாகக் கண்டுபிடிக்கும் ஆற்றல் மிகவும் குறைந்துவிடு கிறது.

ஏன் என்று கேள்வி பிறப்பது இயற்கையே. தேவையான உத் வேகம், ஊக்கம், ஆக்க வேலைக்கு வேண்டிய மன வலிமை, உடல் வலிமை முதலியன வாலிபர் களிடம் இருக்கின்றன என்று பதில் கிடைக்கும். சிந்தனை செய்யும் முறையில் வாலிப விஞ் ஞானிகள் சம்பிரதாய முறை யையே கடைப் பிடிக்கும் நிலைக்கு இன்னும் வரவில்லை; அத்துடன் தங்களுடைய சக விஞ்ஞானிகள் தங்களைப் பற்றி என்ன நினைக் கின்றனர் என்பதிலும் அவர் களுக்கு அக்கறை இல்லை. ஆகை யால் அலட்சியமாக இருக்கும் துணிவு அவர்களுக்கு ஏற்பட்டு, ஏற்கனவே இருந்து வரும் கொள்கைகள் நம்பிக்கைகளுக்கு சவால் விடுகின்றனர். பிரபல கல்வியாளர்கள் ஒருவர் ஒரு சமயம் "இளைஞர்களுக்குத்தான் எதிர்நீச்சு அடிக்க முடியும்" எனக் கூறினர்.

கவுரவம், மதிப்பு, அந்தஸ்து முதலியவையுடன் கூடிய வய தானவர்கள் தங்களுடைய நிலைக்குப் பழுது ஏற்படக் கூடிய முறையிலே அவசரமாகப் பணி புரிய மாட்டார்கள்.

சீட்டுக் கொடுக்கவா?

அப்படியானல் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குச் சீட்டுக் கொடுத்து, வீட்டிற்கு அனுப்பி விட வேண்டியதுதானே என்ற கேள்வி எழக் கூடும். இவர்களும் மதிப்புமிக்க சேவைகளைத் தொடர்ந்து புரிந்து வருகின் றனர் என்று உடனேயே பதில் சொல்லிவிட வேண்டியிருக் கிறது. தாங்கள் வாலிபர்களாக இருந்த காலத்தில் செய்த முக்கிய கண்டுபிடிப்புகளின் விஸ்தரிப்பை அடிப்படையாகக் கொண்ட பணி தான் இவர்கள் வயதான பிறகு அனேகமாகச் செய்து வருவது.

சீரான முறையில் விஞ்ஞான வளர்ச்சிக்குத் தேவையான மனே பக்குவமும், சீர் தூக்கிப் பார்க் கும் ஆற்றலும் வயது வந்தவர் களிடம் உண்டு. வாலிபர் களுக்குப் பயிற்சி அளிக்கத் தேவையான அனுபவமும் அவர் களிடம் உண்டு. நாளைய விஞ் ஞான முட்டுக்கட்டைகளை உடைப்பவர்கள் வாலிபர்கள். அவர்கள் இப்பொழுது அதைச் செய்து வருகின்றனர்; தொடர்ந் தும் செய்து வருவர். இளமையும் முதிர்ச்சியும் சேர்ந்து பணி யாற்றுவது இணைபிரிக்க முடி யாத, அசைக்க முடியாத ஒரு கட்டு ஆகும். —**நல்வழி**

சொற்களைக் கூட்டும் முறை

(வித்துவான் பெ. அண்ணாமலை ரெட்டியார்,
தலைமைத் தமிழாசிரியர்,
தூய கேபிரியல் உயர்நிலைப்பள்ளி, சென்னை 1.)

எழுத்துக்களால் ஆகிப் பொருள்தரின் சொல்லாம். சொல், மொழி, பதம், வார்த்தை என்பன ஒரு பொருள் குறித்த பலசொற்கள். அச்சொல் ஓரெழுத் தொருமொழி, பலவெழுத் தொருமொழி என இருவகைப் படும். ஓரெழுத்தாயிருப்பினும் பொருள் கொண்டிருந்தால் சொல்லேயாகும். உதாரணமாக ஆ (பசு), ஈ, ஏ (அம்பு), ஐ (அழகு), கா (சோலை), தா (கொடு), நா (நாக்கு), பா (பாட்டு), மா (மரம்), வா, தீ, நீ, பூ, சே (எருது), கை, தை, பை, மை, வை, கோ (தலைவன்), போ, கௌ போன்ற எழுத்துக்கள் பொருள் பயந்து சொற்களாதலைக் காண்க. இச்சொற்களைக் கூட்ட வேண்டிய அவசியமே இல்லை. இரண்டு எழுத்துக்கள் தொடங்கிச் சுமார் பதினாறு எழுத்துக்கள் வரை அமைந்திருப்பவை பலவெழுத்துச் சொற்களாம். மோர் ஈரெழுத்து மொழி. வார்த்துக்கொண்டிருக்கின்றார்கள் 16 எழுத்துக்களாகிய மொழி. ஐந்து, ஆறு எழுத்துக்களைக் கொண்ட சொற்களைப் பிள்ளைகள் முதலில் கூட்டி உச்சரித்தும், பிறகு கூட்டாமல் உச்சரித்தும் பழகுகின்றனர். ஏழு முதல் பதினாறு எழுத்துக்களைப் பெற்றுள்ள சொற்களைப் பல முறை கூட்டிய பின்னரே சரியாக உச்சரிப்பர். கடின வார்த்தைகளாகவும், பேச்சு வழக்கில் வழங்காதவைகளாகவும் உள்ள சொற்களை உச்சரித்தல் சிறிது கடினமாகும்.

எழுத்துக்களைக் கூட்டிச் சொற்களை விரைவாகப் படிக்கும் தன்மை கண்களுக்கும் மனத்திற்கும் அளிக்கும் பயிற்சியைப் பொறுத்தது. முதல் வகுப்பு மாணவர்கள், ஆரம்பத்திலேயே பலவெழுத்துச் சொற்களைக் கூட்டாமல்வாசிப்பர் என்பதற்கில்லை. ஈரெழுத்து மொழி தொடங்கிப் படிபடியாகக் கற்பித்துக்கொண்டு வரக் கூட்டிப் படிக்கவும், அதன் பிறகு கூட்டாமற் படிக்கவும், இயலும். பொருள் விளங்காத கடின வார்த்தையைக் கூட்டி உச்சரிக்கச் செய்தால் மட்டும் போதாது. அச்சொல்லின் பொருளையும் விளக்க வேண்டும். இல்லையேல் அச் சொல்லின் உச்சரிப்பு அர்த்தமற்ற ஓசையாய் முடிவதை அறியலாம். கண்கள் ஒரே சமயத்தில்

பல வெழுத்துச் சொற்களைக் காண, வாய் அவ்வாறே உச்சரிக்கின்றது. கண்களால் அவ்வாறு பார்க்க முடியாத சொற்களையே கூட்டத் தொடங்குகின்றோம். கண் தனித்தனி எழுத்துக்களைக் காண, வாயும் தனித்தனியே உச்சரித்து வர இறுதியில் சொல் முழுவதும் கண்டு உச்சரிக்கப் படுவதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆங்கிலத்திலேயும் கூட்டும் முறைமை உண்டென்பதை அனைவரும் அறிவர். அம்முறை தமிழ் முறைக்கு முற்றிலும் மாறுபட்டதென்பதை உணர வேண்டும். ஆங்கிலத்திலே எழுத்துக்களின் ஓசை வேறு. அவ்வெழுத்துகளாலாகிய சொற்களின் ஓசை வேறு. ஆகையால், ஆங்கில எழுத்துக்களைக் கற்றுக்கொண்ட அளவிலேயே சொற்களைத் தாமே பயிலலாம் என்பதற்கில்லை. தமிழிலோ எழுத்துக்களின் ஓசையே சொல்லோசையாய் அமைகின்றது. இக்காரணத்தினாலேயே தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொண்டால், மெல்லக் கூட்டிச் சொல்லோசையை எளிதில் அறிந்துகொள்ளலாம். ஆங்கிலத்தில் School, Master என்ற சொற்களில் School என்ற சொல்லின் எழுத்துக்களின் ஓசை அளவிலேயே உச்சரிக்கின் எஸ், ஸி, எச், ஓ, ஓ, யல் என்று அமைய வேண்டும். அவ்வாறு பொருந்தாமையால் ஸ்கூல் என்று உச்சரிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறே எம், ஏ, எஸ், டி, யி, ஆர் என்று உச்சரிக்காமல் மாஸ்டர் என்று உச்சரிக்கிறோம். காரணம் யாதெனில் ஆங்கிலத்தில் பல வெழுத்துக்களால் அமையும் ஓசைக்குத் தமிழிலே தனி எழுத்து உண்டு. இதனாலேயே, ஆங்கிலத்தில் குறைந்த எழுத்துக்களும் தமிழில் மிகுந்த எழுத்துக்களும்உள்ளதன்காரணமும்விளங்கும். தமிழ் நெட்டெழுத்தோசையெல்லாம் ஆங்கிலத்தில் கூட்டெழுத்தால் அமைவதைக்காணலாம். உதாரணமாகப் பே (bat) போ (Post) பா (Pot) என்ற சொற்களில் முதல் இரு எழுத்துகளைக் காண்க. தமிழிலே எழுத்து அதிகமாயிருப் பினும் சொற்களைக் கூட்டும் முறையில் ஆங்கிலத்திற் கிருப்பது போல் உச்சரிப்புத்துன்பம் தமிழில் இல்லாமையை உணர வேண்டும். இனிக் கூட்டு முறைகளைக் குறித்துக் கவனிப்போம்.

ஒரு சொல் உச்சரிக்க எளிதாயிருப்பதும், அரிதாயிருப்பதும் மாணவனைப் பொறுத்தது. அவன் அச்சொல்லை முன்பே கேட்டோ தானே பேசியோ இருந்தால், வரியெழுத்துக்களாலாகிய அதே சொல்லைக் கண்ணுற்றுகண்டு உச்சரிக்கவும் அவனுக்கு எளிதாகும்; இன்றேல் அரிதாகும். ஆரம்பத்திலேலே பேசுகின்றவாறு படிக்க இயலாது. கூட்டி உச்சரிக்கப் பழகிய பிறகுதான் அமையும்.

கூட்டும் முறை இருவகைப்படும். ஒன்று வரிசையாக எழுத்துக்களை உச்சரித்துப் பின் சொல்லை உச்சரித்தல். மற்றொன்று எழுத்துக்களை ஒன்றன்

பின் ஒன்றாக உச்சரித்து வருகையில் முதலெழுத்தோசையை இரண்டாமெழுத்துடனும், இரண்டையும் சேர்த்து மூன்றாம் எழுத்துடனும், இவ்வாறே இறுதி எழுத்துவரை சேர்த்துச் சேர்த்து உச்சரித்தல். உதாரணமாகத் திருமால் என்ற சொல்லைக் கூட்டுகையில் தி+ரு+மா+ல்=திருமால் என்று சொல்லுதல்; அல்லது தி+ரு (திரு) + மா (திருமா) +ல்=திருமால் என்று கூறுதல். இரண்டாம் முறை ஞாபக சக்தி மிகக் குறைந்த மாணவர்களுக்குத் தேவையாகும். முதலில் உச்சரித்த எழுத்து மறந்து போகாதிருக்கச் சேர்த்துச்சேர்த்துக் கூறி முடிக்கின்றனர். இவ்விரு முறைகளும் சாரியை சேர்த்துச் சொல்லுகையிலும் கையாளப்பட்டன; படுகின்றன. உதாரணமாக வேங்கடம் என்ற சொல்லை வேயன்னா+ங்ஙன்னா+கனா+டனா+ம்மன்னா= வேங்கடம் என்பர்; அல்லது வேயன்னா+ங்ஙன்னா (வேங்) +கனா (வேங்க)+டனா (வேங்கட)+ம்மன்னா=வேங்கடம் என்பர்; இவ்வாறு சாரியை கொடுத்துக் கூட்டும் முறை சாரியையில்லாது கூட்டும் முறையைக் காட்டிலும் அதிக காலத்தை வீணாக்குவதை அறியவேண்டும். இம்முறை இக்காலத்தில் பெரும்பாலும் கைவிடப்பட்டதென்பதை யாவரும் அறிவோம்.

சொற்களைக் கூட்டும் முறை தொடக்கத்தில் இன்றியமையாததாயினும் இம்முறையையே கடைசிவரையில் மேற்கொள்வதால் காலம் வீணாவதுடன் இயல்பாய்ச் சொற்களை உச்சரிக்கும் முறைக்கு மாறுபடுவதையும் நினைக்க வேண்டும். ஆகவே, பிள்ளைகள் எழுத்தின் வரிவடிவங்களைக் கண்களால் நன்றாக அறிந்துகொள்ளக் கூடிய சக்தி பெற்ற பின், நான்கெழுத்துக்கு மேற்கொண்ட சொற்களைக் கற்கத் தொடங்குகையில் ஒரு புதிய முறையைக் கையாண்டால், குறில், நெடில் வேறுபாடு விளங்காத குறை அறவே நீக்கப் படுவதுடன் இயல்பாய்ச் சொற்களை உச்சரிக்கும் முறைமை வளர்க்கப் படுவதையும், காலம் வீணாக்கப் படாமையையும், திருத்தமாக உச்சரிக்கப் படுவதையும், அது காரணமாகப் பிழையின்றி எழுதப் படுதலையும் காணலாம்.

புதிய முறை 1 :—

சொற்களில் மெய்யெழுத்துக்கள் விரவி வருதலை அறிவோம். அம்மெய்யெழுத்தை அதன் முன்புள்ள எழுத்தோடு சேர்த்து ஓரோசையாய் உச்சரித்தால் குறில் நெடில் வேறுபாறுபாடுகள் விளங்கும். உதாரணமாகப் பட்டணம் என்ற சொல்லைத் தனித்தனி எழுத்துக்களாகக் கூட்டாமல், பட் + ட +ணம் என்று மூன்றோசை அளவிலே கூறப் பழக்கினால் பட், ட, ணம் என்று சொல்லுகையில் ப, ண, இவற்றின் குற்றோசை தெளிவாய் ஒலித்தலைக் கேட்கலாம். அவ்வாறே பாட்—டன் என்று ஈரோசையாய்ப் பிரித்துக் கூட்டு

கையில் பாட் என்ற பகுதியில் 'பா'வின் நெட்டோசை நன்கு ஒலித்தலை அறியலாம். இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்துள்ள வார்த்தைகளைத் தேய்த் - தான், தாய்ப் - பால் என்று பிரித்துக் கற்பிக்க வேண்டும். இம்முறையில் சில பயிற்சிகளேனும் அளித்தால் எளிதில் குறில், நெடில் வேறுபாட்டை அறிவதோடு விரைவாய்ப் படிக்க வல்லவராதலையும் கருத வேண்டும். கூட்டிப் படிக்கச் சிரமப்படும் பிள்ளைகளிடம் இம்முறையைக்கையாண்டால் நல்ல பலன் ஏற்படுவதை அநுபவத்தில் அறியலாம். சிலர் இரட்டித்த மெய்யெழுத்துக்களைத் தனியே உச்சரித்துக் கூட்டச் செய்வர். அம்முறை இயற்கை உச்சரிப்போடு மாறுபட்டுப் பொருந்தாமையை உணர வேண்டும். உதாரணமாகப் பாக்கம் என்ற சொல்லைப் பா+க்க+ம் என்று பிரித்துப் பாக்கம் என்பதைவிடப் பாக்+கம்=பாக்கம் எனப் பிரித்துக் கூட்டுதல் இயற்கையோடியைந் திருப்பதைச் சொல்லிப் பார்க்கலாம். க்க, ச்ச, த்த, ப்ப, ம்ம, ற்றபோன்று இரட்டித்து வருகையில், மெய்யோசையை எதிரே வரும் உயிர்மெய் யோசையோடு சேர்த்துப் பிரித்தல் தமிழ் முறைக்குப் பொருந்தாது. மெய்யெழுத்தை முன் நின்ற பா என்பதுடன் சேர்த்துப் பாக் என்று பிரித்தலே பொருந்தும். எனவே அவர்கள் கூற்று கூட்டும் முறைக்குத் துணை புரியாமை விளங்கும்.

புதிய முறை 2 :—

மேற்கூறிய முறை முதல் வகுப்பு மாணவர்களுக்கேற்றது. மேல் வகுப்பு மாணவர்களுக்கு இன்னும் ஒருபடி அதிமாகக் கூட்டும் முறையைக் கையாளலாம். அதாவது அசை (Syllable) முறையில் கடின சொற்களைக் கற்பித்தலேயாகும். இவ்வகைமுறை ஆங்கிலத்தில் உண்டென்பதை அனைவரும் அறிவர். எனினும், தமிழில் அசைமுறை செவ்விதாய் அமைந்திருத்தலைக் கருத வேண்டும். அசை நோக்கிப் பிரித்தல் மக்களின் இயல்பான உச்சரிப்பை ஒட்டியிருத்தலையும் உணர்தல் வேண்டும். கீழ்வரும் சொற்களை எவ்வாறு பிரித்துக் கூட்டிப் பிள்ளைகளுக்கு எளிதாக்கலாம் என்பதைச் செய்து காட்டுவோம்.

ஒவ்வொரு அசையினுமுள்ள எழுத்துக்களைச் சேர்த்து ஓரோசையாய் உச்சரிக்க வேண்டும். பின்னர் சொல் முழுவதையும் வேகமாய் உச்சரிக்க வேண்டும்.

ஈரசைச் சொல் :—

செங்+கோல்=செங்கோல்.
இக+மேல்=இகமேல்.
இயல்+வது=இயல்வது.
தீ+யவர் = தீயவர்.

மூவசைச்சொல்:—

தீ+தற்+றோர் = தீதற்றோர்
மா+நிலத்+தீர் = மாநிலத்தீர்
இயம்+பா+தவர் = இயம்பாதவர்
நடு+நா+யகம் = நடுநாயகம்

நாலசைச்சொல்:—

முக்+கா+ணங்+கள் = முக்காணங்கள்
விளங்+கிய+தா+க = விளங்கியதாக
தொழப்+படு+கின்+றன = தொழப்படுகின்றன
தெய்+வத்+திற்+கு = தெய்வத்திற்கு

மேற்கண்டவாறு அசை பிரிக்கும் முறை கூட்டுச் சொற்களில் பொருந்தாதது போல் காணப்படும். காரணம் அச்சொற்களை ஒரு சொல்லாகக் கருதாமல் இரு சொற்களாகக் கருதுதலேயாகும். அவ்வித சொற்களையும் கீழ்வருமாறு இருவகையில் பிரிக்கலாம்.

கூட்டுச் சொற்கள்:—

1. இம+யம+லை / இம+ய+மலை } இமயமலை

2. தொன்+றுதொட்+ட / தொன்+று+தொட்+ட } தொன்று தொட்ட

3. பா+துகாக்+கும் / பா+து+காக்+கும் } பாதுகாக்கும்

இவ்வாறு சில நூறு சொற்களைப் பயிற்சி அளித்தால்,பிழையின்றி எழுதுதலும், படிக்கும் வேகம் அதிகரித்தலும் ஏற்படுமென்று கூறவும் வேண்டுமோ ?

ஆரம்பப் பள்ளிகளுக்கான பாட புத்தகங்கள் ஓர் அறிவிப்பு

தமிழ்ப் பாட புத்தகங்கள் முதலாவது இரண்டாவது வகுப்புகளுக்கு 1961—62 ஒருவருட காலத்திற்கும், மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது வகுப்புகளுக்குப் தமிழ்த் பாட புத்தகங்கள் 1961-62 62-63 ஆக இரண்டு வருடங்களுக்கும் அங்கீகாரங்கள் நீடிக்கப் பட்டுள்ளன என்று 21—2—1961 தேதி கெஜட்டில் அரசாங்கம் பிரசுரித்திருக்கிறது.

குறிப்பு :—அரசாங்கத்தார் தாங்களே தமிழ்ப் பாட புத்தகங்கள் 1 முதல் 5 வரையில் 1961-62ல் இருந்து போடுவதாக முன்பு சொல்லி வந்தார்கள். ஆனால் அம்முயற்சியைப் பத்திரிகைகளில் வந்த சில எதிர்ப்புகளினால் அரசாங்கத்தார் தற்சமயம் கைவிட்டிருப்பதாகத் தெரிகிறது. நாமும் பாட புத்தகங்களை அரசாங்கம் பிரசுரிப்பது நல்லமுறையல்ல என்று பல காரணங்களைக் காட்டிப் பலமுறை எழுதியிருக்கிறோம். அம்மாதிரியே அரசாங்கம் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் இம்முயற்சியைக் கைவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

யாதும் ஊரே, யாவரும் கேளிர்!

[டாக்டர் மா. இராசமாணிக்கனார்.]

சங்க காலப் புலவர்

சங்க காலத்தில், இன்று நமது சமுதாயத்திலுள்ள சாதிப் பெயர்களோ சாதிகளோ இருந்தமைக்குச் சான்று இல்லை. இயற்பெயர் **"சாத்தன்"** என்று இருந்தால், அச் சாத்தன் மரியாதைக் குரியவனாக மாறும்பொழுது **'ஆர்'** விகுதி கொடுக்கப்படும். அவன் **'சாத்தனார்'** என வழங்கப்படுவான். கபிலன், கபிலர் என்று வழங்கப்படுவான். அவன் இன்ன ஊரினன் என்பதைக் குறிக்க ஊர்ப் பெயர் பெயருக்கு முன் குறிக்கப்படும்; 'சீத்தலைச் சாத்தனார்;' 'உறையூர் மோசியார்' என்றாற்போலவரும். ஒரே ஊரில் ஒரே பெயர் கொண்ட புலவர் பலர் இருப்பின், அவர் செய்துவந்த தொழிலால் வேறுபாடு குறிக்கப்படும். 'கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்' என்றாற் போல வரும். பிறந்த ஊர் வேறாகவும் தங்கித் தொழில் நடத்தும் ஊர் வேறாகவும் இருந்தால் இவ்விரண்டு ஊர்களையும் அவன் செய்யும் தொழிலையும் அவனது இயற்பெயரையும் சேர்த்து வழங்குதல் பண்டை மரபு; சீத்தலை என்னும் ஊரிலே பிறந்த சாத்தனார் மதுரையில் கூலவாணிகராக இருந்தார் என்பதை உணர்த்த 'மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்' என்று குறிக்கப்பட்டார்.

மயிலையார், நாகையார் என்றாற் போலப் பிறந்த ஊரால் பெயர் பெற்றார் பலர். பூங்குன்றம் என்பது பாண்டிய நாட்டு ஊர்களில் ஒன்று. இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மகிபாலன் பட்டியே சங்க காலத்தில் பூங்குன்றம் எனப்பெயர் பெற்றிருந்தது என்பது கல்வெட்டால் தெரிகின்ற உண்மையாகும். கோள் நிலைகளைக் கணக்குப் பார்த்து மக்களுக்கு நேரும் நன்மை தீமைகளைக் கணித்துக்கூறுபவன் இக்காலத்தில் 'சோதிடன்' எனப்படுகிறான்; அக் காலத்தில் **'கணியன்'**. எனப்பட்டான். பூங்குன்றம் என்ற ஊரில் வாழ்ந்த கணியன் ஒருவன், கணியன் பூங்குன்றன் என்று பெயர் பெற்றான். அக்கணியன் தன் தொழிலோடு நில்லாது, பைந்தமிழைப் பாங்குறக் கற்றுப் பெரும் புலவனாகவும் விளங்கினான்.

சங்ககாலப் பெரும் புலவர்களான நக்கீரர், கபிலர், பரணர் இவர் தம் வரிசையில் வைத்து எண்ணத்தக்க பெரும் புலவனாக அப்பெருமகன் விளக்கமுற்றிருந்தான். அப்பெரியோன் அருளிய பாடலொன்று புறநானூற்றில் (192) உள்ளது. பழந்தமிழர் கொண்டிருந்த சீரிய கருத்துக்களை அப்பாவில் வைத்துப் புலவன் பாடியுள்ளான்.

புலவர் பொன்னுரை

(1) எந்த ஊரும் எமது ஊரே; எல்லோரும் எம்முடைய சுற்றத்தார்; (2) ஒருவனுக்குக் கேடோ ஆக்கமோ வருவது அவனாலேயே தவிரப் பிறரால் அன்று. (3) சாதல் என்பது புதியதன்று; கருவில் தோன்றிய நாளே தொடங்கியுள்ளது. ஆதலால் வாழ்தல் இனியது என்று மகிழ்ச்சி அடையவில்லை. ஒரு வெறுப்பு வந்தபோது இதுகொடியது என்று எண்ணவுமில்லை. (4) பேரியாற்று நீரின் வழியே செல்லும் மிதவைபோல நமது அரிய உயிர் ஊழின் வழிப்படும் என்பது அறிஞர் நூலால் தெளிந்திருக்கிறோம். ஆகவே, நாம் நன்மையால் மிக்கவரை மதிப்பதும் இல்லை; அவ்வாறே நன்மையால் சிறியோரைப் பழித்தலும் இல்லை.

(1) இக்கூற்றின் கருத்துயாது? பண்டைக்காலத் தமிழர் பல நாடுகளுக்கும் சென்று வாணிகம் செய்தவர்; உள்நாட்டு வாணிகத்திலும் வெளிநாட்டு வாணிகத்திலும் சிறந்தபழக்கம்உடையவர். அவர்கள் வாணிகத்தின் பொருட்டுக் கடல்கடந்து பல நாடுகளுக்கும் சென்றனர்; அங்கங்குத் தங்கி அவ்வந்நாட்டு மக்களோடு பழகித் தங்கள் வாணிகத்தைப் பெருக்கினர். அயல்நாடு செல்வோர் அந்த நாட்டு மக்களோடு அகங்கலந்து பழகினாற்றான் வாணிகம் சிறந்த முறையில் நடைபெறும்; அந்நாட்டு மொழியையும் ஓரளவு அறிந்து அம்மக்களோடு பேசி அம்மக்கள் உள்ளத்தைத் தம்பால் ஈர்க்க வேண்டும். இத்துறைகளில் எல்லாம் பண்பட்ட தமிழ் வணிகர் தம் நாட்டைப் போலவே; தாம் தங்கி வாணிகம் நடத்திய பிற நாடுகளையும் மதித்தனர். அம்மதிப்பு மிகுதியாற்றான் பல நூற்றாண்டுகள் பல நாடுகளோடு வாணிகத் தொடர்பு வலுப் பெற்றுவந்தது. தமிழகத்துச் செல்வ நிலைக்கு இவ்வயல் நாட்டு வாணிகம் ஒரு சிறந்த காரணமாகும். இதே உண்மையைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தனர். அயல் நாட்டு வாணிகரைத் தம் நாட்டில் வாழ்வித்தனர்; வசதிகள் அளித்தனர்; நன்கு கலந்து பழகினர். சீனர், அராபியர், யவனர்முதலிய பல நாட்டாரும் சங்ககாலத் தமிழகத்தில் தங்கி வளமுற வாழ்ந்தனர் என்பதைச் சங்க நூல்களால் அறிகின்றோம். அயல் நாட்டார் குறிப்புக்களும் இவ்வுண்மையை வலியுறுத்தும் சான்றுகளாக நிற்கின்றன. இந்த உண்மையை உளம்கொண்ட கணியன் பூங்குன்றனார் என்ற புலவர், **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்று சுருங்கக் கூறினார். இவ்வுயரிய கருத்து இன்று ஈழம் பர்மா முதலியநாடுகளிலும் ஓரளவு நம் நாட்டிலும் இல்லாது ஒழிந்தது வருந்தத் தக்கது.

(2) "மனிதன் தன் நற்செயல்களால் தன்னை உயர்த்திக் கொள்கிறான். தன் தீச் செயல்களால் அதனைத் தாழ்த்திக்கொள்கி

றான்" என்று விவேகானந்த அடிகள் கூறியுள்ளார். "மனிதன் ஆவதும் அழிவதும் தன்னாலே தான்" என்று ஜேம்ஸ் ஆலன் என்னும் மேனாட்டு அறிஞர் புகன்றுள்ளார். இப்பேருண்மையையே ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்குமுன் கணியன் பூங்குன்றனார் கூறியுள்ளார், "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று.

மனித வாழ்க்கையைப் பக்குவப் படுத்தும் இவ்வுயரிய உண்மையை அறிந்தவர் எத்துணையர்? மனிதன் நல்ல சொல்லாலும் செயலாலும் பொதுமக்கள் உள்ளங்களைக் கவர்கிறான். அவ்வாறே தன் தீய சொல்லாலும் செயலாலும் பொதுமக்கள் வெறுப்புக்கு ஆளாகிறான். கோள் சொல்லுவது, பிறர் வெறுக்கும் செயல்களைச் செய்தல் முதலிய இழிசெயல்களால் பலராலும் வெறுக்கப்படுகிறான். இங்ஙனம் பலர் வெறுப்புக்கும் காரணம் அவனே தவிரப் பிறர் அல்லர். "நான் அவனால் கெட்டுவிட்டேன், இவரால் இக்கேடு நேர்ந்தது" என்று தம் கேட்டிற்குப் பிறரைக் குறை கூறும் மக்கள் இந்த உண்மையை உணர்வதில்லை.

இந்த உண்மையை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து விட்டால், அவனது வாழ்வு செம்மைப்படும். கணக்கற்ற அறநூல்களைப்படிப்பதாலோ சமய நூல்களைப் படிப்பதாலோ ஒருவன் பெறும் பயனை விட இப்பயன் மிகப்பெரியது—உயர்ந்தது. மனிதனது இன்ப வாழ்வுக்கு உயிர்நாடியான இப் பேருண்மையை மிகச் சுருக்கமாக உரைத்தருளிய புலவர் பெருமானுக்கு நமது நன்றி உரியதாகுக.

(3) உலகில் மலர்ந்த பூ வாடுதல் இயல்பு; தோன்றிய ஒன்று மறைவதும் இயல்பு; அதுபோல் பிறந்தவர் இறத்தலும் இயல்பு. 'பிறந்த நாம் இறவாமல் இருக்கப் போகிறோம்; இவ்வுலக இன்பங்களை எல்லாம் நுகரப்போகிறோம்!' என்று எண்ணுதல் அறிவற்றார் இயல்பு. அறிவு படைத்தவர், பிறந்தவர் இறத்தலால் எப்பொருளும் நிலையுடையதன்று என்னும் உண்மையை உணர்வர். அதனால் பற்றற்ற நிலையில் வாழ்வர். அறிவுடைய செல்வர் ஊர் நடுவில் உள்ள பழுத்த மரம்போல மக்கட்குப் பயன்படுவர்; வாழ்வைப் பெரிதாக எண்ணி, வறுமையால் வாடும் எளியவர்பால் இரக்கம் கொள்ளாதிரார். இச் சிறந்த மனிதப்பண்பை ஊட்டி வளர்க்கத் தக்கது கணியன் பூங்குன்றனாரின் பொன்மொழி. அது "**சாதலும் புதுவதன்றே; வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்றும் இலமே**" என்பது.

முடிவுரை

இப்பொன்னுரைகளையும் இவற்றின் பரந்த பொருளையும் உள்ளத்தில் ஆழப்பதித்தல் நன்று. மனிதன் தன்னைப்போலவே பிறரை நேசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். அந்நிலையில் அவன் எந்த நாட்டையும் தன்னுடென்று மதிப்பான். மனிதன் எந்தநாட்டவனுயினும் எங்கும் சென்று வாழலாம் என்னும் மன அமைதி பெற்றிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று மனம் மகிழப் பாடுவான். தான் உயர்வதும் தாழ்வதும் தன்னுலே தான் என்பதை உணரும் அறிவு மனிதனை வாழ்விக்கும். தோன்றுவது அழியும் என்ற உண்மை மனிதனுக்குச் சுய நலத்தை மிகுதியாக உண்டாக்காது. இவ்வுயரிய பண்புகள் மனிதனிடம் கருக்கொள்ளுமாயின், மனித வாழ்வு மாண்புடைய வாழ்வாகும்.

—"பத்மஜோதி"

இந்தியாவில் மொத்த மக்கள் தொகை 43 கோடியே 80 லட்சம்

10 வருடங்களில் 21 சதவிகிதம் ஜனப்பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

1961-ல் இந்தியாவின் ஜனத்தொகை எண்ணிக்கை 43 கோடியே 80 லட்சம் என கணக்கெடுக்கப்பட்டிருப்பதாக அண்மையில் பார்லிமெண்டில் உள்துறை அமைச்சர் திரு லால் பகதூர் சாஸ்திரி அறிவித்தார். கடந்த 10 வருடங்களில் ஜனத்தொகை 21.49 சத விகிதம் அதிகரித்துள்ளது. இதில் ஆண்கள் தொகை அதிகரிப்பு 23.01 சத விகிதமாகும். பெண்கள் தொகை அதிகரிப்பு 22.18 சத விகிதமாகும். மணிப்பூர், வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்ஸி, நாகாலந்து, சிக்கிம் இவை நீங்கலாக (இவற்றில் இன்னும் ஜன கணிதி எடுக்கப்பட்டு வருகிறது.) நாட்டின் ஜனத்தொகை 43 கோடியே 64 லட்சம். மேற்குறிப்பிட்ட பிரதேசங்களின் தோராய ஜனத்தொகையைச் சேர்த்துக் கொண்டால் மொத்த ஜனத்தொகையில் ஆண்கள் எண்ணிக்கை சுமார் 22 கோடியே 49 லட்சம். பெண்கள் எண்ணிக்கை 21 கோடியே 14 லட்சமாகும். ஆகவே நாட்டின் மொத்த ஜனத்தொகையை 43 கோடியே 80 லட்சமாகக் கணக்கிடுவது தவறல்ல என்று மந்திரி

திரு லால்பகதூர் சாஸ்திரி மேலும் குறிப்பிட்டார்.

1951-ல் எடுக்கப்பட்ட ஜனக் கணிதி புள்ளி விவரங்களின்படி (ஜம்மு, காஷ்மீர் ராஜ்ய ஜன கணிதி அப்போது எடுக்கப்பட வில்லை). மொத்த எண்ணிக்கை 35 கோடி 92 லட்சம். இதில் ஆண்கள் 18 கோடி 28 லட்சம். பெண்கள் 17 கோடி 30 லட்சம். நாட்டின் சராசரி ஜனத்தொகை அதிகரிப்புக்கு (அதாவது 21.49 சத விகிதம்) குறைவாகவே சென்னை, ஆந்திரா, பீகார், ஜம்மு காஷ்மீர், மைசூர், ஒரிஸ்ஸா உத்திரப்பிரதேசம் ஆகிய ராஜ்யங்களின் ஜன சங்கியை அதிகரித்துள்ளது. ஆனால் அஸ்ஸாம், குஜராத், கேரளம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான், மேற்கு வங்கம் ஆகிய ராஜ்யங்களின் ஜனத்தொகை நாட்டின் மொத்த சராசரி உயர்வுக்கு மேல் அதிகரித்துள்ளது. அஸ்ஸாமில்தான் உயர்ந்தபட்சமாக 34.30 சத விகிதம் அதிகரித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக மேல் வங்கத்தில் 32.94 சத விகிதம் அதிகரித்துள்ளது. பூகோள ரீதியில் வடகிழக்கு, வடமேற்கில் உள்ள ராஜ்யங்களில் அதிக அளவுக்கு ஜனப் பெருக்கம் காணப்பட்டுள்ளது. நாடு பூராவுக்கும் சதுர மைலுக்கு 384 மக்கள் வீதம் வசிக்கின்றனர். 1951-ல் 316 பேர்கள் வீதம் வசித்தனர். நடப்பு வருடத்தில் எழுத்தறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை 16.6 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. 1951ல் இது 23.7 சத விகிதமாக இருந்தது. 1961-ல் மொத்தம் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை சுமார் 10 கோடி 32 லட்சம். இதில் 7 கோடி 62 லட்சம் ஆண்கள். 2 கோடி 69 லட்சம் பெண்களாவர்.

1961-ல் இந்தியாவின் நிலப் பரப்பு 11 லட்சம் சதுர மைல். மொத்த ஜனத்தொகை 43 கோடி 64 லட்சம். இதில் மைசூர், ஆந்திரப் பிரதேசம், சென்னை, கேரளாவின் ஜனத்தொகை விவரம் வருமாறு:-

மைசூர்:-நிலப்பரப்பு 74 ஆயிரம் சதுர மைல்; ஜனத்தொகை 2 கோடி 35 லட்சம். ஆண்கள் 12 லட்சம். பெண்கள் 11 லட்சம். சென்ற பத்து வருடங்களில் ஜனத்தொகை அதிகரிப்பு சத விகிதம் 21.36.

ஆந்திரா:- நிலப்பரப்பு 1 லட்சம் சதுர மைல்; மொத்த ஜனத்தொகை 3 கோடி 59 லட்சம்; ஆண்கள் 1 கோடி 81 லட்சம், பெண்கள் 1 கோடி 78 லட்சம். சென்ற 10 வருடங்களில் 15.63 சத விகிதம் அதிகரித்துள்ளது.

கேரளா:-நிலப்பரப்பு 15 ஆயிரம் சதுர மைல்; மொத்த ஜனத்தொகை 1 கோடியே 68 லட்சம்; ஆண்கள் 83 லட்சம், பெண்கள் 85 லட்சம். 10 வருடங்களில் அதிகரிப்பு 24 சத விகிதம்.

சென்னை: நிலப்பரப்பு 50 ஆயிரம் சதுரமைல்; மொத்த ஜனத்தொகை 3 கோடி 36 லட்சம்;

ஆண்கள் 1 கோடியே 69 லட்சம், பெண்கள் 1 கோடியே 67 லட்சம். 10 வருடங்களில் அதிகரிப்பு விகிதம் 11.73 சதம்.

1007 ஆண்களுக்கு 989 பெண்கள் வீதம் உள்ளனர். ஒரு சதுர மைலுக்கு 671 வீதம் மக்கள் வசிக்கின்றனர்.

இந்தியாவில் டில்லியில்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் விகிதம் அதிகம். 1951-ல் கேரளா இதில் முதன்மை ஸ்தானம் வகித்தது. தற்போது இது இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. டில்லியில் 100-க்கு 51 பேர் எழுதப் படிக்க தெரிந்தவர்கள். கேரளாவில் 100-க்கு 46 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இந்தியாவில் ஜம்மு, காஷ்மீரில்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் விகிதம் மிகவும் குறைவு. 100-க்கு 10 பேர்களே எழுத்தறிவு பெற்றவர்களாவர்.

திட்டம் தயாரிப்பவர்கள் எதிர்பார்த்ததைவிட நாட்டின் ஜனத்தொகை அதிகரித்தது குறித்து தாம் சொந்த முறையில் கவலைப்படவில்லை என்று உள்நாட்டு மந்திரி திரு லால்பகதூர் சாஸ்திரி செய்தி நிருபர்களிடம் கூறினார்.

ஜனத்தொகைப் பெருக்கம் காரணமாக 3-வது திட்டச் செலவு அதிகரிப்பது உண்மை. திட்டமிடுவோர் இதைக் கருத்தில் கொண்டு அதற்குத் திட்டத்தில் வசதி செய்ய வேண்டும். நிலைமையைச் சமாளிக்க முடியும் என நம்புகிறேன் என்றார் அவர். இந்தியாவின் ஆண்-பெண் விகிதாசாரம் குறைவாக இருப்பதற்கு யுவர்கள் விகிதாசாரம் அதிகமாக இருப்பதுதான் காரணம் என்று உள்நாட்டிலாகா காரியதரிசி திரு விஸ்வநாதன் உரைத்தார். உலகில் ஆண்கள் பிறப்பு விகிதம் பெண்கள் பிறப்பு விகிதத்தைவிட அதிகமாக உள்ளது. 70 வயதுக்கு மேல்கணக்கிட்டால் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட மிகவும் அதிகமாக உள்ளது. ஜனத் தொகை அதிகரித்து வரும் இந்தியா போன்ற நாட்டில் ஆண் பெண் விகிதாசாரம் குறைவதை ஜாக்கிரதையாகப்பிறகுபரிசீலிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

சென்னை சட்ட மன்றத்தில் 23–3–61-ல் கல்வித் துறை மானியக் கோரிக்கைமீது

அங்கத்தினர்கள் ஆற்றிய உரைகளின் சுருக்கம்

A. கோவிந்தசாமி M.L.A. அவர்கள் ஆற்றியவுரை

உதவிபெறும் பள்ளிகள்

அரசாங்க உதவி பெற்று வரும் பள்ளிகளில் சம்பளத்தில் 15 சதமானம் என்றுள்ள அடிப்படையில் மான்யம் கொடுக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாக இப்போது பல பள்ளிகள் பாதிக்கப்படுகின்றன. மேலும் இதன் மூலம் இப்போது கிடைக்கிற சலுகை 7 சதமானம் என்று அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதைக் கொண்டு அவர்கள் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வாடகை 50 ரூபாய், 80 ரூபாய் என்று கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதை உயர்த்தி 10 சதவிகிதம் என்ற அடிப்படையில் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் இந்தப் பள்ளிகள் எல்லாம் நல்ல முறையில் இயங்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாராட்டுகிறேன்!

பள்ளிகளில் மதிய உணவு, இலவச உடை இவைகள் கொடுத்து வருகிறார்கள். இதற்கான திட்டங்களை ஓரளவு நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். அதற்காக திரு. சுந்தரவடிவேலு அவர்களை நான் பாராட்டுகிறேன். அதோடு இவர்களது முயற்சியைப் பின்பற்றி வேறு பல மாகாணங்களும் நடவடிக்கை எடுக்க முன்வந்திருக்கிறார்கள். உடை வழங்கும் விஷயத்தில் ஏழை மாணவர்களை ஆசிரியர்கள் வற்புறுத்துகிறார்கள் என்பதை இங்குப்பலமுறை எடுத்துக்காட்டியிருக்கிறோம். ஏற்கெனவே இந்தக் குழந்தைகள் ஏழைகளாக இருப்பதினால்தான் அவர்கள் அரை நிர்வாணமாகப் பள்ளிக்கு வரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலையில் ஆசிரியர்கள்போய்ப்பெற்றோர்களிடத்தில் நிதி கேட்கும்போது, இதனால் ஏதாவது பாதகம் ஏற்பட்டு விடுமோ என்று பயந்து கையில் பணம் இல்லாவிட்டாலும்கூட, ஏதாவது தட்டுமுட்டுச் சாமான்களைக் கொடுத்தாவது இதற்கு நிதி உதவுகிறார்கள்.

வயிறு நிரம்புமா?

இந்த நிலைமையைப் பற்றி நானும் திரு. சுந்தரவடிவேல் அவர்களும் கலந்து கொண்ட விழுப்புரம் மாநாட்டில் குறிப்பிட்டிருக்கிறேன். வேண்டுமென்

ருல் பணக்காரர்களிடத்தில் வாங்கி ஏழைகளுக்குக் கொடுக்கட்டும். அதுவும் போதவில்லை என்ருல் செலவில் 60 சதவிகிதத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்தப் பகல் உணவு ஆறு ந. பைக்கு கொடுக்கப்படுகிறது. காங்கிரஸ் சர்க்காரால் ஆறு ந. பைக்கு சோறு போடப்படுகிறது என்று காங்கிரஸ் பிரச்சாரம் வேண்டுமென்ருல் செய்யலாமே தவிர உண்மையிலேயே வயிருர ஒரு குழந்தைக்கு ஆறு ந. பைக்கு சோறு போட முடியுமா என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டும். 6 ந. பை.யைக் கொண்டு எந்தக் குழந்தைக்கும் நிறைவைக் காட்டிவிட முடியாது. மேலும் கணவனும் மனைவியுமாக இருக்கின்ற இரண்டு ஆசிரியர்களை வெவ்வேறு இடங்களில் போடக் கூடாது. இவர்களைப் பிரிப்பதால் பள்ளிகளில் நல்லமுறையில் வேலை நடைபெருது. அமைச்சர் அவர்கள் புன்னகை புரிகிருர். இதிலிருந்து நான் சொல்லுவதின் கருத்தை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிருர்கள் என்று நம்புகிறேன்.

கவனம்

பள்ளிகளைப் பிரிப்பதில், ஒரே பிளாக்கின்கீழ் இருக்கின்ற பகுதிகளிலுள்ள பள்ளிகளை ஒன்ருகச் சேர்த்துப் பிரிக்கவேண்டும். அப்போதுதான் நிர்வாகத்திற்குச் சிரமமில்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

சம்பளம் போதாது

குறிப்பாக ஆசிரியர்களின் சம்பள உயர்வைப்பற்றி இங்குச் சொல்லப்பட்டது. இப்போது ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வின் காரணமாகத் தங்களுக்குக் கிடைத்து வரும் சம்பளம் போதாது என்று ஆசிரியர்கள் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள் பார்லிமெண்டில் சொன்னதை வேறு விதமாக கனம் அங்கத்தினர் ஒருவர் கூறி, இதற்காக எதிர்க்கட்சியிலிருந்து சொல்லப்பட்ட கருத்துக்கள் அறியாமையினல் சொன்னவை என்ற முறையில் பேசினர்கள். குறிப்பாக மயிலம் சிதம்பரம் கல்லூரிகளில் பயின்று இப்போதும் வேலை கிடைக்காமல் எத்தனையோ பேர்கள் இருந்து கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்கு வேண்டுமென்ருல் உடனேயே இந்த அரசாங்கம் வேலை கொடுக்கட்டும் எனக் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் கல்வியைப் பொறுத்தவரையில் இதில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பலர் பாதி ஊதியம் பெற்று வருகிருர்கள். அதோடு இவர்களுக்குக் கொடுத்த சம்பள உயர்வும் போதாது என்று பேசினர்.

மு. கருணாநிதி M.L.A. வற்புறுத்தல்

வாழ்க்கைத்தரம் உயராததால்!

"இன்று கல்வியின் தரம் குறைந்து விட்டதற்குரிய பல காரணங்களில், ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படாத காரணமும் ஒன்று. அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படுவதன் மூலம்தான், ஆசிரியர்களுக்கு வாழ்க்கையிலே ஏற்படும் நிம்மதி—போதனையிலே ஏற்படும்.

பயனற்றுப் போயிற்று!

"ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்திவிட்டதாக அமைச்சர் அவர்கள் கூறுவார்களேயானால்—அவர்களுக்கு நான் அல்ல—மத்திய கல்வியமைச்சர் ஸ்ரீமாலி அவர்கள் கூறியிருப்பதை—'தற்பொழுது உயர்த்தியளிக்கப்பட்டிருக்கும் ஊதியம், இப்பொழுது நாட்டில் உள்ள விலைவாசி உயர்வின் காரணமாகப் பயனற்றுப் போய்விட்டது'—என்று குறிப்பிட்டிருப்பதைச், சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமைச்சர் ஆராயட்டும்!

"ஆசிரியர்களுக்குப் பாட போதனை மட்டுமல்லாமல், பல்வேறு வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்; மக்கள் தொகை கணக்கெடுப்பதிலிருந்து டி. பி. முத்திரை விற்பனை, மதிய உணவுக்கு நிதி வசூல், பரிசுபத்திர விற்பனை உட்பட பல்வேறு வேலைகளும் அவர்கள் மீது சுமத்தப்படுகின்றன. இந்தக் காரியங்கள் எவ்வளவு நல்ல காரியங்களுக்காக இருப்பினும், இதற்காக வேறு ஏதாவது பலன்கள் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுவதாக இருப்பினும், இதனால் ஆசிரியர்களுக்குப் போதிக்கின்ற நேரமும், போதனைக்குரிய சிந்தனையும் கெடுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சரவர்கள் இதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

அமைச்சரே கூறினார்!

"உயர்நிலைப் பள்ளிகளில் படித்து முடித்து, கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு, பாடங்கள் ஆங்கில போதனையாக இருப்பது மிகச் சிரமமாக இருக்கிறது. இதை அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டுள்ளார்; 'பதினோராவது வகுப்புவரை எல்லாப் பாடங்களையும் தமிழில் படித்துவிட்டு, 'பிரி-யுனிவர்சிட்டி' வகுப்பில் ஆங்கில பாடபோதனையைப் பெறும்போது மாணவர்கள் சிரமப்படுகிறார்கள் என்றும், தமிழில் பாடபோதனை பெற்ற மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வியைப் பயிலுவதற்கு மிகப் பாதகமாக இருக்கிறது' என்றும் கூறியிருக்கிறார்.

இங்கிலை மாறுமா ?

'இங்கிலையை மாற்றுவதற்கு, எல்லாப் பாடங்களும் தமிழிலேயே போதிக்கப்படுமா? அல்லது மீண்டும் ஆங்கிலத்தில், பாட் போதனை துவக்கப்படுமா என்பதை அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும். ஆங்கிலத்தில் போதிப்பதை சர்க்கார் விரும்பவில்லை என்று தெரிகிறது. அப்படியானல் தமிழில் போதிப்பதன் மூலம் ஏற்படும் குறைபாடுகளைப் போக்க அமைச்சர் என்ன செய்ய இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூற வேண்டும்.

—★—

தோழியர் சத்தியவாணிமுத்து M. L. A. அவர்களின் கருத்துரை.

உறுதி தருவாரா அமைச்சர் ?

சமுதாயத்தில் இன்றைக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைத்துவந்த சலுகைகள், உத்தியோக உயர்வுகள் போன்றவைகளுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்பதை உறுதிமொழியாகத் தரவேண்டும். தகுதி, திறமை இவைகளைக் கொண்டு சலுகைகள் கொடுக்கப்படும்போது, பின் தங்கிய மக்கள் எந்தவிதத்திலும் பழிவாங்கப்படமாட்டார்கள் என்கின்ற உறுதியை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தரவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

'மதிய உணவு, இலவச உடை இவைகள் மாணவர்களுக்குத் தருகிறோம்—என்கிற திட்டத்தை இந்த மன்றத்திலேயே நாம் பல முறை பேசியிருக்கிறோம். மதிய உணவு, இலவச உடை இவைகள் தருகிறோம் என்று ஆசைகாட்டக் கூடிய அதே நேரத்தில், இதற்கான நிதியை வசூல் செய்வதற்காக மாணவர்கள் அனுப்பப்படுகிறார்கள். ஆசிரியர்கள் இதற்காக எந்த அளவு பயன்படுத்தப்படுகிறார்கள். என்பதைப்பற்றி இந்த மன்றத்தில் பலமுறை எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. குழந்தைகள் பள்ளிக்கு வரவேண்டும் என்கின்ற நோக்கத்தில் அவர்களுக்குஇந்தவிதமான ஆசையைக் காட்டி நாம் அழைக்கின்றோம். குறிப்பாக, 'பெண் குழந்தைகளுக்கு இலவசமாக ஆடைகள் தருகிறோம்' என்று அழைக்கின்ற நேரத்தில் இதற்கான பணத்தை வாங்கி வரும்படி மாணவர்களிடத்தில் ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அந்தக்குழந்தை வீட்டுக்குப்போய், தாய், அல்லது தந்தை இடத்தில் 'ஒரு அணு, இரண்டு அணு தாருங்கள்' என்று கேட்கிறது; இல்லாவிட்டால் 'அரிசியாவது கொடு' என்று கேட்கிறது. 'கையில் பணம் இல்லாத அந்தத் தாயோ அல்லது தந்தையோ, திடீரென்று

வருகின்ற ஆத்திரத்தில், அந்தக் குழந்தையை வீட்டில் போட்டு அடிக்கிறார்கள்.

வரிப் பணத்திலிருந்து தாரீர்!

பள்ளியிலே ஆசிரியர் அடிக்கிறார்-வீட்டிலே பெற்றோர் அடிக்கிறார்கள். நாமே குழந்தைகளுக்கு ஆசையூட்டி வரவேற்று—'உணவு தருகிறோம்; உடை தருகிறோம்' என்று ஆசைகாட்டி வரவழைத்துவிட்டு, இந்த மாதிரி செய்வது சரியல்ல; எனவே, இதனை வரிப் பணத்திலிருந்து தரவேண்டும்.

வெறுப்பு ஏற்படுகிறதே!

நிதி வசூல் செய்வதில் அதிகாரிகள்தான் வசூல் செய்யவேண்டும். ஆசிரியர்கள் நிர்ப்பந்தப்படுத்தப் படுவதால், மாணவர்கள் நிர்ப்பந்தப் படுவதால், இதனால் பொது மக்களிடத்தில் வெறுப்பு ஏற்படுகிறது.

வேதனையடைகின்றனர்!

கேலியாகச் சொல்லும்போது-வரியை வாங்குகிற சர்க்கார், நமக்கெல்லாம் இப்படி கல்வி தருகிறோம் என்று சொல்லி, பெற்றோர்களைப் பணம் கேட்பது, 'கௌரிக்குக் கல்யாணமாம்; அவரவர்வீட்டில் வைபோகமாம்;' என்று சொல்வதுபோல இருக்கிறது—என்று மக்கள் வேதனை அடைகிறார்கள்.

அமைச்சர் கை தாழ்கிறது!

மேலும், அதிகாரிகள், பல இடங்களில் பள்ளிச் சீரமைப்புத் திட்டம் மூலமாகக் கல்விக்குத் தேவையான பொருள்களை வசூல் செய்கிறார்கள். அதிகாரிகளும் மற்றவர்களும், பொதுமக்களிடத்தில் கல்விக்காக நிதி என்று சொல்லி வசூல்செய்து, 'அமைச்சரது கையில் நிதி தருகிறோம்' என்று தருகிறார்கள்; தருகிறவர்கள் கை உயருகிறது—அமைச்சரது கை தாழ்கிறது.

வேறு முறையே இல்லையா!

கொடுக்கும்போதும் வாங்கும்போதும், கொடுக்கும் நேரத்திற்கு அடுத்தபடி, 'நான் கேட்பதைத் தரவேண்டும்; அப்போது உங்கள் கை உயரவேண்டும்—எங்கள் கை தாழவேண்டும்' என்ற எண்ணத்தோடு கொடுப்பதாக எங்களைப் போன்றவர்கள் கருதுகிறோம். அப்பேர்ப்பட்ட நிதி வசூல் செய்யாது, வேறுமுறையில்—கலாநிகழ்ச்சி மூலமாக வசூல் செய்தால் உண்மையில் பாராட்டத் தகுந்ததாக ஆகும்; ஒருவரும் குறை சொல்லவும் முடியாது.

இதுதானா ஆதாரக் கல்வி?

ஆதாரக் கல்வி குறித்துச் சொல்லும்போது, 'ஆரம்பப் பள்ளிகளில் இது கூடாது' என்று சொல்ல விரும்புகிறேன். ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் பச்சைப் பாலகன் என்று சொல்லுகிற சிறிய குழந்தைக்கு ஆதாரக் கல்வி என்ற பெயரால் நூல் நூற்க 'தக்ளி' தரப்படுகிறது. ஒரு குழந்தை—மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த குழந்தை என்று நினைக்கிறேன்—7 வயதுக்

(57-ம் பக்கம் பார்க்க)

ஏழைகளின் வெள்ளி

'ஏழைகளின் வெள்ளி' எனப்படும் அலுமினியம் இன்று பல வகையிலும் பயன்படுகிறது. அமெரிக்காவில் அலுமினியத் தொழில் மிகவும் வளர்ச்சியடைந்திருக்கிறது.

இன்றைக்குச் சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்பு 1886-ல் மார்ட்டின் ஹால் என்ற 22 வயதுடைய இளைஞர் ஒருவர் ஓஹையோ நகரில் தமது தந்தையின் இல்லத்திற்குப் பின்புறத்தேயுள்ள மரக் கொட்டிலில் தாமே அமைத்துக்கொண்ட ஆய்வுக்கூடம் ஒன்றில் மிக முனைப்பாக வேலை செய்தார். இவர் ஓபெர்லின் கல்லூரிப் பட்டதாரி. ஆய்வுக்காகப் பழைய ஸ்டவ் ஒன்று வாங்கிக் கொண்டார். கல்லூரிப் பேராசிரியர் ஒருவரிடமிருந்து மின்கலங்களை இரவலாகப் பெற்றுக் கொண்டார். பல மாதங்கள் சோதனைப் பணியில் ஈடுபட்டு உழைத்தார்.

அலுமினாவை (அலுமினியம் ஆக்சைட்) உருக்கிய கிரியோலைட்டில் கரைத்து அந்தக்கரைசலில் மின்சாரத்தைப் பாய்ச்சுவதான 'ஹால் முறை' இவ்வாண்டில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த முறையே இன்று உலகம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்குமுன் அலுமினியம் இல்லையா? இருந்தது. விலை மிக அதிகம். எனவே, நகைகள் செய்வதற்குத்தான் அது பயன்பட்டு வந்தது. அக்காலத்தில் அலுமினியத்தின் விலை என்ன தெரியுமா? ஒரு அவுன்ஸ் ஒரு டாலர்.

ஹால் முறை கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அலுமினியத்தின் விலை சராளமாகக் குறைந்து வந்திருக்கிறது. இன்று ஒரு ராத்தல் சுமார் 1-25 ரூபாயாக இருக்கிறது.

முதல் 9 ஆண்டுகளின் முடிவில் 28 டன்கள் உற்பத்தியான அலுமினியம் இன்று ஆண்டு ஒன்றுக்கு 28 லட்சம் டன்னுக்கும் அதிகமாக ஆகியிருக்கிறது.

பாலங்கள், சரக்கு ஏற்றும் கூட்ஸ் வாகனங்கள், கேபிள் கம்பிகள், ஜன்னல்கள், கட்டடங்கள், விமானங்கள், மேஜை நாற்காலிகள், இன்ஜின்கள் போன்ற பற்பல பொருள்கள் தயாரிக்க இன்று அலுமினியம் பயன்படுகிறது.

அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் வானுயர் கட்டடங்களுக்கு அலுமினியத் தகடுகள் போடப்பட்டிருக்கின்றன. கட்டடம் கட்டுகிறவர்களுக்கு அலுமினியச் சுவர்கள் சவுகரியமாகக்

கிடைக்கின்றன. துருப்பிடிக்காத உலோகம் தேவைப்படும் வீட்டின் பகுதிகளுக்கெல்லாம் அலுமினியம் உபயோகிக்கப்படுகிறது. வீட்டிற்குள் இருக்கும் சாளரங்கள், ஓடைகள், கதவுகளுக்குரிய சாமான்கள், கூரைப் பலகைகள், இன்சுலேட்டர்கள் முதலியவற்றிற்கும் சமையலறைப் பாத்திரங்கள் கருவிகளுக்கும் இப்போது ஏராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது அலுமினிய ராக்கு தயாரிக்கப்படுவதற்காக 2 லட்சம் டன் அலுமினியம் ஒவ்வோராண்டிலும் பயன்படுத்தப்படுகிறது.

பல்வேறு மின்விசைக் காரியங்களுக்கு செம்புக்குப் பதில் அலுமினியம் உபயோகப்படுகிறது. இணைப்பதற்கு செம்பைவிடக் கடினமாக இருக்கும் அலுமினியம் இப்போது அல்ட்ராஸாலிக் பற்றவைக்கும் முறை, அழுத்தம் மூலம் பற்றவைக்கும் முறை முதலியவற்றால் வெற்றிகரமாக இணைக்கப்படுகிறது.

மின்விசை கொண்டு செல்லும் கம்பிகளுக்கு அலுமினியம் பயன்படுத்தப்படுகிறது. விரைவில் எஃகுக்குப் பதிலாகக்கூட அலுமினியம் பயன்படுத்தப்படுவதற்கான சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருகிறது.

இவற்றையெல்லாம்விட இன்று, அலுமினியத்திற்குக் கிடைத்திருக்கும் பெரும் புகழ் எது தெரியுமா? செயற்கைக் கோளுக்கு அது பயன் படுகிறது. செயற்கைக் கோளின் பளபளக்கும் மேல்பாகம் அலுமினியமாகும்.

அன்று ஹால் தமது தந்தையின் வீட்டுப் பின்புற முள்ள கொட்டிலில் ஆராய்ச்சி நடத்தும் போது 75 ஆண்டுகளுக்குப் பிறகு அது இந்த உலகத்து மக்கள் வாழ்விலே எத்தகையதொரு சிறப்பிடம்பெறும் என்பது பற்றிக் கனவாவது கண்டிருப்பாரா!

(55-ம் பக்கம் தொடர்ச்சி)

குழந்தை—பகல் நேரத்தில், ஆசிரியர், அதன் கையில் 'தக்ளி' யைக் கொடுத்து நூற்கச்சொல்லி விட்டுச் சென்றுவிட்டார்; அக் குழந்தைக்கு உறக்கம் வந்திருக்கிறது; உறங்கிக்கொண்டே நூல் நூற்றுக்கொண்டிருந்தது; உறக்கத்தினால் மயக்கமுற்று 'தக்ளி' யின்மேல் விழுந்து சற்று கண்ணுக்கு அப்பாற்பட்ட இடத்தில் பொத்துக்கொண்டு காயப்பட்டது. கொஞ்சம் தவறியிருந்தால், கண்ணையே குத்தியிருக்கும். 7 வயதுக் குழந்தைக்கு 'தக்ளி' கொடுத்து நூல் நூற்கச் சொல்வதைத்தானா ஆதாரக் கல்வி என்று சொல்கிறோம்? ஆசை காட்டி வரவேற்று இப்படி வேலை வாங்கும் நிலையில், பெற்றவர்கள் பள்ளிகளில் சென்று வேலை செய்யவா அனுப்பினேன் என்றுவேதனைப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வேதனை தரக்கூடிய கல்வி ஆரம்பப் பள்ளிகளில் வேண்டாம். வேண்டுமானால் உயர்தரப் பள்ளிகளில் பயிற்சியைத் தரவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

டைப்ரைட்டர் பிறந்த கதை

டைப்ரைட்டரை முதன் முதலில் யார் கண்டுபிடித்தது? எப்படிக் கண்டுபிடித்தார் என்பது ஒரு ரசமான வரலாறு.

எழுத்தாணி கொண்டு பனையோலையில் தங்கள் எண்ணங்களையெல்லாம் வடித்துத் தேக்கியவர்களை விட, தாளில் இறகு பேனக்கொண்டு எழுதியவர்கள் பாக்கியசாலிகள். அழகிய பவுண்டன் பேனக்களைக்கொண்டு எழுதியவர்கள் அதைவிட பாக்ய சாலிகள்; எழுதுகோல் இல்லாமலே எழுதும் வாய்ப்புப் பெற்றவர்கள் மிக மிக பாக்யசாலிகள்.

ஆம். எழுதுகோல்இல்லாமலே எழுத வேண்டும் என்ற எண்ணம் எப்போது தோன்றியது என்பது தெரியவில்லை. ஆனால் அந்த எண்ணத்தை ஈடேற்றிய முதல் மனிதர் யார் என்பது மட்டும் தெரிகிறது.

இங்கிலாந்தில் 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹென்றி மில் என்னும் எஞ்சினீயர்தான் இந்த அதிசயக் கருவியை-டைப்ரைட்டரை—முதன் முதல் கண்டுபிடித்தவர் என்று தெரிகிறது. இவர் 1714-ல் தமது கருவியைப் பதிவு செய்தார். பின் 1850-ம் ஆண்டு வாக்கில் தந்தி ஏற்பட்டது. மோர்ஸ் முறையின் குறியீடுகளை விளக்கிக் கையால் எழுதுவோர் அவற்றை எழுதுவதைக் காட்டிலும் வேகமாகப் படித்து அறிந்து கொள்ள முடிந்தது.

பேனு பிடித்தவர்களில் அசகாய சூரர்களும் நிமிஷத்துக்குச் சுமார் 30 வார்த்தைகள் தான் எழுதலாம். இந்நிலையில் முன்னேற்றம் காணும் துடிப்பு ஏற்பட்டதில் வியப்பில்லை. இவ்வாறு ஏற்பட்ட ஆர்வத்துடிப்பில்1867க்குள் ஏராளமானகருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகள் அழகாகவும் தெளிவாகவும் எழுதினவே தவிர வேகமாக எழுத உதவவில்லை.

இத்தகைய எழுதும் கருவிகளைப் பற்றிப் பத்திரிகையில் வெளிவந்த ஒருகட்டுரை கிறிஸ்டியர் எல். ஷோல்ஸ் என்பாரின் சிந்தனையைத் தூண்டியது. இவர் அந்தக் கட்டுரையைத் தம் நண்பர்களுக்குப் படித்துக் காட்டினார். அவர்கள் ஊட்டிய ஆர்வம் இவரது துடிப்பை மேலும் அதிகமாக்கியது.

நண்பர் இருவர் உதவினர். 1867-1873-ல் அவர் 30 வகையான எழுத்து இயந்திரங்களைச் செய்தார். முதல்வகை இயந்திரத்திற்கு அவர் வைத்த பெயர்தான் ‘டைப்ரைட்டர்’ என்பது. அது ‘W’ என்னும் எழுத்தை மட்டும் அடித்தது. சில மாதங்களுக்குள் அவரது ஆராய்ச்சி விரிவடைந்தது. புதுப்புது அம்சங்களைப்

பொருத்தினர். இவை இன்றுள்ள எல்லா டைப்ரைட்டர் களிலும் உள்ளன. ஷோல்ஸ் டைப்ரைட்டர்தான் நடைமுறைக்கு உதவத்தக்க வகையில் வியாபார முறையில் உற்பத்தியான முதல் தட்டெழுத்துக் கருவி.

ஒரு கருவியின் பாகம் அதே வகையான இன்னொரு கருவிக்கும் பொருந்தும்படியாக ஒன்று போல் உற்பத்தி செய்வதுதான் அமெரிக்க முறை ஷோல்ஸின் தட்டெழுத்துக் கருவியின் சிக்கலான அமைப்புமுறை. இதற்கு மிகவும் ஏற்ற வகையில் இருந்தது. இயந்திரங்களும், துப்பாக்கிகளும் வேளாண்மை இயந்திரங்களும் செய்துவந்த இ. ரெமிங்டன் அண்டு சன்ஸ் என்ற கம்பெனி 1873-ல் ஷோல்ஸ் கருவியை உற்பத்தி செய்யத் துவங்கியது.

1881-ல் நியூயார்க் பள்ளிக்கூடம் ஒன்று பெண்களுக்கு இந்தத் தட்டெழுத்துப் பொறியின் பழக்கத்தைக்கற்றுக் கொடுக்க முன் வந்தது. இன்று அது பல ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வேலை வாய்ப்பாக இருந்து வருகிறது. 1890-க்குள் ஷோல்ஸ் இயந்திரம் 'ரெமிங்டன்' என்ற பெயர் பெற்றது. இது பல நாடுகளிலும் விலையாயிற்று. இதன் பிறகு பலரும் இந்த இயந்திரங்களை உற்பத்தி செய்யத் துவங்கினர்.

" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்
முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்புவும்.

எமது புதிய வெளியீடுகள்

(புதிய பாட திட்டப்படி)

(கீழ்க் கண்ட புத்தகங்கள் அங்கீகாரமான தேதி, கெஜட்பக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.)

ஆறும் வகுப்புக் குரியவை :

1. **திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்**

தொகுப்பாசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)

விலை ரூ. 1-25 ந. பை.

2. **புதுமுறை சங்கக் கணிதம்**

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B. A., L. T.

விலை ரூ. 1-50 ந. பை.

3. **சமூக நூல்**

ஆசிரியர் : துரைபழனிவேலு, B. A., B. T.

விலை ரூ. 1-75 ந. பை.

4. **பொது விஞ்ஞானம்**

ஆசிரியர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.

விலை ரூ. 1-50 ந. பை.

5. **அறிவுச்சுடர்**

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A., L. T. (Dip. in Geog)

விலை 62 ந. பை.

● பத்தாம் வகுப்புக்குரியவை :

1. **பொதுவிஞ்ஞானம்**

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B. A., L. T.

விலை 2-50 ந.பை.

2. **இலக்கணம்—கட்டுரை மொழிப்பயிற்சி**

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனர்.

விலை ரூ. 1-50 ந. பை.

★ ★ ★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக்கல்வி' ஆபீஸ்)

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.

தபால் பெட்டி எண் 1818. *டெலிபோன் எண்* 55844

மன நலம் பேணுதல்

பேராசிரியர் தா. மாசில்லாமணி

நலம் சிறந்த மனம் வேண்டுவோர் நல்ல முயற்சி செய்தல் இன்றியமையாத வழி என்பதை உணர வேண்டும். மாந்தர் சிலர் மூளையின்கண் ஒருவகை வெள்ளை நிறமுள்ள பல்லாயிரக் கணக்கான சோம்பல் அணுக்கள் நிறைந்துள்ளன என்றும், அவர் உழைக்க மனமின்றி மடிமை கொண்டிருத்தற்கு அதுவே காரணம் என்றும் இக் கால விஞ்ஞானிகள் சிலர் கூறுகின்றனர். மனம் என்னும் இயந்திரப் பொறியை மாண்புறத் தொழிற்படுத்துவதற்கு ஒருதிறப்பட்ட நினைவு எனப்படும் கைப்பிடியை நெகிழவிடாது கையாளுதல் வேண்டும். எண்ணிறந்த மாக்கள் எங்கும் செல்லாது யாதும் செய்யாது வாளா இருத்தல் என்னும் நொதுமல் நிலையில் மன நிறைவு அடைகின்றனர். ஆனால் எல்லா வகையினும் உயர்ந்த மெய்க்கல்வி என்பது, நாம் நம் மூளையையும் நினைப்பையும் வெறுமனே கலைப்பொருட்களினாலும், கணக்கு வகைகளினாலும், விதிமுறைகளினாலும் நிறைப்பது அன்று. எப்பொழுதும் எப்பொருளையும் உய்த்துணர்ந்து நினைத்துப் பார்க்கும் முறைமையை நாமே நமக்கு அறிவுறுத்தி, அதன் வாயிலாய் முன்னினும் பல பொருட்களையும், பற்பல கணக்கு வகைகளையும், பல வகை விதிமுறைமைகளையும் நாமே தெரிந்து நன்கு பயன்படுத்திக்கொள்ளும் வழியை அறிந்து கொள்வதேயாம். இவ்வகைப் பயிற்சி நாம் நம் வாழ்நாள் முழுவதும் இடைவிடாது தொடர்ந்து செய்வதற்குரியது. ஆதலால், மனத்தை எப்பொழுதும் நன்முயற்சியில் ஈடுபடுத்துக. மனம் துருப்பிடித்து அழிதலினும் தேய்ந்து அழிதலே அதற்குச் சிறப்பு.

மனமுயற்சி எவ்வாற்றானும் அளவு கடந்து செல்லும் இயல்பினது. யாதொரு மாறுதலுமின்றி எப்பொழுதும் ஒரே வகையாகத் தொடர்ந்து உழைக்கின்ற உழைப்பினால் மனம் என்னும் பொறியின் மெல்லிய அமைப்புக் கெட்டுப்போகும். மனத்திற்கு இடையிடையே அடிக்கடி புத்துயிர் அளிக்கும் இளைப்பாறுதலும் மாறுதலும் தேவை. அந்த மாறுதல் மனத்திற்கு உதவி பயக்கும் இயல்பினதாக இருத்தல் வேண்டும். அது மனத்திற்கேனும் உடம்பிற்கேனும் ஊறு செய்தல் கூடாது.

மக்கள் ஒவ்வொருவரும் வாஞ்சைகளும், ஆசைகளும், விருப்பங்களும், திட்டங்களும், குறிக்கோட்களும், உணர்ச்சிகளும் கொதித்துக்கொண்டிருக்கும் உலைப் பானையை ஒத்துள்ளார். உணர்ச்சி என்பது நினைப்பு என்னும் கலவையிற் பற்றும் நெருப்புப் பொறி. அதனால் அதற்கு வாழ்க்கைமீது பெருஞ் செல்வாக்கு உளது. உணர்ச்சிகளை அடக்க வேண்டும். இன்றேல் அவை தலைமை நிலைமை எய்திவிடும். மக்கள் ஒருவரது பண்பு நலத்தின் வலிமை அவர் உணர்ச்சியின் வயப்படுகின்ற செயலில் அன்றி, உணர்ச்சியை அவர் தம் வயப்படுத்தும் செயலிலே தான் புலனாகின்றது. பின் வரும் கருத்துக்கள் உணர்ச்சியைத் தக்கவாறு வயப்படுத்தி நடத்துவதற்கு உதவியாவன :—

1. வாழ்க்கையில் தகுந்த வாய்ப்பிற்குரிய செயல்களைத் தெரிந்துகொள்க

ஒவ்வொரு நாளும் நிகழும் சிறு நிகழ்ச்சிகளைப் பெரியனவும் தலைமை சான்றனவும் ஆகிய நிகழ்ச்சிகளுக்குத் தகுந்த தொடர்புடைய இடத்தில் வைத்துப் பயன்படுத்தக் கற்றுக் கொள்க. சிலர் சிறு நிகழ்ச்சிகளைத் தமக்குப் பெரிய ஆபத்து ஆக்கிக்கொள்ளுகின்றனர். அன்னார் ஆபத்துக்களைச் சிறு நிகழ்ச்சி ஆக்கிக்கொள்ள முயலுதல் வேண்டும். பிறர் உண்டு பண்ணும் சிறு வருத்தங்களை அறியாதன போன்று மதித்தொழுகுக சிறப்பில்லாத அவசிய மற்ற செயல்களை எளியன போன்று நினைத்துக் கையாளுக. உடல் நலம், மனவளர்ச்சி, ஒப்புரவிற்குரிய செயல்கள், நிலையான வாழ்விற்குரிய முயற்சிகள் முதலான தகுந்த கருமங்களில் நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும் செலவிடுக. நிகழ்ச்சிகளை இங்ஙனம் வரையறுத்து ஒழுங்குபடுத்திக் கொள்ளுதலால், மனநிறைவு என்னும் பேரணிகலம், அல்லது பெருஞ் செல்வம் வலிய நம் கையில் வந்து சேரும்.

ஒவ்வொரு நாளும் பிறக்கும் பொழுதே விழிப்பாயிருந்து அதனால் பெரும்பயன் தேடிக்கொள்க. சென்று போன தீய நிகழ்ச்சிகளை நினைத்து நினைத்துப் புலம்பற்க. பிற்கால வாழ்வில் நம்பிக்கை கொள்ளுக. இறந்தகால அனுபவத்தினால் எதிர்காலத் திட்டம் வகுக்கக் கற்றுக்கொள்ளலாம். ஆயின் அதனால் நிகழ்காலத் திட்டம் கெட்டுப்போக எவ்வகையினும் இடங்கொடுத்தலாகாது. சென்ற நிகழ்ச்சி இன்றை நிகழ்ச்சிக்கு இடையூறு ஆக வேண்டாம். எதிர்கால வழியைத் தெளிவாகக் கண்டுணர்க. அக்கால வாழ்விலும் அவ் வாழ்விற்காகவும் இக்காலம் வாழ்க.

இக் காலத்தில் ஒவ்வொரு நாளும் நம்மைச் சூழ்ந்துள்ள எளிய, இனிய பொருட்களை இயற்கை முறையே நுகர்தல் வேண்டும். உலகில் நம் இல்

ல்த்தை எவற்றினும் சிறந்த இன்ப வுறையுள் ஆக்கிக் கோடல் வேண்டும். நம் குடும்பத்தினர்க்கு நம் அன்பையும், நம் நண்பர்க்கு நம் நன்குமதிப்பையும், இன்றே காண்பித்தல் வேண்டும். நாளைக் காண்பிப்போம் எனின், நாள் பிந்திப்போகும். ஒவ்வொரு நாளை யும் தனித் தனியே வைத்து அந் தந்த நாளில் செய்வன எல்லாம் திருந்தச் செய்யும் பழக்கமே தலை சிறந்த வழக்கமாம். அப் பழக்கம் உள்ளத்திற்கு இன்பமும், உறுதி யும் நலமும் நல்குவதாகும்.

2. எப்பொழுதும் மகிழ்ச்சி கொள்ளுக

முறுமுறுப்பினாலும், முறை யீட்டினாலும், எச் செயலும் நிறைவேறாது. எல்லாவற்றிலும் எப்பொழுதும் நம்பிக்கை கொண்ட நன்மக்களுடனே கூடி வாழ்க. நல் வாழ்வையே எதிர் நோக்குக. நல்ல நிலைமையைக் கைப்பற்ற வகை தேடுக. 'மன மகிழ்ச்சி புத்துயிர் தரும் நன் மருந்து' என்பது ஞானியார் வாய்மொழி. இங்கு மருந்து என் பது அமிழ்தம், சஞ்சீவி. காய கற்பம், நல்ல டானிக் என்னும் பொருள் உடையது. மன மகிழ்ச்சியானது உண்ட உணவு செரிப்பதற்கும், உறுதுயில் கொள்வதற்கும் உதவியாகின் றது. அது தன்னைச் சூழ்ந்திருப் போர் வாழ்க்கையை ஒளிரச்செய் கின்றது.

3. உண்மைக்குஎதிரே நிற்கக் கற்றுக்கொள்க

"மேலே போ, அல்லது ஊடே போ; ஒருபோதும் சுற்றிப் போகாதே" என்பது பெரியா தியோடோர் உரூஸ்வெல்ட் கூறிக் கோள் மொழி. அதனைத் தலை மேற் கொள்ளுதல் வேண்டும். ஒரு செயலினைத் தள்ளி வைக்க லாம், அதற்குத் தப்பியோடக் கூடாது. எச் செயலினும் முடி வுக்கு வாராமையும், அதனைச் செய்யக் காலந்தாழ்த்தலும், அதற்கு விலகியோடலும் மன நிலையைக் கெடுக்கும். சிக்கலான பெரு வினைவை—பிரச்சனையை —பட்டப் பகல் வெளிச்சத்திற் குக் கொண்டு வந்து, அதைப் பற் பல கோணத்தில் வைத்துக் கருத் தாய் ஆராய்ந்து, அதற்கு முடிவு கண்டு, அந்த முடிவில் நிலைத் திருக்க வேண்டும்.

4 கவலை கொள்ளற்க

கவலை உடம்பின் சாரத்தை உறிஞ்சி, அதை உழைப்பிற்குத் தகுதியற்றது ஆக்கிவிடும். கவலை கொள்ளாதிருந்து திறமையாக வேலை செய்வதும் இயலாது. உல கில் இருவகைத் தொந்தரவுகளே உள்ளன; நீக்கக் கூடிய தொந்த ரவுகள், நீக்கக்கூடாத தொந்தரவு கள். நீக்கக் கூடிய தொந்தரவு களை நீக்குக; நீக்கக் கூடாத தொந்தரவுகளை மறந்துவிடுக. அவசியமற்ற கவலையையும், அச் சத்தையும் சுமந்து கொண்டு திரி வது காரியத்தை முன்னினும் கேடாக்கிவிடும். இடுக்கண் மிக்க இடங்களில், "இதுவும் கடந்து போகக் கூடியதே" என்னும் 'நினைப்பு பலகாலும் பெருந்துணை ஆகும்.

—'நல்வழி'

ஒரு கதை

கிரேக்கர்கள் கேசியன், நிக்கொலாஸ் என்னும் இருவரைப் பற்றி ஒரு கதை சொல்வார்கள். கேசியன் தன் ஆத்தும நலத்தையே நாடி முயல்பவன்; விரதம் இருப்பவன்; உடலை வருத்துபவன். நிக் கொலாஸ் வேறு விதமானவன். நோயாளிகளைக் கவனிப்பவன்; ஒடுக்கப் பட்டவர்களின் தோழன்; குழந்தைகளை நேசிப்பவன்.

கேசியன் பரலோகத்திற்குப் போனவுடன், கடவுள், "கேசியனே, நீ வரும் வழியில் உலகில் யாதேனும் கண்டாயோ?" என்று கேட்டாராம். அவன், "சுமையாள் ஒருவன் சேற்றில் சிக்கிக் கொண்டிருக்கக் கண்டேன்" என்று சொன்னான். "அவனுக்கு உதவி செய்தாயா?" என்று அவர் கேட்டாராம். அவன் "இல்லை, ஆண்டவரே, நான் தேவரீர் திருமுன் நிற்க வேண்டியவனாதலின், என் வெள்ளுடை அழுக்காகிவிடும் என்று அஞ்சி, உதவி செய்யாமல் வந்தேன்" என்று சொன்னான். அதற்குப் பின், நிக்கொலாஸ் சேறு படிந்த உடை அணிந்தவனாய் வந்து நின்றான். கடவுள், "ஏன் இவ்வாறு அழுக்காய் இருக்கின்றாய்?" என்று கேட்டாராம். நிக்கொலாஸ், "ஏழைச் சுமையாள் ஒருவன் சேற்றில் சிக்கி வருந்தக் கண்டு, சேற்றில் இறங்கி, அவனுக்கு உதவி செய்தேன்" என்றான். இறைவன் நிக்கொலாஸைப் புகழ்ந்து, "கேசியனுக்கு ஒரு நாள் திருநாளாகக் கொண்டாடப்படும்; நிக்கொலாஸுக்கு ஆண்டில் நான்கு நாட்கள் திருநாட்களாகக் கொண்டாடப்படும்" என்று சொன்னாராம்.

தனித் தியானமும் தூய வாழ்க்கையும் மிக இன்றியமையாதனவாகும். ஆனால் அவை மட்டும் போதா. பிறருக்குத் தொண்டு செய்தலும் வேண்டும். ஏழை மக்கள் நிலையை உயர்த்த முயல்தல் வேண்டும். துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்வது மட்டும் போதாது; துயரத்தை ஒழிக்க முயல வேண்டும். துன்மார்க்கமும் தீமையும் ஒழிவதற்கு ஆவன எல்லாம் செய்ய வேண்டும்.

—'நல்வழி'

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.